Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 69 • 04.12.2016



யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



சமுர்த்தி தில்லாலங்கடிகள்



வடக்கில் எங்கெல்லாம் பேய்கள் இருக்கிறது?



## 'கலாசாரத்தை காக்கும் உடையணிவது யாழ் பெண்கள்தான்'

ஆச்சரியப்படும் ராதா, கார்த்திகா

# க்ளிக் பக்கம்



விடுப்பு பார்ப்பது மனிதர்களின் இயல்பு மட்டுமல்ல, நாய்களின் இயல்பும் போல.
என்னைபற்றி: நான் விவேகானந் விபுலானந். ஊடகவியலாளராக பணிபுரிந்து வருகிறேன்.



படம்: விபுலானந்
இடம்: யாழ்ப்பாணம்

குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk



**வேடிக்கையான நேரம்**

பேய் தகப்பா, இது ஒரு பெரிய மனுஷன் செய்யுற காரியமாடா..





**மொக்க போட நாங்க இருக்கோம்.**



சமைக்கறதுக்கு
எதுக்குடா
சென்னை அமிர்தால
சேர்ந்து படிக்கணும்?
கல்யாணம்
பண்ணிக்கிட்டாலே
போதும்;
எல்லாம் தானாகவே
கத்துக்கலாம்.






**நம்பி வாங்க சந்தோசமா போங்க**






**ஆணியே புடுங்க வேணாம்**






**Ravindran Pa**

காஸ்ரோவே எம்மை மன்னித்துவிடும், உமது 'கட் அவுட்' க்கு நாம் பால் ஊற்றிக் கொண்டிருப்பதற்காக !



**Senthooran Thiruchchenthooran**

கடவுள் இருக்கான் குமாரு என்றொரு படம் release ஆகியிருக்காம். மாவீரர்களின் சாபமா துரோகியின் கைது ? கனத்த இதயங்களில் குட்டி குட்டி நிம்மதிகள்.



**Karunaharamoorthy Ponniah**

கருணா மட்டுமல்ல....கூடவே மகிந்த ராஜபக்ஷ, , பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, ஞானசார தேரோ இவர்கள் எல்லோரையும் கைது செய்தாலும் ஆச்சரியமில்லை............
நல்லாட்சி அரசில் தமிழினத்துக்கு ஒரு நிரந்தரத்தீர்வு கிட்டினாலே ஆச்சரியம்..........!!!!



**ala Murugan**

தன் மனைவியின் பிறந்தநாளை மறந்த
கணவன் இரவு வெகுநேரம்
கழித்து வீடு திரும்பினான்.
மனைவி அவனிடம் என்னை 4 நாட்கள்
பார்க்காவிட்டால் என்ன செய்வீர்கள்
என்று கேட்டாள்.
உடனே கணவன் சந்தோஷத்தில்
அவனையறியாமல்
குதித்து எழுந்து ஆஹா அருமை என்றான்.
முதல் நாள்.
மனைவியை பார்க்கமுடியவில்லை.
இரண்டாம் நாள்.
அன்றும்
மனைவியை பார்க்கமுடியவில்லை.
முன்றாம் நாள்.
அன்றும்
மனைவியை பார்க்கமுடியவில்லை.
.
.
நான்காம் நாள்.
வீக்கம் சிறிது குறைந்ததால்
இடது கண்ணோரம்
மனைவி சிறிது மங்கலாக
தெரிந்தாள்..



**Sunir Sathya**

பெற்றோர் சொன்னதெல்லாம் நம் நன்மைக்கே என உணரும்போது தலைமுடி கொட்ட ஆரம்பிக்கிறது..



**Shanthaar Mjm**

உங்க அமெரிக்க விஸ்வாசத்துக்கு ஒரு அளவே இல்லையா??? ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அமைச்சர் இவர்களில் யாரும் பிடல் கஸ்ட்ரோவின் மரண சடங்கில் கலந்து கொள்ளவில்லை!!!



**Murukaiya Thamilselvan**

இலஞ்சம் அல்ல கவனிப்பாம்!
கடந்த வாரம் கிளிநொச்சியின் மேற்கு பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் வாழ்கின்ற ஏழை வீட்டுக்கு மின் இணைப்பு செய்ய சென்ற ஒப்பந்தகாரர்கள் தாங்கள் மூன்று பேர் வந்திருக்கின்றோம் எங்களை கவனிக்க வேண்டும் என்று பிடிவாதமாக நின்றுள்ளனர். மிகவும் வறிய நிலையில் வாழ்கின்ற அந்தக் குடும்பம் தற்போதே சுனாமிப்படையில் மின்சாரத்தை பெற விண்ணப்பித்துள்ளது. மின்சார சபை அதிகாரிகள் ஒப்பந்தகாரர்களிடம் மின் இணைப்பை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளனர். ஆனால் ஒப்பந்தகாரர்கள் குறித்த வீட்டுகார பையனிடம் மின்சார சபை ஆட்கள் சொன்னாலும் நாங்கள்தான் இணைப்பை வழங்குபவர்கள். எனவே எங்களை கவனிக்க வேண்டும் என்று பிடிவாதமாக நின்றுள்ளனர். ஆனால் வீட்டில் முந்நூறு ரூபாவை தவிர வேறு பணம் இல்லை. எனவே வீட்டுக்கார பையன் அயல் வீட்டுக்குச் சென்று கடன் கேட்டுள்ளான் அங்கும் பணம் இல்லை.தொடர்ந்து மற்றொரு அயல் வீட்டிற்கு சென்று ஆயிரம் ரூபாவை கடனாக வாங்கி அந்த மூன்று பேருக்கும் கொடுத்துள்ளான். இது இலஞ்சமில்லையாம் கவனிப்பாம்.
அப்ப பாருங்கோவன்



**எடக்கு முடக்கு நக்கலு நையாண்டி எகத்தாளம்**



# யார் இந்த சரத் சந்திரா?

ச. வி. கிருபாகரன்



கடந்த நவம்பர் மாதம் 23ம் திகதி, சிறிலங்காவின் செய்திகளை பார்வையிட்டவேளையில், சிறிலங்காவின் சிறப்பு அதிரடிப்படையின் இளைபாறிய மாவட்ட காவல்துறை அதிகாரியும், முன்னாள் ஜனதிபதி ராஜபக்சாவின் பாதுகாப்பு ஆலோசனை அதிகரியுமான கே. எல். எம். சரத்சந்திரா, அரச வாகனத்தை துஸ்பிரயோகம் செய்துள்ள காரணத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளதாக படித்தேன். இச் செய்தி எனக்கு ஓர் அதிர்ச்சி செய்தியாக காணப்படவில்லை. உண்மையை பேசுவதனால், சிறிலங்காவின் ஊடகங்களில், இவர் எதை எதற்காக எப்பொழுது துஸ்பிரயோகம் செய்துள்ளார் என்பதை குறிப்பிட தயங்கியுள்ளனர்.

ஆயுத போராட்டத்தின் ஆரம்ப சரித்திரத்தை ஒழுங்காக அறியாதவர்களிற்கு, கே. எல். எம். சரத்சந்திரா யார் என்பதை அறிந்திருக்க முடியாது. ஆயுத போராட்டத்திற்கு பல அடிப்படை காரணிகள் காணப்பட்ட பொழுதும், இவ் ஆயுத போராட்டத்தை தீவிரப்படுத்தவும், இவ் ஆயுத போராட்டத்தில் தமிழ் இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் இணைந்து செயற்பட வழி கோலியவர்களில் ஒருவரே இந்த சரத்சந்திரா. சிலர் இவ்விடயத்தை நன்மையாகவும் கருதலாம் ஆனால் இன்று ஆயிரக்கணக்கான மக்களில் கொலைக்கும், காணமல் போவதற்கும், சித்திரவதைகளிற்கும் வித்திட்டவர்களில் ஒருவரே சரத்சந்திரா.

கைதுசெய்யப்பட்டுள்ள சரத்சந்திரா, 1970ன் பிற்பகுதியில் யாழ் ஆனைக்கோட்டை காவல்துறை நிலையத்தின் பொறுப்பு அதிகரியாக இருந்த வேளையில் இவரை நன்கு அறிவேன். அவ்வேளையில் இவர் ஓர் சாதராண உதவி பொலிஸ் அதிகாரி. இவரது கொடுமைகள் துஸ்பிரயோகங்கள் என்பது இவரது நிலையத்தின் எல்லைகளுக்கு அப்பால், யாழ் முழுவதும் பரவியிருந்தது. உண்மையை பேசுவதனால், அவ்வேளையில் திரு வேலுப்பிள்ளை பிரபாகரனிற்கு மேலாக, சரத்சந்திராவையே பலர் அறிந்திருந்தனர் என்றால் அதற்கு இவரது கொடுமைகளே காரணம். இங்கு நான் எதையும் மிகைபடுத்தவில்லை.

கே. எல். எம். சரத்சந்திரா எப்படியாக சட்டத்தையும் ஒழுங்கையும் தனது கையில் எடுத்து, வன்முறைகளை மேற் கொண்டார் என்பதற்கு அவ்வேளையில் நடைபெற்ற சில சம்பவங்களை இங்கு தருகிறேன்.

இவரது காவல்துறை எல்லைக்குள் உள்ள ஓர் நூலகத்திலிருந்து நான்கு பாடசாலை மாணவர்கள் வீடு செல்வதற்கு வெளியில் வந்த வேளையில், இவர் சிவில் உடையில் வேறு இரு காவல்துறையினருடன், ஓர் தனியார் வாகனத்தில் அவ்விடத்திற்கு வந்து, அவ் நான்கு மாணவர்களையும் ஒரு காரணமுமின்றி, தனது குண்டாந் தடி முறிந்து சின்னாபின்னமாகும் வரை மோசமான முறையில் தாக்கினார். இச் சம்பவத்தை நூலகத்திலிருந்த எம்மில் சிலர் பார்த்து கொண்டிருந்தோம். இவ் நான்கு இளைஞர்களில் இருவர், சில வருடங்களின் பின்னர் இயற்கை மரணம் எய்தார்கள். என்னை பொறுத்தவரையில் அவர்கள் இருவரும் இயற்கை மரணம் எய்திருந்தாலும், அவர்கள் மிகவும் மோசமான முறையில் சரத்சந்திராவினால் தாக்கப்பட்டமையினால், அவர்களிற்கு சில உட்காயங்கள் ஏற்பட்டடிருக்கலாம்.

இன்னுமொரு சந்தர்பத்தில், இவர் ஓர் இளையவழங்கறிஞரின் காரியாலயபையனை, காரணமின்றி தாக்கிய காரணத்தினால், இச் சம்பவம் பற்றி, யாழ் காவல்துறை மேல் அதிகாரியிடம் அவ் வழங்கறிஞர் முறைபாடு செய்திருந்தார்.

சரத்சந்திரா ஆனைக்கோட்டை காவல் துறையில் கடமையாற்றிய வேளையில், பல தனியார் வாகனங்களை தனது தனிப்பட்ட தேவைகளிற்கு துஸ்பிரயோகம் செய்ததுடன், இவரது காவல்துறை நிலையத்திற்கு மிக அருகாமையில் வசித்து வந்த குற்றவியல் செயற்பாடுகள் நிறைந்த ஓர் ஆயுர்வேத வைத்தியாருடனேயே நெருங்கிய உறவை கொண்டிருந்தார். சரத்சந்திரா ஆனைக்கோட்டையிலிருந்து இடமாற்றம் பெற்று சென்ற சில காலத்திற்குள், இவ் வைத்தியர், தனது கையாட்களில் ஒருவரை கொலை செய்து, வயல்வெளியில் வீசியிருந்த காரணத்திற்காக, காவல்துறையின் ரகசிய பிரிவினரினால் கைது செய்பபட்டார். இவ் வைத்தியர், தடுப்பு காவலிலேயே சுகயீனம் காரணமாக மரணித்தார்.

1979ம் ஆண்டு யூலை மாதம் 13ம் திகதி, இவரது காவல்துறை பிரிவிற்கு உட்பட்ட நாவாலியில் 27வயதுடைய (இன்பம்) விஸ்வஜோதி, 29வயதுடைய (செல்வம்) செல்வரட்ணம் ஆகிய இரு இளைஞர்ககளும், காவல்துறையினரினால் விசாரணைக்கென அழைத்து செல்லபட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ள அவர்களது உடல்கள் பண்ணை பலத்திற்கு அருகமையில் கண்டெடுக்கப்பட்டது. இதே தினம் பரமேஸ்வரன், ராஜேஸ்வரன், ராஜகிளி, பாலேந்திரா ஆகிய நான்கு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டு காணமல் போயிருந்தனர். இவ் படுகொலைகள் பற்றி, சர்வதேச மன்னிப்புசபை தமது 1980ம் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கியுள்ளனர்.

இவ் படு கொலைகளிற்கும், காணமல் போவதற்கும், யாழில் நிலை கொண்டிருந்த பாதுகாப்பு படையை சேர்ந்தவர்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களில், முக்கியமானவர், ஆனைக்கோட்டை காவல்துறை நிலையத்தின் பொறுப்பதிகாரியான சரத்சந்திரா.

இக்கொலைகள், காணமல் போனோர் விடயத்தில் எந்த அரசாங்கமும் எவ்விதமான விசாரணையை இன்று வரை மேற்கொள்வில்லை. ஆனல் அன்று சாதாரண உதவி காவல்துறை அதிகாரியாககாணப்பட்ட இவர், அதிரடிப்படையின் முக்கிய மாவட்ட

தொடர்ச்சி 9-ம் பக்கம்

# மறுக்கும் தவராசா!

தீபம் வார இதழின் 11.09.2016 பிரசுரத்தில் 'புலியென்றார்கள் கடத்தி சென்று அடித்து கொன்றோம்' ஈ.பி.டி.பி முன்னாள் உறுப்பினரின் பகீர் வாக்குமூலம்' என்ற முன்பக்க தலைப்பிலும்இ 'கொலை கொலை கொலை ஈ.பி.டி.பி முன்னாள் உறுப்பினரின் பகீர் வாக்குமூலம்' என்ற உட்பக்க தலைப்பிலும் வெளியான (www.deepamnews.com) இணையத்திலும் வெளியானது) செய்திக்கட்டுரை தொடர்பான மறுப்பை, வடக்கு எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் 'மேற்குறிப்பிட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அதன் உள் அடக்கங்கள் ஈ.பி.டி.பிகட்சியின் முன்னாள் அங்கத்தவரென தெரிவிக்கப்பட்டுள்ள சுப்பையா பொன்னையா என்பவரால் வழங்கப்பட்ட செவ்வியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளதாக தெரிவித்து மேற் கூறப்பட்ட செய்தி அறிக்கையில் எனது பெயரை குறிப்பாக குறிப்பிட்டு பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"கட்சி உறுப்பினர்களின் பணத்தைக்கூட எதிர்க்கட்சி தலைவர் தவராசா மோசடி செய்தார். படகு, வலை பெற்றுத் தருவதாக எங்கள் 25 பேரை நீர்கொழும் பிற்கு அழைத்துச் சென்றார். எம்மை கையெழுத்து வைக்க வைத்து, அந்த பணத்தை எடுத்துக் கொண்டார். ஒவ்வொருவரின் பெயரிலும் 3 இலட்சத்துக்கும் அதிக பணம். இது நடந்து 1993/94 இல்"

இப் பிரசுரத்தின்படி நான் மோசடி நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்தேன் எனத் தெரிவிக்கப்படும் செய்தி பிரசுரமானது முற்றிலும் பொய்யாக புனையப்பட்டதும், எதுவித ஆதாரமுமற்றதும், உண்மைக்கு புறம்பானதும், எனது நற்பெயரிற்குக் களங்கம் விளைவிக்கும் தீய நோக்கத்துடன் செயற்பட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுமான செய்தி ஆகும். என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மேற்கூறிய வகையில் எனது பெயரை சம்மந்தப்படுத்தி எழுதப்பட்டுள்ள தங்களின் மேற்குறிப்பிட்ட செய்தி பிரசுரமானது எனது நற்பெயரிற்கும், சுய மரியாதைக்கும் மிகப்பெரிய அவமானத்தை ஏற்படுத்துவதற்காகவும், செயற்பாட்டு அரசியல்வாதியான என் மீது சேறு பூசுவதற்காகவும், பொதுமக்கள் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைத் தகர்ப்பதற்காகவும் தீய நோக்கத்துடன் செயற்பட்டு தங்களால் பிரசுரிக்கப்பட்டுள்ள ஓர் செய்திப் பிரசரமாக இதனை நான் கருதுகிறேன்' என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு: ஈ.பி.டி.பி முன்னாள் உறுப்பினரான சுப்பையா பொன்னையா என்பவரால்வெளியிடப்பட்ட தகவல்களில் தொகுப்பே அந்தசெய்திக்கட்டுரை. அதனை அந்த இதழில் தெளிவாக குறிப்பிட்டுமிருந்தோம். இந்த கட்டுரையால் சி.தவராசாவிற்கு ஏதேனும் அதிருப்திகள் ஏற்பட்டிருந்தால் அதற்காக வருத்தத்தையும் தெரிவித்து கொள்கிறோம்.

## அடையாள அட்டை கிடைக்காத மாணவர்கள்!

கா.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றவுள்ள மாணவர்கள் பாடசாலைகள் ஊடாக அடையாள அட்டையை எடுப்பதற்கு விண்ணப்பித்திருந்த போதும் இதுவரையில் அடையாள அட்டைகள் கிடைக்கப்பெறாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கயுள்ளனர்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தத்தமது பாடசாலைகள் ஊடாக தேசிய அடையாள அட்டைக்குவிண்ணப்பித்திருந்தனர். இவ்வாறு விண்ணபித்தவர்களில் பெரும்பாலானவர்கள் அடையாள அட்டைகளை பெற்றுவிட்டனர். எனினும், குறிப்பிட்ட தொகையான மாணவர்களிற்கு அடையாள அட்டைகள் இன்னும் கிடைக்கவில்லை.

சில பாடசாலை அதிபர்கள் அடையாள அட்டை இல்லாமல் மாணவர்கள் பரீட்சை எழுத முடியாதென்று அறிவித்திருப்பதாகவும், இதனால் இந்தமாதம் பரீட்சை எழுதவுள்ள தமது பிள்ளைகள் குழப்பமடைந்துள்ளதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். பரீட்சை ஆரம்பமாவதற்கு சில நாட்களே உள்ள நிலையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடியாக அக்கறையெடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நீரில்லாத நல்லிணக்கபுரம்!




தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கீரிமலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்கபுரம் வீடமைப்புத் திட்டத்தில் குடியமர்ந்துள்ள மக்களுக்கான குடிநீர் வசிதிகள்முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என அங்கு குடியமர்ந்துள்ள மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மீள்குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் இராணுவத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட கீரிமலை நல்லிணக்கபுரம் வீட்டுத் திட்டத்தில் 100 குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர்.

நல்லிணக்கபுரத்தில் அடிப்படை வசதிகள் முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக குடிநீர் பாரிய பிரச்சனையாகஇருப்பதாகமக்கள் கவலைதெரிவித்துள்ளனர். இது குறித்து சம்மந்தப்பட்ட பல்வேறு தரப்பினர்களுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியிருந்தும் இதுவரையில் ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மீள்குடியமர்த்தப்பட்ட பின்னரும் அடிப்படை பிரச்சனைகள் தொடர்வதால் முகாம்களில் இருப்பது போலவே தற்போதும் உணருகிறோம். ஆகவே கடந்த பல வருடங்களகப் பாதிக்கப்பட்டு வருகின்ற தமக்கான வசதி வாய்ப்புக்களை சம்மந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த தரப்பினர்கள் விரைவாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விட்டும் விலகாத இராணுவம்!

வலிகாமம் வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து 2000 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டிருந்தாலும் அதில் 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு தற்போதும் பாதுகாப்பு தரப்பினரின் வசமே இருப்பதாக வலி வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து குறிப்பிட்டளவிலான நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் கடற் பகுதிகள் எவையும்விடுவிக்கப்படவில்லைஎன்றும் குறிப்பிட்டுள்ள சஜீவன் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து படைகள் முழுமையாக வெளியேற வேண்டுமென்றும் கடற்பகுதிகளும் விடுவிக்கப்பட வேண்டுமன்றும் வலியுறுத்தியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் கடந்த வருடம் ஆட்சிக்கு வந்த பின்னர் வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த பிரதேசங்கள் பகுதிபகுதியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய சுமார் 20000 ஆயிரம் ஏக்கர் நிலப் பகுதி இதுவரையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

2000 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அதிலும் சுமார் 500 ஏக்கர் நிலப் பகுதி பாதுகாப்புதரப்பினர்வசமேதற்போதும்உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த அந்தப் பிரதேசங்களில் இராணுவம் மற்றும் பொலிஸ் நிலை கொண்டிருந்த பெரும்பாலான இடங்கள் இன்னமும் விடுவிக்கப்படாது தற்போதும் அவர்கள் அங்கு நிலை கொண்டிருக்கின்றனர். அதே போன்று கடற்பகுதிகளும் விடுவிக்கப்படாது படைகளின் வசமே இருக்கின்றது.

ஆகவே விடுவிக்கப்பட்ட நிலங்களிலிருந்து படைகள் வெளியேறுவதுடன் கடற்பகுதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். இவை நடக்குமிடத்தே அங்கு மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் மீளக் குடியமர்வதுடன் தமது தொழில் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.



## விக்கி கொடுத்த அலேர்ட்!

வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனின் பொறுப்பிலுள்ள அமைச்சின் கீழ் பணியாற்றும் அலுவலர்கள் உசார்படுத்தப்பட்டிருந்த சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது. பாராளுமன்ற அமர்வுகளில் முதலமைச்சரின் நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டால் அதற்கு உடனடியாக பதிலளிப்பதற்காகவே இந்த உசார்படுத்தல் செய்யப்பட்டிருந்ததாக பெயர் குறிப்பிட விரும்பாத முதலமைச்சர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சரின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரதும் விடுமுறைகள் கடந்த சனிக்கிழமை இரத்து செய்யப்பட்டு, அனைவரும் அலுவலகத்தில் கடமையிலிருக்க வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவசர தேவைகளின் நிமித்தம் வெளியில் செல்பவர்கள் தனது பொறுப்புக்களை இன்னொருவரிடம் ஒப்படைத்துவிட்டுத்தான் செல்ல வேண்டும்.பணி தொடர்பான எந்த கேள்வி,விபரத்திற்கும் உடனடியாக பதிலளிக்கதக்கதாக அலுவலர்கள் உசார்படுத்தப்பட்டிருந்தனர். பாராளுமன்றத்தில் நடக்கும்வரவு செலவுதிட்ட விவாதத்தின்போது ஏதாவது வினா எழுப்பப்பட்டால் அதற்கு துரிதகதியிலான பதில் வழங்கும் நோக்கத்துடனேயே இந்த உசார்படுத்தல் செய்யப்பட்டிருந்ததாகவும், முதலமைச்சர் அல்லது வடக்கு மாகாணசபை தொடர்பில் பாராளுமன்றத்தில் குற்றம்சுமத்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டதையடுத்தே இந்த முதலமைச்சர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## மகிந்தவுடன் இருந்த மலை விழுங்கிகள்!



கூட்டு எதிரணியின் பிரதானிகளில் ஒருவர் தினேஷ் குணவர்த்தன. மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிபீடமேற்ற கடுமையாக பிரயத்தனப்பட்டு கொண்டிருக்கிறார். அவரது பிரயத்தனத்தின் பின்னால் அரசியல் காரணங்கள் இல்லை, தனிப்பட்ட நலன்களே உள்ளன என தகவல் வெளியிட்டுள்ளது சிங்கள ஊடகமொன்று. மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அவர் பெருந்தொகை பணத்தை விழுங்கியுள்ளதாகவும் அந்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் சட்டவிரோத கட்டிட அனுமதியின் மூலம் இந்த பணம் ஈட்டப்பட்டதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அந்த தகவலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது கனடா மற்றும் இலங்கை பிரஜாவுரிமை பெற்றுள்ள வெள்ளவத்தையில் வசிக்கும் தமிழர் ஒருவர் அதிசொகுசு மாடிக்கட்டிடம் அமைக்க நகர அபிவிருத்தி அமைச்சிற்கு விண்ணப்பித்துள்ளார். ஏழு மாடி கட்டிடம் அமைக்க அவருக்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால் அவர் ஒன்பது மாடி கட்டிடம் அமைத்தார். தினேசுடன் அவருக்கு இருந்த உறவை பயன்படுத்தியே விதியை மீறினார்.

அங்கு அறுபது வீடுகளை அமைத்து ஒரு வீட்டை 16 மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளார். 2010 இல் கோத்தபாயவிடம் நகர அபிவிருத்தி அமைச்சு சென்றதும், இதுபற்றிய மீள்விசாரணை நடத்தப்பட்டது. அந்த கட்டிடத்தை அமைக்க புலிகள் நிதி வழங்கியதான சந்தேகத்தில் கட்டிடத்தை நிர்மாணித்த தமிழர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். சட்ட விரோத கட்டிடத்திற்காக 63.6 மில்லியன் தண்டப்பணம் விதிக்கப்பட்டபோதும், தினேசின் . உதவியுடன் 20 மில்லியனாக குறைத்து செலுத்தியதாக அந்த தமிழர் பொலிசாரிடம் வாக்குமூலமளித்துள்ளார். பொலிசார் நகர அபிவிருத்திசபையின் கணக்கை பரிசோதித்தபோ தண்டப்பணம் செலுத்தப்பட்டிருக்காததை கண்டறிந்தனர். அதற்கு பதிலாக வேறொரு பெண்ணின் கணக்கிற்கு பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்காக வாக்குமூலம் பதிவுசெய்ய தினேசை பலமுறை அழைத்தபோதும் மகிந்தவுடனான நெருக்கத்தை பயன்படுத்தி அதனை புறக்கணித்தார். பின்னர் அந்த தமிழர் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு மேலும் 20 மில்லியன் செலுத்தி பிரச்சனையை முடிவிற்கு கொண்டு வந்துள்ளார் என அந்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களிற்கான ஆவணங்கள் தம்மிடம் இருப்பதாக அந்த இணையத்தளம் கூறியுள்ளபோதும், இதுவரை அவற்றை வெளியிடவில்லையென்பதையும் குறிப்பிட வேண்டும்.

# துயிலுமில்லங்களை என்ன செய்யப்போகிறோம்?

தமிழர்களிடம் இப்பொழுது மாவீரர் துயிலுமில்லங்கள் திருப்பி தரப்பட்டுள்ளன. அவற்றை தமிழர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? இது அர்த்தம் செறிந்த ஒரு விவகாரம்.

ஜே.ஆர் ஜெயவர்த்தன "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்றார். ஜே.ஆர் ஒரு சாணக்கிய அரசியல்வாதி. இப்போது ஜே.ஆரின் வாரிசின் காலம். ரணில் விக்கிரமசிங்கவும் சாணக்கியன்தான். அவர் செயல்களால் பேசுபவர். ஜே.ஆர் பேசியதற்கும் ரணில் பேசியுள்ளதற்குமிடையில் பெரிய அர்த்த வித்தியாசங்கள் கிடையாது. தமிழர்களிடம் துயிலுமில்லங்களை தந்து, ஜே.ஆர் அன்று சொன்னதையே சொல்லியுள்ளார்.

துயிலுமில்லங்களை விதைநிலங்களாக்க போகிறீர்களா? இல்லையா? என கேட்கிறார். ரணிலின் கேள்வியின் அர்த்தம் தனது அரசின் சமாதான முயற்சியை முறித்து துயிலுமில்லத்தின் பரப்பை விஸ்தரிக்கப் போகிறீர்களா அல்லது மாவீரர்தினத்தை அனுட்டித்தபடி இப்பொழுதுள்ள இலங்கை அரச நிர்வாகத்தை ஏற்றுவாழுப் போகிறீர்களா என்பது. இன்னும் விளக்கமாக சொன்னால், வடக்கு கிழக்கில் நிகழும் சிங்கள குடியேற்றங்கள், பௌத்த விகாரையமைப்புகளிற்கு ஈடாக மாவீரர் துயிலுமில்லங்கள் தரப்பட்டுள்ளன.

துயிலுமில்லங்கள் தமிழர்களின் பெருமைமிகு வீரத்தின் அடையாளம். அதில் சந்தேகமேயில்லை. நமக்காக வீழ்ந்தவர்களின் நினைவிடங்களை பேணிக்காக்கிறோம் என்ற கடைசி ஆறுதலாவது நமக்கு எஞ்ச வேண்டும். மாவீரர்தினத்தில், மாவீரர் துயிலுமில்லத்தில் அரசியல் செய்ய, விமர்சிக்க யாரும் முற்படக்கூடாது. அது தமிழர்களின் ஆத்மார்த்த நாட்களிலொன்றாக இருக்கட்டும்.

இதில் கவனிக்க வேண்டிய விடயம், துயிலுமில்லங்களை விஸ்தரிக்காமலிருப்பதென்பது இலங்கையின் தற்போதைய அரசியல், நிர்வாக முறைமையை அப்படியே ஏற்றுக்கொள்வதென்பதுமல்ல. நாங்கள் துயிலுமில்லங்களை விஸ்தரிக்காத ஒரு போராட்ட வடிவத்தை கண்டடைய வேண்டும். ஏனெனில், சனத்தொகையில் சிறிய தமிழினம் தனது சக்திக்கு மிஞ்சிய உயிர்விலையை கொடுத்து விட்டது. இனியும் உயிர்விலை கொடுக்க வேண்டாம்.

சுதந்திரத்திற்கு பின்னான தமிழ் ஜனநாயக அரசியல் என்பது ஒரேவிதமான போக்கையே கடைப்பிடித்தது. இரத்த திலகமிடுபவர்கள், தியாகிகள், துரோகிகள் அதற்கு தேவையாக இருந்தனர். இந்தவகைக்குள் அந்த தலைவர்கள், அவர்கள் குடும்பத்தினர் ஒருபோதும் இருந்ததில்லையென்பதையும் குறித்து வைத்துகொள்ளுங்கள். ஆனால், ஆயுதப்போராட்ட காலத்தில் அது தலைகீழானது. அங்கு தலைவர்கள்தான் முன்னுதாரணமானவர்களாக இருந்தார்கள். தமது எல்லா செயலுக்காக விலையையும் தாமே கொடுப்போம் என்ற அற உறுதி அவர்களிடம் இருந்தது. அப்படியானவர்களையே தமிழர்கள் மாபெரும் தலைவர்களாக ஏற்றுக்கொண்டனர்

ஆயுதப்போராட்ட முடிவின் பின் மீண்டும் முன்னிலை பெற்றுள்ள ஜனநாயக அரசியல் தனது பழைய முகத்தையே மீண்டும் காண்பிக்கிறது. நமது தலைவர்கள் மாவீரர்தினம் அனுட்டிப்பதில் அப்படியும் சொல்ல முடியாது, மாவீரர்தினத்திலன்று துயிலுமில்லங்களில் தீபம் ஏற்றி படங்களை வெளியிடுவதில் காட்டிய அவசரத்தையும், தீவிரத்தையும் கடந்த ஏழாண்டுகளில் எந்த விடயத்தில் காண்பித்தனர்?

முள்ளிவாய்க்கால் நினைவுதினம், மாவீரர்தினம் போன்ற மக்களின் உணர்திறன்மிக்க முனைகளை தீண்டுவதில் மட்டுமே இவர்களின் கவனம் உள்ளது. மக்களின் உரிமைப்போராட்டத்தில் மக்கள் பிரதிநிதி, பேச்சு மட்டுமே பங்கு என்பதை போன்ற தவறான அபிப்பிராயம் உருவாக்கப்பட்டுவிட்டது. அதனை உருவாக்கியதும், தமிழ் ஜனநாயக அரசியல்தான். அது மாற்றமின்றி இன்றுவரை தொடர்கிறது. மாவீரர்துயிலுமில்லங்கள் விஸ்தரிக்கப்படுவதை உள்ளூர விரும்பும் அரசியல் அது.

மாவீரர்களிற்கு அஞ்சலித்தால் சிறையிலிருக்க வேண்டுமென்றால் அதற்கும் தயார் என்று மக்கள் பிரதிநிதிகள் வீரவசனங்களும் பேசினார்கள். அப்படியானால் இவர்கள்அனைவரும் கடந்த ஏழாண்டுகளில் எங்கிருந்தார்கள்? மகிந்த ராஜபக்ச அஞ்சலிக்க அனுமதிக்கமாட்டார், அது இராணுவ ஆட்சியென மக்கள் பிரதிநிதிகள் சமாதானம் சொல்வார்களானால், பாதுகாப்பான சூழலில் ரெடிமேட் புரட்சியா நீங்கள் செய்ய விரும்புவது? பாதுகாப்பான, வசதியான சூழலில் செய்யப்படுவதெதுவும் புரட்சி கிடையாது.

மக்களை செயற்பாட்டாளர்களாகவும், மக்கள் பிரதிநிதிகள் அறுவடையாளர்களாகவும் இருக்கும் விசித்திர போக்கு ஈழத்தமிழ் சமூகத்தில்தான் உள்ளது. இதுமாற வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் செயற்பாட்டாளர்களாகவும், மக்கள் அறுவடையாளர்களாகவும் மாற வேண்டும். துயிலுமில்லங்கள் விஸ்தரிக்கப்படும் விதைநிலங்களென்றால், அங்கே மக்கள் பிரதிநிதிகள் மட்டுமே விதைக்கப்படட்டும்.

இதன் அர்த்தம் துயிலுமில்லங்களை கொச்சைப்படுத்துவதல்ல. அது தமிழர்களின் பெருமைமிகு அடையாளம். ஒரு பெருமைமிகு காலத்தின் பொக்கிசமாக போற்றிப் பேணப்பட வேண்டியவை துயிலுமில்லங்கள்.

அடுத்த தலைமுறையிடம் துயிலுமில்லங்களை விதைநிலங்களாக் கொடுக்கப் போகிறோமா? அல்லது தமிழர்களின் வீரத்தின் பெருமைமிகு அடையாளங்களாக கொடுக்கப் போகிறோமா?


**தீபம்**

197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562

சந்தா : subs@deepam.lk ☎ 0768255566

விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567

செய்திகளுக்கு : news@deepamnews.com



பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

0768255562, editor@deepam.lk


# சொன்னார்கள்



**பிமல் ரத்னாயக்கா**
**– எம்.பி, ஜே.வி.பி**

ராஜபக்சவின் ஆட்சியில் வெளிவிவகார அமைச்சில் பணிபுரிந்த அதிகாரிகள் ஜனவரி 8ம் திகதி ஜனாதிபதி செயலகத்தில், ராஜபக்சவுடன் இருந்துள்ளனர். அவர்களிற்கு அங்கு என்ன வேலை?. வெளிவிவகார அமைச்சில் பணிபுரிந்த பெண் அதிகாரிகள் பலர் வெளிநாடுகளிற்கு சென்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்து நீலப்படம் பார்த்துள்ளனர். இதற்கெல்லாம் செலவானது மக்களின் வரிப்பணம்தான்.



**உதய கம்மன்பில**
**– எம்.பி, கூட்டு எதிரணி**

தெற்கில் நடக்கும் விடயங்களில் கடுமையாக நடந்து கொள்ளும் பொலிஸ்மா அதிபர் வடக்கில் ஏதாவது நடந்தால் மௌனமாக இருக்கிறார். பொலிஸ் மா அதிபர் சட்டத்தை அமுல்படுத்தும் போது முழு நாட்டிற்கும் ஒரே மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். ஆனால் வடக்கு விடயங்களில் மௌனமாக இருப்பதை வைத்து பார்க்கும்போது, வடக்கில் தமிழீழம் அமைக்கும் பணி நிறைவடைந்துவிட்டது, அங்கு பொலிஸ்மா அதிபரின் ஆளுகை அங்கு இல்லையென்ற சந்தேகத்தை எழுப்புகிறது.



**இரா.சம்பந்தன்**
**– எதிர்க்கட்சி தலைவர்**

முன்னைய ஆட்சியாளர்களுடன் நாம் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன. நாம் ஒரு கோரிக்கையை வைத்தோம். அதனை அவர்கள் ஏற்கவில்லை. அதனால்தான் பின்னடைவுகள் வந்தன. மகிந்த ராஜபக்ச என்னை நேரடியாக சந்தித்து, பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வந்து கலந்துரையாடும்படி கேட்டார். நான் சொன்னேன் எங்களுக்கும் உங்களுக்குமிடையில் இணக்கம் எட்டப்படாதநிலையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வந்து பலனில்லை என.



**சி.வி.கே.சிவஞானம்**
**– வடக்கு அவைத்தலைவர்**


கடந்த சில காலமாக கட்சி முரண்பாடு தோன்றியிருப்பதை மறுக்க முடியாது. அதை இல்லையென்று சொல்லிக்கொண்டிருப்பது பொய். தமிழரசுக்கட்சியை குற்றம் சொல்லும் மனப்பாங்கு ஏனைய கட்சிகளிடம் வளர்ந்துவிட்டது. கடந்த பிரதி அவைத்தலைவர் தேர்வில் அது வெளிப்படையாக தெரிந்தது. தமிழரசுக்கட்சி பெரும்பான்மை பலத்துடன் உள்ளதால், பெரும்பான்மை பொறுப்பும் இருக்க வேண்டும். எங்கள் கட்சியில் ஓரிருவர் தவிர மற்றைவர்கள் பொறுப்பாகத்தான் நடந்து கொள்கின்றனர்.


தீபம் வாரஇதழில் முழுநேர தட்டச்சாளர் (பெண்கள்) தேவை. உடன் தொடர்புகொள்ளுங்கள். அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும். 0768255562.



எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

editor@deepam.lk



# 'நகைக்கடைகாரனிற்கு முத்திரை... பிச்சைக்காரனிற்கு வெட்டு'

## அதிரவைக்கும் சமுர்த்தி குழறுபடிகள்

பி.சியா

யுத்ததால் பாதிக்கப்பட்ட, வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென்று பல திட்டங்கள் அரசால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அரசு மட்டுமல்லாமல், தன்னார்வ அமைப்புக்கள், பொதுஅமைப்புக்கள் கூட சில உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன.

இந்த உதவிகள் சரியாக சென்றடைகிறதா என்பது மிகப்பெரிய கேள்வி. இதில் முக்கியமானது சமுர்த்தி. வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே சமுர்த்தி திட்டம் அறிமுகமானது. ஆனால் இன்று?

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில் நடந்ததை போல அரசியல் காரணிகள் என பலதும் சேர, சமுர்த்தி என்பது பெரும் சிக்கலான விவகாரமாக உருவெடுத்துள்ளது.

கிராமங்களில் அன்றாட வாழ்விற்கேசிரமப்படுபவர்கள் ஏராளம்பேர் இருக்க, வசதியானவர்கள் பலர் சமுர்த்தி உதவியை பெற்றுக்கொள்கிறார்கள். இந்த கட்டுரைக்காக கிராமங்கள் பலவற்றிற்கு சென்றபோது, கிடைத்த தகவல்களும், கண்டகாட்சிகளும் அதிர்ச்சியானவை. ஒருவேளை, இரண்டுவேளை உணவுக்காக அல்லாடுபவர்கள், குடிசைவீடுகளில் வாழும் பலர் சமுர்த்தி உதவியே கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். அதைவிட பேரதிர்ச்சி தருவது, சமுர்த்தி அதிகாரியொருவர் சொன்ன தகவல். 'சமுர்த்தி திட்டம் கணிசமாக தடம்மாறி விட்டது. சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பக்கச்சார்பு நடவடிக்கைதான் காரணம். எனக்கு தெரிய, நகைக்கடை உரிமையாளர் ஒருவர் கூட சமுர்த்தி உதவி பெறுகிறார். இதையெல்லாம் சீராக்குவது சிரமம்' என்பது அவரது வாக்குமூலம்.

சமுர்த்தி திட்டத்திற்குள் எப்படியான சீரழிவு நுழைந்துள்ளதென்பதற்கு இந்த வாக்குமூலம் உதாரணம். இந்த சீரழிவை அடையாளம் காண அதிகாரிகளின் இப்படியான வாக்குமூலங்களிற்காக காத்திருக்கத் தேவையில்லை. ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு சமுர்த்தி பிரிவிலும் இதற்கான உதாரணங்கள் உள்ளன. தனது பிரிவில் தேவையுடையவர்களை சரியாக அடையாளம்காணும்சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், பெரும்பாலான பிரதேசங்களில் காணப்படும் சீரழிவு ஒட்டுமொத்த சமுர்த்தியையே கேள்விக்குள்ளாக்குகிறது.

சமுர்த்தி திட்டம் என்பது வறுமைப்பட்ட, அரச தொழில் புரியாத, பிள்ளைகள் வெளிநாட்டில் இல்லாத, பிள்ளைகள் வேலையற்ற, அன்றாடம் சீவிக்கவே கஸ்ரப்படும், மற்றும் உடல் அங்கவீனம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக பரிந்துரை செய்யப்பட்ட திட்டமாகும். ஆனால் நடப்பது?

யாழ் புறநகரில் உள்ள ஒரு குடும்பத் தலைவியுடன் பேசினோம். அவரது கணவர் சொந்தமாக தொழில் செய்கிறார். சொந்தவீடு, காணி உள்ளது. வன்னியில் விவசாய காணிகள் உள்ளன. அந்த பெண்மணியின் சகோதரர்கள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். அவர் சமுர்த்தி முத்திரையை காண்பித்தார்.

எமது அதிர்ச்சியை நீடிக்கவிடாமல் அவரே விளக்கமும் சொன்னார். 'சமுர்த்தி தம்பி வரேக்க வீட்டுகதவை பூட்டிப்போடுவன். உள்ளுக்கு இருக்கிற பிரிட்ஜ், வோசிங் மெஷினையெல்லாம் சமுர்த்தி தம்பி கண்டால் பிரச்சனைதானே' என்றார்.


இன்னொரு கிராமத்தில் ஒரு ஓலைக் கொட்டிலில் நான்கு பெண்பிள்ளைகள் உள்ளிட்ட ஐந்து பிள்ளைகளுடன் பெரியதொரு குடும்பம். மூன்றுவேளை உணவு அங்கு கிடைக்காதென்பது நிச்சயம். ஆனால் அவர்களிற்கு சமுர்த்தி கிடையாது. அவர்களின் வீட்டுக்கு எதிரேயுள்ள குடும்பத்திற்கு சமுர்த்தி முத்திரையுண்டு. அந்தக்குடும்பத்தின் மாத வருமானம் 50,000 ரூபாய்க்கும் அதிகம்!

இது மேலோட்டமான உதாரணங்கள். இப்படித்தான் பெரும்பாலான கிராமங்களில் நிலை. சமுர்த்தி அலுவலர்களிற்கும் பொறுப்பில்லை அதை வாங்குபவர்களிற்கும் மனச்சாட்சியில்லை.

சமுர்த்தி பயனாளிகளை எப்படி தேர்வு

### புதிய சமுர்த்தி நடைமுறை

சமுர்த்தி பயனாளிகளை சரியான முறையில் தெரிவு செய்வதற்காக இந்த வருடம் ஒரு படிவம் இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டது. பயனாளி உண்மையில் நிவாரணம் தேவையானவரா என்பதை வலய முகாமையாளர், தலைமையக முகாமையாளர், பிரதேச செயலர் ஆகியோர் அந்த படிவத்தில் உறுதிசெய்பவர்களிற்கே வரும் ஆண்டு (2017) ஜனவரியில் இருந்து சமுர்த்தி கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. படிவத்தை உறுதி செய்ய வேண்டிய மூவரும் ஒவ்வொரு பயனாளியின் வீட்டுக்கும் செல்ல வேண்டுமா அல்லது சமுர்த்தி அலுவலர் மட்டும் பயனாளியின் வீட்டுக்கு செல்ல வேண்டுமா என்பதை அந்தந்த பகுதி பிரதேசசெயலரே தீர்மானிப்பார். சமுர்த்தி அலுவலர் மட்டும் வீட்டுக்கு சென்று அந்த படிவத்தை நிரப்பினால், உறுதி செய்ய வேண்டிய மூவரும் விபரங்களை பார்த்து பயனாளியை தீர்மானிப்பார்கள். அல்லது உறுதிசெய்ய வேண்டிய மூவருமே வீடுகளுக்கு சென்று பயனாளிகளை தீர்மானிப்பார்கள். பிரதேச செயலரின் திருப்தி முக்கியமானதாக ஏன் அமைக்கப்பட்டதெனில் சமுர்த்தி பயனாளி தேர்வில் அதிகபட்ச பக்கசார்பின்மையை உறுதிப்படுத்த. பிரதேசசெயலர் எவ்வளவிற்கெவ்வளவு பொறுப்புணர்ச்சிமிக்கவரோ அவ்வளவிற்கவ்வளவு சரியான பயனாளிகள் தேர்வுசெய்யப்படுவார்கள்.




### நடப்பதுதான் என்ன?

நாம் சென்ற பல கிராமங்களில் இந்த விதிமுறைப்படி படிவம் நிரப்பப்படவேயில்லை. வலய முகாமையாளர், தலைமையக முகாமையாளர், பிரதேச செயலர் ஆகியோர் வீடுகளிற்கு செல்லவில்லை. சரி, சமுர்த்தி அலுவலர்களாவது வீடுகளிற்கு சென்றாரா என்றால் அதுவும் இல்லை. ஒரு பகுதி சமுர்த்தி அலுவலர்கள் பயனாளிகளை தமது அலுவலகத்திற்கு அழைத்து படிவத்தை நிரப்பியுள்ளனர். இன்னொரு பகுதியினர், கிராமங்களில் குறிப்பிட்ட வீட்டில் அனைவரையும் ஒன்றுகூட்டி படிவத்தை நிரப்பியுள்ளனர்.

### சில பரிந்துரைகள்

- ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள சமுர்த்தி பயனாளிகளை உறுதி செய்துகொள்ள நேரடியாக சென்று பார்வையிடும் குழு அவசியம்.
- பிழையான பயனாளிகளை தேர்வு செய்யும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.
- பயனாளி தேர்வு தொடர்பான தெளிவான நடைமுறை வரையறுக்கப்பட வேண்டும். தற்போதுள்ளதை போல ஒவ்வொரு பிரதேசத்திலும் பயனாளி தேர்வு நடந்தால் குழப்பங்கள் ஏற்படலாம். பயனாளிகளை தேர்வுசெய்யும் குழு மாவட்ட, மாகாண மட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- குறுகிய காலத்திற்கொருமுறை பயனாளிகள் பரிசோதிக்கப்பட்டு தேவையற்றவர்களை நீக்கி, புதியவர்களை சேர்த்துகொள்ள வேண்டும். இதனை கையாள குழுவொன்று அமைக்கலாம்.
- கடந்தகாலத்தில் அரசியல் செல்வாக்கால் சமுர்த்தி முத்திரை பெற்றவர்கள் கண்டறியப்பட வேண்டும். அவர்களிற்கு சமுர்த்தி முத்திரை வழங்கிய உத்தியோகத்தர்கள் நீதி விசாரணைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.
- பயனாளிகளை அடையாளம் காணும்போது 'மாத வருமானம் என்ன' என பயனாளியை அழைத்து விசாரித்து அறிந்து கொள்கிறார்கள். இந்தமுறையே தவறு. மாதவருமானத்தை சரியான ஆவணங்கள் மூலம் கண்டறிய வேண்டும்.



**ஈஸ்வரி**
சமூக ஆர்வலர்

**ச**முர்த்தி முத்திரை சீராக சென்றடைய வேண்டும் என்றால், சமுர்த்தி கட்டுப்பாட்டு சபை தலைவர்கள் வருடாவருடம் மாற்றப்பட வேண்டும். அவர்களை தெரிவு செய்யும் பொறுப்பும் பயனாளிகளிடம்தான் இருக்க வேண்டுமே தவிர சமுர்த்தி உத்தியோகதரோ அல்லது கிராம உத்தியோகதரிடமோ இருக்கலாகாது. இது கூட சமுர்த்தி முத்திரை சரியான பயனாளிகளுக்கு கிடைக்காமைக்கு காரணமாகின்றது. கட்டுப்பாட்டுசபை தலைவர்கள் தெரிவு செய்பவர்களுக்கே முத்திரை முதலிடம். அதன் பின்னர்தான் ஏனையவர்களுக்கு என்ற நிலை எல்லா கிராமங்களிலும் இருந்து வருகின்றது. இந்தநிலை மாறும் பொழுதுதான் சமுர்த்தி முத்திரை சரியான பயனாளிகளுக்கு சென்றடையும். அதேபோன்று சமுர்த்தி உத்தியோகதர்கள் தமது கிராமத்தின் ஒவ்வொரு வீட்டையும் நேரடியாக சென்று பார்வையிடுவதை மாதத்தில் அல்லது வருடத்திற்கு ஒரு தடவையாவது வழக்கமாக வைத்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான வறுமைப்பட்ட பயனாளிகள் யார் என்பது தெரியவரும். அடுத்தவர்கள் சொல்வதையும், பயனாளி சொல்வதையும் கேட்டு முத்திரை போட்டு கொடுப்பது நீதி அற்ற செயலாகும்.



**கே.மகேஸ்வரன்**
சமுர்த்தி ஆணையாளர்
யாழ் மாவட்டம்

**ச**முர்த்தியில் இந்த பிரச்சினை உள்ளதுதான். பிரதேச செயலகங்கள்தான் இதனை கவனித்து செய்ய வேண்டும். இது உள் அணைவுகளால் வரும் விளைவு. கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களின் அல்லது பிரதேச செயலகங்களின் அரச செல்வாக்குகள் என்பவற்றை பயன்படுத்தி சலுகைகளை பெற்று கொள்பவர்கள் உள்ளனர். அவர்களால்தான் உண்மையான பயனாளிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனை மனிதத் தன்மையுடன் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். சமுர்த்தி முத்திரை வரையறுக்கப்பட்டது. அதனை உரிய பயனாளிகளுக்கு கொண்டு சேர்ப்பது பிரதேச செயலகங்களின் கடமை. இந்த பிரச்சனையை சீர்ப்படுத்துவதற்காகத்தான் இப்பொழுது எல்லா பிரதேசங்களுக்கும் ஒரு படிவம் கொடுத்துள்ளோம். அதனை சரியாக நிரப்ப வேண்டும். பொய் கூறி நிரப்பினால் சட்டநடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டி வரலாம். வலய முகாமையாளர், தலைமையக முகாமையாளர், பிரதேச செயலாளர் ஆகிய மூவரின் தலைமையில்தான் இடம் பெறும். ஆகையால் மக்கள் அந்த படிவத்தை சரியாக நிரப்பியிருக்க வேண்டும். அந்த படிவத்தின் ஊடாக, சரியான பயனாளிகளை தேர்வு செய்து தை மாதத்தில் இருந்து சமுர்த்தி வழங்கப்படும். ஏனையவர்களுக்கு வெட்டப்படும்.

*செய்வதென்பதில் தெளிவான நடைமுறையில்லை. சீரழிவிற்கு இதுவும் ஒரு காரணம். கணவனை இழந்த, தொழிலற்ற ஒருவர் சமுர்த்தி பெறலாம். ஆனால், சில சமயங்களில் அந்தப்பெண் வசதியானவராக இருப்பார். வெளிநாட்டில் இருக்கும் சகோதரர்கள் உதவுவார்கள். கணவனால் அதிகம் சம்பாதிக்க முடியாத இன்னொரு குடும்பத்தின் நிலை மிக மோசமாக இருக்கும். இரண்டில் யாரை சமுர்த்தி பயனாளியாக தெரிவு செய்வது? முதலாவது பெண்ணைத்தான் தெரிவு செய்வார்கள். இதுதான் சிக்கலின் ஆரம்பமும்.*

*இந்த கட்டுரைக்காக இன்னொரு பெண்ணை சந்தித்தோம். மிகச்சிறு வயதில் திருமணம் முடித்து கணவனை பிரிந்தவர். அழகான பெண். தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறார். பகட்டாக உடை அணிவார். கணவனை பிரிந்தவர் என்ற அடிப்படையில் அவர் சமுர்த்தி வரையறைக்கு உட்பட்டவர்தான். ஆனால் அவரது சகோதரிகள் வெளிநாட்டில் வதிவதால் அவர் மிகவசதியான வாழ்க்கையை வாழ்கிறார். இரண்டு மூன்றுமுறை பேசி நெருக்கமான பின்னர் இன்னொரு தகவலை சொன்னார். அவரும் வெளிநாட்டில் வதியும் இன்னொருவரும் மனமொத்து வாழ்கிறார்கள். நாம் அவருடன் பேசிக்கொண்டிருந்த போதே சமுர்த்தி அலுவலர் ஏதோ அலுவலாக தனது அலுவலகத்திற்கு வருமாறு தொலைபேசியில் அழைத்தார்!*

*முன்னைய மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் அதிகம் சீரழிக்கப்பட்;ட துறைகளில் சமுர்த்தியும் ஒன்று. அரசியல் கூட்டங்களை நிரப்ப சமுர்த்தி பயனாளிகள் அழைத்து செல்லப்பட்டனர். கூட்டத்திற்கு வராதவர்களிற்கு சமுர்த்தி உதவி கிடைக்காதென உத்தியோகத்தர் வெளிப்படையாக மிரட்டுவார் என்றால், அந்தநுறை எப்படி துஷபிரயோகம் செய்யப்பட்டிருக்கும்?*

*மகிந்தவின் காலத்தில் அரசியல் செல்வாக்கினடிப்படையில் ஒருதொகை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.*

*சமுர்த்தி தொடர்பான தகவல் திரட்டுவதற்காக நாம் சென்ற பெரும்பாலான இடங்களில் சமுர்த்தி தொடர்பான அதிருப்தியுடன் ஏராளம் மக்கள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. முறையற்ற சமுர்த்திவழங்கல் பற்றிய ஏராளம் தகவல்களை வெளியிடுகிறார்கள். வறுமை, கல்வியறிவுகுறைவு, அதிகாரிகளை தங்கியிருத்தல் உள்ளிட்ட பல காரணங்களால் நியாயம் கேட்டு குரலெழுப்பும் வல்லமையற்ற எளிய மக்கள் மீது நிகழ்த்தப்படும் மாபெரும் அநீதி இதுவரை கண்டுகொள்ளப்படாமல் இருப்பது பெருந்துயரமே.*


*'இரண்டு வருடமாக சமுர்த்திக்கு அலையிறன். பதிந்து கொடுத்தும் முத்திரை வரவில்லை. எனக்கு நாலு பிள்ளைகள். கணவர் மீன்பிடி தொழில் செய்கிறார். சொந்த படகுகூட கிடையாது. பெண்பிள்ளைகளை வைத்துக்கொண்டு, வயதானவரின் உழைப்பில் எப்படி வாழுறது? சுய தொழில் உதவிகூட சமுர்த்தியால்வழங்கப்படவில்லை' என்கிறார் பொன்னாலை பாண்டவத்தையை சேர்ந்த ரோசாமலர்.*

*'இரண்டு வருடமாக புதியவர்களை சமுர்த்தி திட்டத்தில் இணைக்க முடியவில்லை. அதற்கு காரணம், புதிய முத்திரைகள் அனுப்பப்படவில்லை. யாருடைய பெயரை வெட்டிவிட்டு புதியவர்களிற்கு கொடுப்பது' என்பது சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கேள்வி.*

*சமுர்த்தி தொடர்பான அத்தனை குற்றச்சாட்டும் உத்தியோகத்தர்களின் நடவடிக்கையால் எழுந்தவை. அவற்றை சீராக்குவதெனில், உத்தியோகதர்கள் சரியாக நடக்க வேண்டும். பக்கச்சார்பான, முகம் பார்த்து செயற்படும் உத்தியோகத்தர்கள் இருக்கும் வரை பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும்.*

**இலங்கையின் அரசகரும மொழியாக தமிழ் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் அரச கொலை மொழியாகவே உள்ளதுதான் வேதனையான நிலவரம்.**

படங்கள்; திலெக்ஸ் ரெட்ணம்
































# அறம் செய்ய விரும்பு

நம்மாழ்வார்

இம்முறையும் மாவீரர்தினம் கடந்து சென்றுள்ளது. ஒரு திடீர் பேரெழுச்சியாக வடக்கு கிழக்கில் மாவீரர்தினம் அனுட்டிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலையென எல்லா மாவட்டங்களிலும் உணர்வுபூர்வமாக அனுட்டிக்கப்பட்டிருந்தது. ஆனால், கிளிநொச்சியின் கனகபுரம், முழங்காவில், வன்னிவிளாங்குளம் துயிலுமில்லங்களின் பேரெழுச்சிதான் குறிப்பிடப்பட வேண்டியது.

இந்த துயிலுமில்லங்களில் அதிகளவான மாவீரர்கள் விதைக்கப்பட்டிருந்தார்கள் என்பது ஒரு காரணம். ஆனால் வன்னியின் இதயம்தான் அதிகம் போராட்டத்துடன் ஆத்மார்த்தமாக பிணைந்திருந்தது என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். விடுதலையின் அகச்சூடு தணியாமல் அங்குதான் பேணப்படுகிறது.

பிள்ளைகளை விதைத்துவிட்டு அந்த இடத்தில் காடு வளர்ந்திருப்பதை பார்த்துக் கொண்டு, எதுவும் செய்ய முடியாமல் கடந்து செல்லும் பெற்றோர்களின் அவஸ்தையென்பது வார்த்தைகளால் கூற முடியாதது. கடந்த ஏழு ஆண்டுகளில் அதுதான் நடந்தது. அடக்கி வைக்கப்பட்டிருந்த உணர்வுகளின் எழுச்சியைத்தான் மாவீரர்தினத்திலன்று காண முடிந்தது.

எல்லா மாவீரர்துயிலுமில்லங்களிலும் நடந்த அஞ்சலி நிகழ்வுகள் வீடியோக்களாக வெளிவந்துவிட்டன. எல்லா வீடியோக்களிலும் காணப்பட்ட ஒற்றுமை பிள்ளைகளின் கல்லறை கூட இல்லையே என்ற பெற்றவர்களின் ஆதங்க கதறல். பிள்ளைகளும் இல்லை; கல்லறையும் இல்லையென்பது எவ்வளவு பெரிய கொடுமை!

எனினும், பிள்ளைகளை விதைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலித்ததே அவர்களிற்கு பேராறுதலாக இருந்திருக்கும். இந்த ஆறுதல் ஒன்றே போதுமா என்பதே இப்போதைய கேள்வி.

இந்த மாவீரர்தினத்தை தமிழ்தேசிய கூட்டமைப்பே முன்னின்று நடத்தியது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் முன்னிற்காவிடில் இவ்வளவு பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்க வாய்ப்பேயில்லை. இந்த காரணத்தை வைத்து அவர்களை விதந்தோதுவோர் ஒருபுறம் இருக்கிறார்கள். ஆனால் பேச வேண்டிய இன்னொரு பக்கமும் உள்ளது.

மாவீரர்தினம் வரையான நாட்களில் அது பற்றி பேசாமல் இருந்ததற்கு காரணமுண்டு. அந்த புனிதநாளை, அனுட்டிப்பவர்கள் மீதான கேள்விகளால் கொச்சைப்படுத்துவதை தவிர்த்து, இப்போது எழுப்பலாம். ஏனெனில், இது மாவீரர்தினத்திற்கு பின்னான நாள். மாவீரர்தினத்தை அனுட்டித்தவர்கள் மாவீரர்தினத்தின் பின் என்ன செய்யப் போகிறார்கள்?

இதுதான் முதன்மையாக கேள்வி. மாவீரர் தினத்தை அனுட்டிக்க முன்னின்றவர்கள் அனைவரிடமும் இந்த கேள்வியை கேட்க வேண்டும். தமது பிள்ளைகளை, உறவுகளை நினைவுகூர்ந்த சாதாரண மக்களை தவிர்த்து, அரசியல்கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், உயர் கல்வி நிறுவனங்கள், மததலைவர்கள், பொது அமைப்புக்கள் அனைவரின் முன்பாகவும் இந்த கேள்வியை வைக்க வேண்டும். ஒரு மாவீரர் நாளை முடித்துவிட்டு, அடுத்த மாவீரர் நாளிற்காக காத்திருப்பதா உங்கள் அரசியல்?

தமிழ்தேசியம் பேசுபவர்கள் சமயங்களில் சில கேள்விகளை எதிர்கொள்வதில்லை. எப்படியோ சுழித்து தப்பித்து விடுவார்கள். ஆயுதப்போராட்டத்தை வழிமொழிவார்கள், ஆனால் தமது குடும்பத்தில் அனைவரையும் பாதுகாப்பாக கரைசேர்த்துவிட்டுத்தான் செய்வார்கள். சிங்களவனிற்கு அடி கொடுக்க வேண்டுமென்பார்கள். யார் அடிப்பதென்றால் இடத்தை காலி செய்துவிடுவார்கள். ஒன்றை கவனித்து பாருங்கள் தமிழ்தேசிய அரசியலிற்கு வரும் இளைஞர்களின் எண்ணிக்கை வெகு அரிது. உயர்பதவிகளின் முடிவில் அல்லது ஓய்வுபெற்ற பின்னர்தான் அரசியலிற்கு வருகிறார்கள். இதற்கும் மேலே சொன்னதற்கும் நிறைய சம்பந்தம் உள்ளது.

இப்பொழுது கேள்வி மாவீரர் தினத்தின் பின்னர் என்ன?

மாவீரர்தினத்தை அனுட்டித்த ஒவ்வொருவரும் மனச்சாட்சியுடன் இந்த கேள்வியை எதிர்கொள்ள வேண்டும். இந்த கேள்வியின் அர்த்தம், அவர்களும் மாவீரர்களாக வேண்டுமென்பதல்ல. மாவீரர் தினத்தை கொண்டாடுவது ஒரு பாஷன், வாக்குபெறும் உத்தியென்



பதற்கு அப்பால் உணர்வுபூர்வ செயற்பாடு அவசியம் என்பதே குறிப்பிடப்பட வேண்டியது.

விடுதலைப்புலிகளின் காலத்தில் மாவீரர்களின் பெற்றோர்களிற்கு சிறிய தொகை கொடுப்பனவொன்று வழங்கப்பட்டது. அது சிறிய தொகைதான். ஆனால் தமது வல்லமைக்கேற்ப புலிகள் செய்தார்கள். தமது அரசு நிறுவப்பட்ட பின்னர் மாவீரர் குடும்பங்களிற்கு அதிக வாய்ப்புக்கள் வழங்கப்படுமென்று சொன்னார்கள். அதை அந்த குடும்பங்கள் நம்பினார்கள். ஏனெனில், விடுதலைப்புலிகள் அமைப்பில் அதியுயர் கௌரவம் மாவீரர்களிற்கே கிடைத்தது.

எல்லா பிள்ளைகளும் பெற்றோரின் சம்மதத்துடன் அமைப்பில் இருந்தார்கள் என்றில்லை. பிள்ளைகள் அமைப்பிலிருக்கும் விதமான பொருளாதாரத்துடன் எல்லா குடும்பங்களும் இருந்தன என்றுமில்லை. எனினும், மாவீரர்கள் தொடர்பில் புலிகள் கடைப்பிடித்த அணுகுமுறை அவர்களை ஆறுதல்படுத்தியது.

எனினும் புலிகளின் வீழ்ச்சியின் பின் அதிகம் சிரமத்தை சந்தித்தவர்களின் மாவீரர் குடும்பத்தினர் முதன்மையானவர்கள். குடும்பத்தில் மூத்த, உழைக்கும் வல்லமையுள்ள, குடும்பத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட மாவீரர்களையுடைய குடும்பங்களின் எதிர்காலம் என்ன? நவம்பர் 27ம் திகதி நாமெல்லோரும் விளக்கேற்றிவிட்டு வீடு வருவதால் உண்மையான மாற்றங்கள் ஏதாவது ஏற்படுமா?

யுத்தம் முடிந்து ஏழு வருடங்கள் முடிந்துவிட்டது. மாவீரர்தினத்தை அனுட்டிப்பதே பயங்கரவாத செயற்பாடென்ற நிலையிருந்தது. அந்த இருண்ட யுகம் முடிந்து, பகிரங்க மாவீரர்தினம் அனுட்டிக்கப்பட்டாயிற்று. மாவீரர்களின் குடும்பங்களை பராமரிக்க நம்மிடம் உருப்படியான செயற்திட்டம் ஒன்று உள்ளதா? உதிரிகளாக நடக்கும் உதவிகளை விடுங்கள். அது தனி மனிதர்களின் செயல்கள். உதவித்திட்டம் நிறுவன மயப்பட்டு நடந்தால்தான் அனைவரும் முறையான பலன் பெறும் பொறிமுறை உருவாகும். மாவீரர்களின் பெற்றோர், குடும்பம் யாரும் கவனிப்பில்லாமல் இருக்கிறார்கள் என்ற மனக்குறையும் அகலும். நாம் செய்தோமா?

திருமணத்தின் பின் மாவீரர்களானவர்களின் குடும்பங்கள்... வயது முதிர்ந்த பெற்றோர்... மாற்றுத்திறனாளிக் குடும்பங்களின் கதியை கற்பனை பண்ணி பாருங்கள். இவர்களை அழைத்து வந்து ஒருநாள் விளக்கேற்றி, அவர்கள் நிலத்தில் புரண்டு அழும் துயரத்தை வைத்து மட்டுமா அரசியல் செய்யப் போகிறோம்? அப்படித்தான் செய்வோமெனில் அது, மாவீரர் தினத்தை அனுட்டிக்க விடாத சிங்கள ஆட்சியாளர்களின் செயலிலும் பெரிய ஈனத்தனமல்லவா.

பசியோடிருக்கும் குடும்பத்திற்கு ஒரு வேளை சோறுதான் அவசியம். மற்றையதெல்லாம் அதன் பின்னர்தான். புலிகளிற்கு அது தெரியும். ஏனெனில், அவர்களும் இப்படியான பெற்றோரின் பிள்ளைகள்தான்.

இப்போது தமிழர்கள், அதிலும் குறிப்பாக அரசியல் கட்சிகள் செய்ய வேண்டியது மாவீரர் குடும்பங்கள் உள்ளிட்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மறுவாழ்வை ஒருங்கிணைக்க ஒரு நிறுவனமயப்பட்ட அமைப்பு. உண்மையை சொன்னால், புலம்பெயர்ந்த தேசங்களிலிருந்து ஏராளம் உதவிகள் தனிநபர்களின் மூலம் வருகிறது. ஆனால் அவற்றில் கணிசமானவை, துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து வரும் உதவிகளை சரியாக ஒருங்கிணைத்து, வெளிப்படையான உதவித்திட்டத்தை முன்னெடுத்தாலே நிறையப்பேர் பலனடைவார்கள். எந்த இலட்சியத்திற்காக தங்களையே அர்ப்பணித்தார்களோ அதனை ஈடேற்ற முடியாவிட்டாலும் அவர்களின் குடும்பங்களை பாதுகாப்பதையாவது நாம் செய்ய வேண்டும். விடுதலையை விரும்பும் சமூகத்தின் அறச்செயலாக அதுதான் இருக்க முடியும். அதனை நம்மால் செய்ய முடியாவிட்டால் மாவீரர் தினத்தை அனுட்டிக்க நமக்கு அருகதையிருக்காது.



மாவீரர்களை நினைவுகூர்வது நமது கடமை. ஆனால், அதற்கு முன்னர் அவர்களின் குடும்பங்களை கவனிப்பது நமது பொறுப்பு.

3-ம் பக்க தொடர்ச்சி

காவல் துறை அதிகாரியாகவும், முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசனை அதிகாரியாகவும் கடமையாற்றி, அண்மை காலத்தில் எந்தவித சட்ட சிக்கலுமின்றி மகிழ்ச்சியாக இளைபாறியுள்ளார் என்பது வியப்பிற்குரியது.

அன்று இவர் மீது தொடர்ச்சியாக பல முறைபாடுகள் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, சரத்சந்திரா ஆனைக்கோட்டையிலிருந்து வல்வெட்டித்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவர் அங்கு சென்றதும், தனது அரசியல் செல்வாக்கை பாவித்து, வல்வெட்டித்துறையிலிருந்து இடமாற்றம் பெற்றார்.

சில வருடங்கள் சென்றதும், இவர் சிறிலங்காவின் அதிரடிப்படையில் இணைந்துள்ளதாக அறிந்த பொழுது எனக்கு எந்தவிதமான ஆச்சரியமும் ஏற்படவில்லை. காரணம், சிறிலங்காவின் அதிரடிப்படையினர் காவல் துறை, இராணுவம் ஆகிய இருவரது அதிகாரங்களை கொண்டுள்ளதனால், இவர் தனது கொடுமைகளை தொடர்வதற்கு ஏற்ற இடமாக அதிரடிப்படை விளங்கியது. அங்கு இவரது மிக நீண்டகால சேவையில், இவரினால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளும், கொலைகளும் எண்ணில் அடங்காதவை. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, அக்கரைபற்று, திருகோவில், கல்முனை, காரைதீவு, கொக்கட்டிச்சோலை, பொத்துவில், மட்டக்களப்பு போன்று பல இடங்களில் இவரது கொடுமைகள் மிகவும் மோசமாக இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில், அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் கொலைகள் என்பதை விபரிப்பதே மிகவும் கவலைக்குரிய விடயம். அதிரடிப்படையினர் கைது செய்த சிலரை, கடற்கரைகளில் அவர்களது கழுத்துவரை மண்ணினால் மூடிய பின்னர், அவர்களது தலைக்கு தீயிட்டு கொன்றுள்ளனர். சிலரது உடம்பை சுற்றி ரயர்களை போட்டு அவர்களை உயிருடன் எரித்தும் உள்ளனர்.



இவ்விடயங்கள் சம்பந்தமாக, கிழக்கில் முன்னின்று ஆவணப்படுத்தி சர்வதேச மனித உரிமை அமைப்புக்களிற்கு வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் மிக குறுகிய காலத்தில் ஒருவர் பின் ஒருவராக படுகொலை செய்யப்பட்டனர். மாமனிதர்களான திரு யோசப் பரராஜசிங்கம், திரு சந்திரநேரு அரியநாயகம், தாரகி சிவராம், பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் போன்று பலர் இவ் பட்டியலில் அடங்குவார்கள்.

தற்போதைய வினா என்னவெனில், நல்லாட்சி என கூறப்படும் அரசின் காவல்துறையின் சிரேஷ்ட அதிகாரி, ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் அரச வாகன துஸ்பிரயோகத்திற்காக கைது செய்யப்பட்டு பிணையில் அனுமதிக்கப்பட்ட சரத்சந்திராவினுடைய சேவைகாலத்திலுள் அடங்கிய முழு முறைபாடுகளையும் முன்னெடுப்பார்களா? அல்லது வழமைபோல் வாகன துஸ்பிரயோகம் என்ற கண்துடைப்பு விசாரணையை மட்டும் மேற்கொள்வார்களா என்பதே.

> தெற்கில் வாழும் பெரும்பாலான மக்கள், முப்பது வருடகால யுத்தத்திற்கு, பிரபாகரனை குறை கூறுவதை நிறுத்தி, சரத்சந்திரா போன்றவர்களே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இப்படியாக இவர்கள் ஓர் கண்துடைப்பு விசாரணையை மேற்கொள்ளும் கட்டத்தில், பிரதம நீதிபதியினால், அவரது சேவைகால குற்றச்சாட்டுகளை முழுதாக பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

இதேவேளை, 2010ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பொழுது, அதிரடிப்படையினர் சார்பாக, இவரது பெயருடன் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சாவை ஆதரித்து வெளியிட்டுள்ள துண்டு பிரசுரம் சம்பந்தமாகவும் விசாரணை செய்ய முடியும்.

தெற்கில் வாழும் பெரும்பாலான மக்கள், முப்பது வருடகால யுத்தத்திற்கு, பிரபாகரனை குறை கூறுவதை நிறுத்தி, சரத்சந்திரா போன்றவர்களே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அரச படைகளினால் ஆறு இளையர்கள் படுகொலை செய்யப்பட்டும், காணமல் போயுள்ள 1979ம் ஆண்டு யூலை காலபகுதியில், பெரும்பாலான மக்கள் வேலுப்பிள்ளை பிரபாகரனை சரியாக தெரிந்திருக்கவில்லை. ஆனால் அவர்கள் சரத்சந்திரா என்பவர் யார் என்பதை நன்றாக அறிந்திருந்தார்கள்.

சிறிலங்காவின் அரசியல் தற்பொழுது பயணிக்கும் நிலையில், 2020ம் ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதி, பாராளுமன்றம் ஆகிய இருதேர்தல்களிலும், நிச்சயம் முன்னாள் பாதுகாப்பு செயலாளரான கோத்தபாய ராஜபக்சாவை ஜனாதிபதியாகவும், அவரது சகோதரரான மகிந்த ராஜபச்ச பிரதமராக பதவி ஏற்க கூடிய சந்தர்ப்பங்களே நிறைந்து காணப்படுகிறது.

இவ் நிலையில், யாழில் தமிழ் இளைஞர்களின் ஆரம்ப கொலைகளிற்காக குற்றம்சாட்டப்பட்டவரும், வாகன துஸ்பிரயோகத்திற்காக கைது செய்யப்பட்டு பிணையில் அனுமதிக்கப்பட்ட சரத்சந்திரா, சிறிலங்காவின் பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்படலாம். இப்படியான நிலை ஏற்படும் கட்டத்தில், சரத் பொன்சேகவை இழிவுபடுத்துவதற்காக மேலும் சில மேல்மட்ட இராணுவ அதிகாரிகளிற்கு 'பீல்ட் மார்சல்' பட்டங்கள் வழங்கப்படும். இவ் நிலையில், மோசடிகள் நிறைந்த சர்வாதிகாரம், மறுபடியும் நாட்டில் உருவாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அத்துடன், தற்போதைய அரசின் அமைச்சர்கள் பழிக்கு பழிவாங்கலுக்கு ஆளாக்கப்படலாம்.

நன்றி லங்கா ஈ நியூஸ்

# 'யாழ்ப்பாண பெண்கள்தான் கலாசாரத்தை காப்பாற்றும் உடையணிகிறார்கள்'

## நேரில் பார்த்து ஆச்சரியப்படும் நடிகை கார்த்திகா

எஸ்.நிதர்சன்

நடிகை கார்த்திகாவை இளவட்ட ரசிகர்களிடம் அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. 'கோ' பட நாயகி. கார்த்திகாவின் பிரதான அடையாளமே அம்மா ராதாதான். எண்பதுகளின் கனவு நாயகி. பிரபல நடிகையாக இருந்தபோதே திருமணம் செய்துகொண்டு சினிமாவை விட்டு ஒதுங்கினார். பின்னர் மகள் கார்த்திகாவை களமிறக்கியுள்ளார்.

அண்மையில் ராதா, கணவர், கார்த்திகா யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். யாழ்ப்பாணத்தை சுற்றிப்பார்க்க வந்தவர்கள், ரில்கோ விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார்கள். விடயம் அறிந்ததும் அவர்களை நேரில் சென்று சந்தித்து பேசினோம்.



**தீபம்: முதன்முறையாக யாழ்ப்பாணம் வந்திருக்கிறீர்கள். எப்படியிருக்கிறது யாழ்ப்பாணம்?**

கார்த்திகா: யாழ்ப்பாணம் எனக்கு ஆச்சரியமூட்டவில்லை. எங்கள் நாடு போலவே இருக்கு. என் ஊரைப் போலத்தான் இருக்கு. கேரளா, பாண்டிச்சேரியில் இருப்பதை போலிருந்தது. எல்லோருமே அன்பாக... பிரண்ட்லியாக பழகினார்கள். முக்கியமாக உதவியாக இருந்தார்கள். யாழ்ப்பாணத்திலிருப்பது சந்தோசமாக இருக்கிறது.

**தீபம்: என்ன திடீரென யாழ்ப்பாணம் வந்திருக்கிறீர்கள்?**

கார்த்திகா: கொழும்பில் ஒரு விருதுவிழாவிற்காக வந்தோம். யாழ்ப்பாணம் வர வேண்டுமென்பது நீண்டநாள் ஆசை. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டோம். நான் களியாட்ட விழாக்களிற்காக இங்கு வரவில்லை. இந்த மண்ணை பார்க்கத்தான் வந்தேன்.





**தீபம்: எப்படி போகிறது சினிமா வாழ்க்கை?**

கார்த்திகா: ம்... நன்றாக போய்க்கொண்டிருக்கிறது. படங்களின் தொகை முக்கியமல்ல. நல்ல படங்கள் எத்தனை நடித்திருக்கிறோம் என்பதுதான் வரலாற்றில் நிலைக்கும். அம்மா நடித்த காலத்தில் வருடத்தில் 30 படம் நடிக்கலாம். ஆனால் இப்போது அப்படியல்ல. வருடத்திற்கு ஒன்றே பெரும்பாடு. சிறிய படமென்றாலும் கடினமான உழைப்பு தேவை.

இப்போது தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் நடித்து கொண்டிருக்கிறேன். கன்னட, தெலுங்குபடங்கள் பெரிய பட்ஜெட் படங்கள்.

அதனால் தமிழில் கவனம் குறைந்திருக்கிறது. தமிழில் படங்கள் குறைந்ததற்கு இன்னொரு காரணம் நான் சான்ஸ் கேட்டு போவதில்லை. இதுவரை நடித்த எல்லா படங்களும் என்னை தேடி வந்தவையே.

என்னை தேடி வாய்ப்புக்கள் வந்ததற்கு எனது நடிப்பா... அம்மாவின் பெயரா காரணமென்பது தெரியாது. (சிரிக்கிறார்)

**தீபம்: சினிமாவிற்கு வர வேண்டுமென்பது சின்ன வயது திட்டமா?**

கார்த்திகா: நடிகையாகுவேன் என நினைக்கவேயில்லை. நான் கேரளா என்றாலும் வளர்ந்தது, படித்தது எல்லாமே மும்பைதான். மும்பை பெண்ணாகவே வளர்ந்தேன். அப்பாவின் பிஸ்னஸ் பக்கத்திலதான் ஆர்வமாக இருந்தது. கல்யாணத்தின் பின் அம்மா படங்களில் நடிக்கவில்லை. வீட்டிலேயே இருந்து விட்டா. அதனால் நடிகை மகளாக நான் வளரவில்லை. சின்ன வயதில் சூட்டிங் போனதும் கிடையாது. பத்தாவது முடித்த பின்னர் திடீரென நடிக்க வந்தேன்.

நான் சினிமாவிற்கு வந்தப்போ, அம்மா நிறைய அட்வைஸ் செய்தார். எதையெல்லாம் செய்யலாமென்று சொல்லவில்லை. எதையெல்லாம் செய்யக்கூடாதென்பதை சொல்லித்தந்தா.

ஆரம்பத்திலயிருந்தே ஓவர் நடிப்பெல்லாம் இருக்க கூடாதென்பதில் கிளியராக இருந்தேன். எனது படங்களை பார்த்தவர்கள் நச்சுரல் அக்டிங் என பாராட்டுகிறார்கள். எனது உழைப்பிற்கு கிடைத்த பலனாக அதை பார்க்கிறேன்.

**தீபம்: இதுவரையான சினிமா வாழ்க்கை திருப்தியளிக்கிறதா?**

கார்த்திகா: பல கரக்டர்ஸ் செய்துவிட்டேன். மலையாளத்தில் டபுள் கரக்டரும் பண்ணியிருக்கன். நான் பண்ணும் படங்களில் பெரிய ரோல் செய்வதாக கூறுகிறார்கள். 'கோ' படத்தில ஒரு ஊடகவியலாளர் எப்படியிருப்பாரென்பதை சரியாக செய்தேன். எல்லா படங்களிலயும் அந்தந்த ரோலை சரியாக செய்யிறன். படம் பார்த்துவிட்டு பலரும் பாராட்டும்போது



திருப்தியாக இருக்கு.

**தீபம்: கார்த்திகா என்றால் கோ தானே நினைவுக்கு வருகிறது. இன்னொரு படம் வரவில்லையே?**

**கார்த்திகா:** 'கோ' இவ்வளவு பெரிசா வருமென நினைக்கவில்லை. எல்லோரும் 'கோ கேர்ள்' என்றுதான் கூப்பிடுகிறார்கள். இன்னும் பல படங்கள் நடித்துள்ளேன் என அவர்களிடம் சொல்வேன். தெலுங்கில் இப்படி சில படங்கள் செய்திருக்கிறன்.

**தீபம்: யாழ்ப்பாணத்தில் எங்கெல்லாம் போனீர்கள்?**

**கார்த்திகா:** பல இடங்களின் பெயர் உடனே நினைவுக்குவரல. நயினாதீவு போனம். படகில சென்றது நல்ல அனுபவம். அப்ப நல்ல மழை வேற. சந்தோசமாக இருந்தது. நல்லூர் போனம். இன்னும் கொஞ்ச இடங்கள் சுற்றினம். வேற சிலரது வீடுகளுக்கும் போனம்.

**தீபம்: ஏன் யாழ்ப்பாணம் வர வேண்டுமென விரும்பினீர்கள்?**

**கார்த்திகா:** யாழ்ப்பாணத்துக்கென ஒரு வரலாறு இருக்கு. நானும் எல்லா நியூசும் அறிஞ்சிருக்கிறன். இங்குள்ளவங்க எப்பிடியெல்லாம் கஸ்ரப்பட்டாங்க... எவ்வளவு தியாகம் பண்ணியிருக்காங்க என்பதையெல்லாம் நியூஸ்ல பார்த்திருக்கிறன். நமக்கு பக்கத்து நாடு. நமது சொந்தங்கள். பெருமையான கடந்தகால வரலாறு இருக்குது அவங்களுக்கு. அதை பார்க்கணும் என்ற ஆவல்தான்.

' கார்த்திகாவுடன் பேசிவிட்டு, அதுவரை பக்கத்தில் அமைதியாக இருந்த அம்மா ராதாவுடன் பேசினோம்.

**தீபம்: ராதா ஒருகாலத்தில் பிரபல நடிகை. ஏன் திடீரென நடிப்பிலிருந்து ஒதுங்கினார்?**

**ராதா:** நான் நடிக்க வந்தபோது அம்மா சொன்னது 'நீ நடிக்கலாம். சம்பாதிக்கலாம். வாழ்க்கைக்காக அதை சேமித்து வைத்துவிட்டு ஒரு சரியான குடும்பத் தலைவியாகிவிடு. ஒரு பெண்ணாக இதுதான் என் அறிவுரை' என்பதே. அதை சரியாக செய்தேன். இப்போது கார்த்திகாவிற்கும் அதைத்தான்



சொல்லியிருக்கிறேன்.

**தீபம்: ராதாவின் அந்தநாள் ஞாபகங்கள் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?**

**ராதா:** அதொரு பொற்காலம். பாரதிராஜா சேரிடம் மண்ணைக் கொடுத்தாலும் பொன்னாக மாற்றிவிடுவார். அவ்வளவு திறமைசாலி. அப்படியானவர்களின் படத்தில் நடிச்சதாலதான் நல்ல இடத்தை பிடித்தேன். ரஜினி சேர்; சக கலைஞர்களிற்கு உதவுவார். சிவாஜி சேர் சூட்டிங் வந்தால், கடைசி ஆளாகத்தான் புறப்படுவார். கமல் சேர் தான் மட்டும் நடிக்க மாட்டார். எல்லோரையும் நடிக்க வைப்பார். அப்படியொரு காலமது.

**தீபம்: யாழ்ப்பாணத்திற்கு முதன்முறையாக வந்திருக்கிறீர்கள். எப்படியிருக்கிறது?**

**ராதா:** புது இடத்திற்கு வந்ததைபோல தெரியவேயில்லை. எங்கள் இடம் கேரளாவும் இதுபோலத்தான். இடம் மாறியதாக தெரியவேயில்லை. யாழ்ப்பாணம் மிக அழகாக இருக்கிறது. முக்கியமாக எல்லா இடமும் துப்பரவாக, பிடித்தமானதாக இருக்கிறது.

இந்த இடம் மட்டுமல்ல, சாப்பாடும் கேரளத்தை போலத்தான் உள்ளது. அதனால, வேறிடத்தில இருக்கிறதாகவே தெரியலை. வீட்டில இருக்கிற உணர்வுதான்.

**தீபம்: கற்பனை பண்ணிய யாழ்ப்பாணம்.. நேரில் பார்க்கும் யாழ்ப்பாணம்?**

**ராதா:** கொழும்பில இருந்து வானில் வந்தோம். கேள்விப்பட்டதை விட நிறைய தெரிந்துவிட்டோம். மிக அழகான இடம். உண்மையை சொன்னால், இந்த இடத்திற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

அழகாக இருக்கிறது அழகான, எளிமையான உடைகளை பாவிக்கிறார்கள். முக்கியமாக பெண்கள், கலாசாரத்தை விட்டுக் கொடுக்காமல் அதற்கேற்ற உடையணிகிறார்கள். யாழ்ப்பாணத்தில் சில வீடுகளிற்கும் சென்றோம். கேரளாவில் நகரத்திலுள்ள வீடுகளை போலிருந்தது.

**தீபம்: இங்கு பல இடங்களிற்கும் போனீர்கள். இங்குள்ளவர்கள் அடையாளம் கண்டார்களா? என்ன சொல்கிறார்கள்?**

**ராதா:** எல்லா இடங்களிலும் அடையாளம் கண்டுவிட்டார்கள். எக்கச்சக்கமாக வரவேற்றார்கள். அவர்களின் அன்பு உண்மையில் மெய்சிலிர்க்க வைத்தது. நாங்கள் இடம்பார்க்க வந்ததால அவர்களோட அதிகமாக பேச முடியல. அது வருத்தம்தான். ஆனால் சிலரோட நிறைய பேசினோம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமல்லவா. அவர்களின் அன்பிற்கு எம்மிடம் கைமாறு இல்லை.

**தீபம்: இந்த பயணத்தின் பின் என்ன தோன்றுகிறது?**

**ராதா:** யாழ்ப்பாணத்திற்கென ஒரு பெருமை இருக்கிறது. நாங்கள் வராவிட்டாலும் நிறையப்பேர் சொல்லி யாழ்ப்பாணத்தை பற்றி கேள்விப்பட்டுக் கொண்டுதான் இருந்தோம். இங்க வந்த பின்னர்தான் இன்னும் பலதை தெரிந்தோம். பனையிலயிருந்து செய்யப்படும் கருப்பட்டி பார்த்தேன். இப்படி நமது கலாசாரத்துடன் சம்பந்தப்பட்ட விசயங்களை ஊக்குவித்து முன்னேற வைக்கலாம். கேரளாவும் சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் இடம். அங்குள்ள உள்;ர் தயாரிப்புக்களை சுற்றுலா வருபவர்கள் விரும்பி வாங்குவதைபோல தயாரிக்கிறார்கள். அதுபோன்ற நிலையை இங்கும் உருவாக்கலாம். நிறையப்பேருக்கு வருமானம் கிடைக்கும்.

இங்கும் சினிமாவிற்கு நல்ல வரவேற்பு இருக்குது. சினிமாக்கு, நடிகர்களிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை சுற்றுலாத் துறைக்கு கொடுக்க வேண்டும். யாழ்ப்பாணம் சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் இடமாக்கலாம். ●







▶ மன்னார் மறைமாவட்டம் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய திருவிழா கொடி ஏற்றம் 29.11.2016. இன்று மாலை 5.15. மணிக்கு வெகு சிறப்பாக இடம் பெற்றது.



▶ கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் தமிழ் வித்தியாலயத்தில் இலங்கை இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட புதிய நூலக கட்டிடம் மாணவர்களின் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது.






# யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

யாழ்ப்பாணம் வலி.தென்மேற்குப் பகுதியில் தனக்கென நீண்ட கால வரலாற்றைக் கொண்டு விளங்குகின்றது யாஃபண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை. மேலைத்தேய மிசனரிமாரின் வருகையால் இலங்கையில் உருவாக்கப்பட்ட பாடசாலைகளுள் இதுவும் ஒன்றாக மிளிர்கின்றது. 1823ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரிமார்களால் பாலர் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று உயர்தரப் பாடசாலையாகப் பல தடைகளைக் கடந்து வளர்ந்து வருவது சிறப்பானதொன்றாகும்.

1936ஆம் ஆண்டிலேயே இந்தப் பாடசாலைக்கு யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை என்ற பெயர் வழங்கப்பட்டது. விடுதி வசதியும் இப் பாடசாலையில் இருந்தமையால் பல இடங்களில் இருந்தும் மாணவர்கள் இப் பாடசாலைக்கு வந்து கல்வி கற்றனர். 1996இல் இப் பாடசாலை அரசால் சுவீகரிக்கப்பட்ட வேளையில் இப் பாடசாலையானது 1800ற்கும் மேற்பட்ட மாணவர்களையும், 75ற்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் தன்னிடத்தில் கொண்டிருந்தது.

1987 மற்றும் 1992 இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப் பாடசாலை பெரும் பின்னடைவுக்குத் தள்ளப்பட்டு வட்டு இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்தது. அதன் பின்னர் 1996 ஆம் ஆண்டில் பாடசாலை மீளவும் ஆரம்பிக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் கண்டு தற்போதைய வளர்ச்சியை இப் பாடசாலை எட்டியிருக்கின்றது என்றால் அதற்கு இப்பாடசாலையின் அப்போதைய அதிபர் மற்றும் ஆசிரியர்களினது அர்ப்பணிப்பான உழைப்பே காரணம்.

தற்போது இந்தப் பாடசாலை 678 மாணவர்களையும், 40 ஆசிரியர்களையும் கொண்டு விளங்குவதுடன் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளிலும் சிறப்பான வகிபாகத்தைப் பெற்று வருகின்றது. இப்பாடசாலையின் விளையாட்டுத் துறையில் குறிப்பிட்டுசொல்லக்கூடியவிடயம் ஹொக்கி. யாழ்ப்பாணத்தின் பல பாடசாலைகளைப் போன்றே கிரிக்கெட், உதைப்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டாலும் விசேடமாக ஹொக்கி விளையாட்டில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியான 19 வயதின் கீழ் பெண்களிற்கான ஹொக்கி போட்டியில் 4ஆம் இடத்தைப் பெற்று பெருமை தேடிக் கொண்டிருக்கின்றது.

இப் பாடசாலை 2015ஆம் ஆண்டு மாகாண சபை உறுப்பினரான கஜதீபன் அவர்களால் 40,000 பெறுமதியான ஹொக்கி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டமையானது இப் பள்ளியின் விளையாட்டுத் துறையின் மேம்பாட்டுக்குப் பெரும் பயனாக அமைந்தது. எவ்வளவு தான் சிறப்பான பெறுபேறுகளை விளையாட்டுத் துறையில் இப் பாடசாலை பெற்றுக்கொண்டாலும் சீரான விளையாட்டு மைதானம் இல்லாத நிலையிலேயே இப் பாடசாலை காணப்படுகின்றது. இதற்கான வேண்டுகோள்கள் பல தடவைகள், பலரிடத்தில் முன்வைக்கப்பட்ட போதும் உரிய நடவடிக்கைகள் இன்றும் எடுக்கப்படவில்லை என்பது மாணவிகளின் வருத்தமாகும்.

கிருசாந்தி, மதுசா, அபிராமி, அனுசியா என்று பல வீராங்கனைகள் ஹொக்கியில் திறமை காட்டி பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார்கள். பாடசாலை மாணவி கிருசாந்தி இலங்கை விமானப் படையில் ஒரு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டமை இதில் சிறப்பானதாகும். விளையாட்டில் மட்டுமல்லாது கல்வியிலும்



சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றது இப் பாடசாலை. 2015ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வி. மதுமிலா 168 புள்ளிகளையும், க.பொ.த உ.த பரீட்சையில் செல்வி. ஜெனுசியா 7ஏ 2பி சித்தியையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

திருமதி செபமாலை தேவராஜ் அவர்களின் வழிநடத்தலின் கீழ் கட்டுக்கோப்புடன் இயங்கி வரும் இப்பாடசாலையில் சைவ மங்கையர் கழகம், சுகாதார கழகம், சிறுதோழியர் மன்றம் என பல கழகங்களும் இயங்குகின்றன. சிறப்பாக சைவ மங்கையர் கழகத்தினால் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப்பிரார்த்தனை, சிவபுராணம், பஞ்ச புராணம் போன்ற நிகழ்வுகளும் நடாத்தப் படுவது விசேட அம்சம் ஆகும். இருப்பினும் பழைய மாணவர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்பு குறைவாக இருப்பதானது கல்வி நடவடிக்கைகள் மற்றும் வளத்தேவைகள் பூர்த்தி செய்வதில் முழுமையற்ற தன்மையை ஏற்படுத்துவதாக அமைகிறது.







# கச்சித ஹார்சி!

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஹார்சி சுராவீரா (27) இலங்கையை பூர்வீகமாக கொண்டவர். இன்றைய திகதியில் அம்மணிக்கு ஏராளம் ரசிகர்கள். இன்ஸ்டகிராமில் அவரை பின்தொடர்பவர்கள் எண்ணிக்கை 70,000. காரணம், உடல்தான்!

ஹார்சி ஆரம்பத்தில் ஒரு குண்டு பூசணிக்காய். அப்படித்தான் எல்லோரும் அவரை கேலி செய்தனர். 107 கிலோவில் அலுங்கி குலுங்கி வர பையன்கள் மட்டுமல்ல அவரது சினேகிதிகளே கேலி செய்ய ஆரம்பித்தனர்.

ஹார்சி ஒரு சாப்பாட்டு பிரியை. இரண்டு பீட்சா, ஒரு லீற்றர் கொக்ககோலாவை சாதாரணமாக ஏப்பமிட்டுவிட்டு செல்வார். எந்த சாப்பாடென்றாலும் ரசித்து ருசித்து சாப்பிடுவார். விளைவுஞ் 107 கிலோ உடல்!

ஒரு கட்டத்தில் தனது உடல் குறித்த எதிர்மறையுணர்வு அவருக்கு ஏற்பட தொடங்கியது. வெளியில் செல்ல முடியாது. பேஸ்புக்கில் படம் போட முடியாது. திரும்பும் திசையெல்லாம் கேலிப் பேச்சுக்கள்.

எப்படியாவது உடல் எடையை குறைக்க வேண்டுமென ஹார்சி முடிவு செய்து ஜிம் செல்ல ஆரம்பித்தார். பத்து மாத கடின முயற்சி. இன்று 64 கிலோகிராம் ஹார்சி கச்சிதமாக இருக்கிறார். ஜிம் பயிற்சிகளால் உடலை முறுக்கேற்றி, பார்ப்பவர்களையெல்லாம் "அவளா இவள்" என வாயை பிளக்க செய்துள்ளார்.

"எடை குறைந்தது என் வாழ்க்கையில் எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. நான் ஒரு முன்னுதாரணமானவளாக உணர்கிறேன்" என்கிறார் ஹார்சி.

"தினமும் 2 3 மணித்தியாலம் ஜிம்மில் பயிற்சி செய்தேன். சலட் மற்றும் புரோட்டீன் உணவுகளை உட்கொண்டேன். இனிப்பு உணவுகளை முற்றிலும் தவிர்த்தேன்" என்கிறார்.

குண்டான பெண்ணாக சமூகவலைத்தளங்களின் மூலம் அறிமுகமான ஹார்சி தற்போதைய கட்டழகு தோற்றத்தை பதிவேற்ற இணைய உலகம் முதலில் நம்பவில்லை. போட்டோ சொப்பில் புகுந்து விளையாடியிருக்கிறார் என்றுதான் நினைத்தது. பின்னர்தான் நம்பியது.

இன்று இன்ஸ்டகிராமில் அம்மணியை 70,000 பேர் பின் தொடர்கிறார். உடல் பருமன் பிரச்சனையால் அவதிப்படுபவர்களிற்கு அவர் ஒரு ரியல் ரோல் மொடலாக செயற்பட்டு ஆலோசனைகள் வழங்குகிறார்.

சமூக வலைத்தளங்களில்
You Tube /deepamlive



தொகுப்பு: ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** எதிலும் எதிர் நீச்சல் போட்டே வளர்ந்தவர். நெருக்கடியான கட்டங்கள் ஏற்படும்போது தனக்கு நம்பிக்கையானவர்களின் துணை கொண்டு அதை எளிதாகக் கடந்து விடுவார். அது போன்ற சமயங்களில் அவருக்கு தோள் கொடுக்க ராஜவிசுவாசிகள் இருப்பார்கள் என்று வசனகர்த்தா ஆரூர்தாஸ் ஒருமுறை குறிப்பிட்டார். அப்படிப்பட்ட ராஜவிசுவாசி களில் முக்கியமானவர் ஆர்.எம்.வீரப்பன்.

1953ம் ஆண்டு எம்.ஜி.ஆர் நாடக மன்றத்தின் நிர்வாகியாக ஆர்.எம்.வீரப்பன் பொறுப்பேற்றுக் கொண்டார். விரைவிலேயே அவரது செயல்பாடுகள் எம்.ஜி.ஆருக்கு பிடித்துப் போனது. எம்.ஜி.ஆர் நாடக மன்றத்தின் முதல் நாடகம் 'இடிந்த கோயில்'. திமுக சார்பில் நடந்த கல்லக்குடி போராட்ட நிதிக்காக, 1953ம் ஆண்டு ஒக்டோபர் முதல் வாரம் இடிந்த கோயில் நாடகம் திருச்சியில் அரங்கேறி மக்களின் வரவேற்பை பெற்றது.

அப்போதைய சூழலில் திமுக மீது நாத்திகக் கட்சி என்ற முத்திரை பலமாக விழுந்திருந்தது. அந்த நேரத்தில் 'இடிந்த கோயில்' என்ற பெயரில் நாடகம் போட்டால் கடவுள் மறுப்பு நாடகம் என்று மக்கள் கருத வாய்ப்பு ஏற்படும் என்றும் நாடகத்தின் கருத்துக்கள் இன்னும் அதிக மக்களை அடைய நாடகத்தின் பெயரை 'இன்பக் கனவு' என மாற்றலாம் என்றும்



எம்.ஜி.ஆருடன் ஆர்.எம். வீரப்பன்.


'தெய்வத்தாய்' பட பூஜைக்கு வரும் எம்.ஜி.ஆரை வரவேற்கிறார் ஆர்.எம்.வீரப்பன்.


விழா ஒன்றில் எம்.ஜி.ஆருடன் சின்னப்பா தேவர், ஆர்.எம்.வீரப்பன் மற்றும் அதிக பாடல்கள் பாடி கின்னஸ் சாதனை படைத்துள்ள பாடகி பி.சுசீலா.

எம்.ஜி.ஆருக்கு யோசனை சொன்னார் வீரப்பன். அது நியாயமாக இருக்கவே, ஏற்றுக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

அந்தக் காலத்திலேயே மேடை நாடகத்தில் புதிய உத்திகளை எம்.ஜி.ஆர் கையாண்டார். நாடகத்தில் கனவுக் காட்சி வரும். சாட்டின் படுதா ஒன்றின் மீது சிவப்பு, பச்சை வண்ணங்களில் ஒளிவெள்ளம் பாய்ச்சி அந்தப் படுதாவை லேசாக ஆட்டும்போது அலை அலையாக வண்ணக் கலவையில் தோன்றும் கனவுக் காட்சி கைதட்டல் பெறும்.

அந்தச் சமயத்தில் 'மலைக்கள்ளன்' படத்தில் நடிக்க எம்.ஜி.ஆர் ஒப்பந்தம் ஆனார். படத்துக்கு திரைக்கதை வசனம் எழுத கருணாநிதியை ஏற்பாடு செய்தார். படம் பிரம்மாண்ட வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர் நாடக மன்ற நிர்வாகியாக இருந்த வீரப்பன், அவரது படங்கள் தொடர்பான வேலைகளையும் கவனித்துக் கொண்டார்.

குலேபகாவலி, மதுரைவீரன் போன்ற வெற்றிப்படங்கள் மூலம் எம்.ஜி.ஆர் திரையுலகில் உச்சத்தை தொட்டுக் கொண்டிருந்த நேரத்தில் 'நாடோடி மன்னன்' படம் தயாரிக்க முடிவு செய்தார். எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் நிறுவனத்தை தொடங்கினார். எம்.ஜி.ஆரும் அவரது அண்ணன் சக்ரபாணியும் பங்குதாரர்கள். பின்னர், சிறிது காலம் கழித்து அந்நிறுவனம் 'எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்' நிறுவனமாக மாற்றப் பட்டது. அதில் ஆர்.எம்.வீரப்பனையும் பங்குதாரராக சேர்த்ததுடன் அவரை நிர்வாக இயக்குநராகவும் நியமித்தார் எம்.ஜி.ஆர்!

'நாடோடி மன்னன்' படம் வளர்ந்தது. படத்துக்கான தயாரிப்பு செலவுகள் எகிறிக் கொண்டே இருந்தன. செலவுகளை சமாளிக்க ஏவி.மெய்யப்ப செட்டியாரிடம் கடன் கேட்க முடிவு செய் தார் வீரப்பன்.

**எம்.ஜி.ஆர் படங்களை திரையிடுவதில் சென்னையின் முக்கிய தியேட்டர் அதிபர்கள் ஆர்வம் காட்டினர். 'திருடாதே' படம் பட்டிதொட்டிகளிலும் ஓடி வசூலை வாரிக்குவித்தது. ராஜா ராணிக் கதைகளுக்குத்தான் எம்.ஜி.ஆர் பொருத்த மானவர் என்ற கருத்தையும் 'திருடாதே' தகர்த்தது.**

அப்போது, ஏவிஎம் நிறுவனத்தின் ஆடிட்டர் சீனிவாசன், "கடன் தருவோம். ஆனால், எம்.ஜி.ஆர் கையெழுத்து போட வேண்டும்" என்று கூறிவிட்டார். கடன் பத்திரத்தில் எம்.ஜி.ஆர் கையெழுத்து போடக்கூடாது, ஏதும் சிக்கல்கள் வந்தால் அவர் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் வீரப்பன்.

கடன் பெறுவதற்காக, படத்தின் இலங்கை ஏரியா விநியோக ஒப்பந்தத்தை ஈடாக காண்பித்திருந்தனர். அதில் எம்.ஜி.ஆர் கையெழுத்திட்டிருந்தார். "விநியோக உரிமை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கும்போது கடன் பத்திரத்தில் எம்.ஜி.ஆர் கையெழுத்து போடவேண்டும்" என்று ஆடிட்டரும் பிடிவாதமாக இருந்தார். நாட்கள் ஓடின. பணம் இல்லையென்றால் படப்பிடிப்பு நடத்த ஃபிலிம் வாங்க முடியாத நிலை.

திடீரென யோசனை தோன்ற மீண்டும் சீனிவாசனிடம் சென்றார் வீரப்பன். "இலங்கை விநியோக ஒப்பந்தம் எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் பெயரில் போடப்பட்டது. ஆனால், அந்நிறுவனம் பிறகு 'எம்.ஜி.ஆர்.பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்' என்று ஆனபிறகு, அதன் நிர்வாக இயக்குநர் நான்தான். என் பெயரில்தான் கடிதத் தொடர்புகள் நடக்கிறது. எனவே கடன் பத்திரத்தில் நான் கையெழுத்திட்டால் போதும்." என்று கூறி ஆதாரங்களை காட்டினார் வீரப்பன்.

சட்டபூர்வமாக அவரது வாதத்தை மறுக்க முடியாத நிலையில், கடன் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. கடன் பத்திரத்தில் எம்.ஜி.ஆரை கையெழுத்து போடவிடாமல் கடன் பெற்றுவிட்டார் வீரப்பன்.

'எம்.ஜி.ஆர் படங்கள் நகரங்களில் ஓடாது. கிராமங்களில்தான் ஓடும்' என்ற தவறான கருத்து இருந்தது. இதை மாற்ற வேண்டுமானால் எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் நிறுவனம் திரைப்பட விநியோகத்திலும் ஈடுபட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 1961ல் எம்.ஜி.ஆர் நடித்த 'திருடாதே' படத்தின் சென்னை நகர விநியோக உரிமையை அந்நிறுவனம் பெற்றது. அப்போதெல்லாம், சென்னையில் எம்.ஜி.ஆர் படங்களுக்கு முதல்தர திரையரங்குகள் கிடைக்காது.

எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் நிர்வாகியாக இருந்த வீரப்பன் துணிந்து முடிவு எடுத்தார். அண்ணா சாலையில் பழைய படங்களை வெளியிட்டு வந்த பிளாசா, மற்றும் பாரத், மகாலட்சுமி ஆகிய பழைய திரையரங்குகளில் 'திருடாதே' படம் திரையிடப்பட்டது.

**'இதயக்கனி' படத்துக்கு மற்ற எம்.ஜி.ஆர் படங்களுக்கு இல்லாத சிறப்பு உண்டு. ரஷ்யாவில் நடைபெற்ற தாஷ்கண்ட் திரைப்பட விழாவில் கலந்து கொள்ள 'இதயக்கனி' தேர்வு செய்யப்பட்டது. வெளிநாட்டு திரைப்பட விழாவில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர் படம் என்ற பெருமையைப் பெற்றது 'இதயக்கனி'.**

புதிய விளம்பர உத்திகளையும் வீரப்பன் வகுத்தார். மூன்று தியேட்டர்களிலும் படம் 100 நாட்கள் ஓடி அமோக வெற்றி பெற்றது. அதன் பிறகு எம்.ஜி.ஆர் படங்களை திரையிடுவதில் சென்னையின் முக்கிய தியேட்டர் அதிபர்கள் ஆர்வம் காட்டினர். 'திருடாதே' படம் பட்டி தொட்டிகளிலும் ஓடி வசூலை வாரிக்குவித்தது. ராஜா ராணிக் கதைகளுக்குத்தான் எம்.ஜி.ஆர் பொருத்த மானவர் என்ற கருத்தையும் 'திருடாதே' தகர்த்தது.

எம்.ஜி.ஆரின் தாயார் பெயரில் சத்யா மூவிஸ் பட நிறுவத்தை தொடங்கிய ஆர்.எம். வீரப்பன், எம்.ஜி.ஆரை வைத்து எடுத்த முதல் வெற்றிப்படம் 'தெய்வத்தாய்.' அதிலிருந்து 'இதயக்கனி' வரை சத்யா மூவீஸின் 6 படங்களில் எம்.ஜி.ஆர் நடித்தார்.

எம்.ஜி.ஆரிடம் மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த வீரப்பன், அவருக்கே சம்பளம் கொடுப்பவராக மாறினார். சமயங்களில் வீரப்பனை எம்.ஜி.ஆர் "என்ன முதலாளி?" என்று ஜாலியாக அழைப்பது வழக்கம்.

முதல்வராகி தன் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்ட பிறகும், கடைசி வரை தனது 'கணக்குப் பிள்ளை'யான ஆர்.எம். வீரப்பனுக்கு மாத சம்பளமாக 500 ரூபாய் கொடுப்பதை எம்.ஜி.ஆர். நிறுத்தவேயில்லை.

தொடரும்...



## தங்கையான ஆனந்தி!

ஆனந்தி தமிழில்தான் அறிமுகமானவர் என்றுதான் பலரும் நினைக்கின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. அவர் ஏற்கனவே தெலுங்கில் சில படங்களில் நடித்துவிட்டார். அந்தப்படங்களில் கண்ணுக்கே தெரியாத சின்னஞ்சிறு வேடங்களில் நடித்திருந்ததால் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. பின்னர் தமிழுக்கு வந்தார். ஒரு கட்டத்தில் ஜி.வி.பிரகாஷ் படங்களில் மட்டும்தான் நடிப்பார் என்பது மாதிரியான அபிப்பிராயம் உருவானது. ஆனந்தி கையில் தற்போது இரண்டு படங்கள்தான் உள்ள. இரண்டும் ரிலீசுக்கு தயாராகி விட்டன. வேறு படங்கள் இல்லை. ஜி.வியுடன் சூடான கிசுகிசுக்கள் வந்ததால் மற்ற நாயகர்களும் ஆனந்தி பக்கம் திரும்பிப்பார்க்கவில்லை. இதனால் மீண்டும் தெலுங்குப்பக்கமே வலைவீச ஆரம்பித்தார். அதற்கு பலன் கிட்டியுள்ளது. பவர்ஸ்டார் பவன் கல்யாண் படத்தில் தங்கை வேடத்தில் ஆனந்தி ஒப்பந்தமாகியுள்ளார். தமிழில் வெளியான அஜித்தின் வேதாளம் ரீமேக்தான் இது. லட்சுமி மேனன் நடித்த பாத்திரத்தில் ஆனந்தி நடிக்கிறார்.

## விஜய்- விஷால் மோதல்

மீண்டுமொருமுறை விஜய் விஷால் மோதல் உறுதியாகியுள்ளது. வரும் பொங்கலன்று விஜயின் பைரவா வெளியாகும்போது, விஷாலின் கத்திச்சண்டையும் வெளியாகிறது. கடந்த தீபாவளியன்று கத்திச்சண்டை வெளியாகவிருந்தது. எனினும், காஷ்மோராவிற்காக வெளியீட்டை தள்ளிவைத்ததாக கூறப்பட்டது. பின்னர் நவம்பர் 18 திகதி குறித்து, ரூபாய் நோட்டு தடையால் பொங்கலுக்கு வெளியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. விஜய் விஷால் மோதல் இது மூன்றாவதுமுறை. முன்னர் போக்கிரி தாமிரபரணி, கத்தி பூஜை வரிசையில், பைரவா கத்திச்சண்டையும் இடம்பிடிக்கவுள்ளது.

## அப்பாக்கு வந்த சோதனை!

கஸ்தூரிராஜாவிற்கு வந்த சோதனையை பாருங்கள். நடிகர் தனுஷ் தனது மகன்தான் என கோயிலில் கற்பூரம் அடித்து சத்தியம் செய்யாதகுறையாக பேச வேண்டியதாயிற்று. காரணம், தனுஷ் தமது பிள்ளையென ஒரு தம்பதி வழக்கு தொடர்ந்தது. இதுபற்றி கஸ்தூரிராஜா பேசும்போது, "இந்த செய்தி வருத்தமாக உள்ளது. எனது நண்பர்களிற்கு தெரியும் தனுஷ் எனது மகன் என. மக்களிற்கு பயன்பட வேண்டிய நீதித்துறையின் நேரம் இதுபோன்ற பொய் வழக்குகளிற்காக விரயமாகிறது" என்றுள்ளார்.

## தம்பட்ட தமன்னா!

ஆரம்பகாலத்தில் கவர்ச்சியால் அட்டாக் பண்ணி வந்தவர் தமன்னா. பாகுபலியில் பாடல் காட்சிகளில் கவர்ச்சிமழை பொழிந்தாலும், நடிப்பில் புதிய அவதாரம் எடுத்தார். அதன்பின் பிரபுதேவாவுடன் தேவி படத்திலும் நடிப்பில் அசத்தினார். தமன்னாவிற்குள் இப்படியொரு திறமையா என மற்றவர்கள் ஆச்சரியப்பட ஆரம்பித்த சமயத்தில், தமன்னா அலப்பறை பண்ண ஆரம்பித்துள்ளாராம். தனது நண்பர் வட்டாரத்தில் யார் பேசினாலும், தனக்குள் இருக்கும் நடிகை பற்றித்தான் பேசுகிறாராம். "இதுவரை தமிழ் சினிமா தன்னை கவர்ச்சியாகத்தான் பயன்படுத்தியது. எனக்குள் இருக்கும் நடிகையை பாகுபலியில் ராஜமௌலிதான் தட்டியெழுப்பினார். பாகுபலி2 இல் அதிரடி அக்சன் காட்சிகளில் நடித்துள்ளேன். படம் வெளியானபின் தொடர்ந்து அக்சன் வேடங்கள் என்னை தேடி வரும்" என கூறுகிறாராம்.

# டூரிங் டாக்கீஸ்



## அம்மான்னா சும்மாவா?

வெண்ணிலா கபடிக்குழு2 படத்திலிருந்து நந்திதாவை நீக்கியுள்ளார் இயக்குனர் சுசீந்திரன். காரணம் நந்திதா அம்மாவாகியது. அதுவும் படத்தில். அது பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. நாயகிகள் என்றால் மரத்தை சுற்றி டூயட்பாடும் வட்டத்திலிருந்து நயன்தாரா, த்ரிஷா போன்றவர்கள் வெளியில் வந்துவிட்டனர். நல்ல கதைகளாக தேடி நடிக்கின்றனர். அவர்களின் பின்னால் இப்போது வந்துள்ள பூர்ணா, நந்திதா போன்றவர்களும் வித்தியாசமான வேடங்களை ஏற்கிறார்கள். சவரக்கத்தியில் பூர்ணாவும், செல்வராகவனின் நெஞ்சம் மறப்பதில்லையில் நந்திதாவும் அம்மா பாத்திரங்களில் நடித்தனர். நந்திதா அம்மா பாத்திரத்தில் நடிக்கும் செய்தியறிந்ததும் சுசீந்திரன் தனது படத்திலிருந்து நீக்கியுள்ளார். நாயகிகளை மரத்தை சுற்றி டூயட் பாட மட்டுமே இயக்குனர்கள் அனுமதிப்பார்கள் போல என்ற விமர்சனமும் கிளம்பியுள்ளது.

## விவாகரத்து விவகாரம்!

விவாகரத்து, மறுமணம் என்பதெல்லாம் ஒவ்வொருவரின் உரிமை. ஆனால் அது பிரபலங்களிற்கு நிகழும்போது பொதுவெளியில் பேசுபொருளாகி விடுகிறது. மலையாள நடிகர் திலீப் காவ்யா மாதவன் மறுமணம் அண்மையில் நடந்தது. திலீப் எற்கனவே நடிகை மஞ்சுவாரியாரை விவாகரத்து செய்தவர். அவரது திருமணத்திற்கு சமூக வலைத்தளங்களில் கடுமையாக எதிர்ப்பு எழ ஆரம்பித்துள்ளது. இந்த எதிர்ப்புக்கள் மஞ்சுவாரியாருக்கு ஆதரவாகவும் மாறுகின்றன. மஞ்சு இதுவரை வாய் திறக்காத நிலையில் திலீப் செய்தது தவறு என பரவலாக பதிவிடப்படுகிறது. திலீப் குறித்து அவதூறாக எல்லாம் பதிவுகள் வைக்கப்படுகின்றன. ஆனால் மஞ்சுவாரியார் தரப்பு இதுவரை நோ கொமண்ட்!

## மஞ்சிகா காட்டில் மழை!


ஏராளம் நடிகைகள் புதிதுபுதிதாக அறிமுகமாகிறார்கள். ஆனால் சமந்தா, கீர்த்தி சுரேஷ், ஸ்ரீதிவ்யா போன்ற சிலருக்குதான் உயரத்துக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கிறது. இந்த பட்டியில் இறுதியாக மஞ்சிமா மோகனும் இணையப் போகிறார் என்பதுதான் புதிய தகவல். அச்சம் என்பது மடமையடாவில் தமிழில் சிம்புவுடனும், தெலுங்கில் நாகசைதன்யாவுடன் நடித்தார். அவரது நடிப்பு சிறப்பாக இருந்ததுடன், இளவட்டங்களின் இதயத்தில் உட்கார்ந்தும்விட்டார். இதனை பார்த்து பல இயக்குனர்கள் அவரிடம் கதை சொல்ல முண்டியடிக்கின்றனர். சில முன்னணி நடிகர்களும் அம்மணியை தமது படங்களில் ஒப்பந்தம் செய்ய முயற்சித்து கொண்டிருக்கின்றனர். அந்த அறிவிப்புக்கள் விரைவில் வெளியாகவுள்ளன.

## என்ன செய்யப் போகிறார் விக்ரம்?

தனுஷை வைத்து என்னை நோக்கி பாயும் தோட்டா படத்தை முடிக்க முன்னரே விக்ரமை வைத்து ஒரு படத்தை ஆரம்பிக்கிறார் கௌதம் மேனன். ஹொலிவூட் படம் மாதிரி அது இருக்குமென வேறு விளம்பரம் செய்கிறார். விக்ரமிற்கும் கதை பிடித்து ஒகே சொல்லிவிட்டார். தற்போது விஜயசந்தர் படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் விக்ரம், இந்தப்படத்தில் நடித்துக்கொண்டே கௌதம் மேன் படத்திலும் நடிக்க நினைத்தார். ஆனால் கௌதம் உடன்படவில்லை. விஜயசந்தர் படத்திற்கு நான்கு மாத கால்சீட் கொடுத்துவிட்டதால் மாதம் 10 நாள் வீதம் தருவதாக விக்ரம் பேசிப்பார்த்திருக்கிறார். ஆனால் மொத்தமாக 60 நாள் வேண்டுமென்பதில் கௌதம் விடாப்பிடியாக இருப்பதால், விவகாரம் இழுபறியில் உள்ளது.

சிலநிமிடங்களில் ஒருகாவலாள் அப்பாவை அழைத்து வந்தான். சாமபல் நிற காச்சட்டையும், அதே நிறத்தில் கட்டைக்கைச் சட்டையும் போட்டிருந்த அப்பாவின் தலை மொட்டையடிக்கப்பட்டிருந்தது. தரையில் உட்காரச் சொல்லி அப்பாவிற்கு காவலாள் கட்டளையிட்டான். அப்பா வெட்கம் பிடுங்கித்தின்னக் கூனிக்குறுகியபடி தரையில் உட்காந்தார். நாங்கள் அவருடன் இருந்த முழுநேரமும் தலையை குனிந்தவாறே இருந்தார். அவர் என்னிடம் இரண்டொரு வார்த்தைகளே பேசினார். மார்ஜியிடம் தான் அவர் கூடுதலாகப் பேசினார். அப்பா மாறியிருக்கிறாரா எனக் கண்டு பிடிப்பதிலேயே எனது முழுக்கவனமும் இருந்தது. ஆனால் நான் அவரின் முகத்தில் ஒரு இறுக்கமான சிரிப்பைத்தவிர வேறு எதனையுமே என்னால் கண்டு பிடிக்கமுடியவில்லை. பேச்சு எங்கள் பாடசாலை, படிப்பு என வந்ததும் அப்பாவும் மார்ஜியும் கடுமையான வாய்த்தர்க்கத்தில் இறங்கினார்கள். எனக்கு அப்பாவைப் பார்க்க பரிதாபமாக இருந்ததால் நான் மார்ஜியை இந்த விவாதத்தை நிறுத்தச் சொல்லிக் கேட்டும் அவள் அடங்கவில்லை. காவலாளி அப்பாவை அவரது சிறைக்கூண்டுக்குத் திரும்பச் சொல்லி கட்டளையிட்டான். இதனால் அப்பாவிடம் சரியாக விடைபெறக் கூட என்னால் முடியவில்லை. என் கண்களில் பொங்கி வந்த நீர் மார்ஜியின் கோபத்திற்குக் கட்டுப்பட்டு நின்றது.





# குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

மார்ஜி கம்பாலாவிற்குச் சென்று விட்டாள். சிற்றன்னை என்னைப் பாடசாலைக்குச் செல்ல வேண்டா வெறுப்பாக அனுமதித்துக் கொண்டிருந்தார். ஆனால் தம்பி ரிச்சட் பண்ணைக்குத் திருப்பி அனுப்பப்பட்டான். புதுப்பாடசாலை சுவாரஸ்யமாக இருந்தது. எனது பழைய பாடசாலையின் ஆசிரியர்களை விட இங்கே ஆசிரியர்கள் புரிந்துணர்வு உள்ளவர்களாக இருந்தனர். கொஞ்ச நாட்களிலேயே நான் வகுப்பில் முதன்மை மாணவியானேன். ஆனால் சக மாணவர்களுடனான உறவில் சிக்கலுக்கு மேல் சிக்கல் ஏற்பட்டது. இவர்கள் தங்கள் இனக்குழுவை தீவிரமாக வெறுத்தார்கள். எனது முகவெட்டும் உதடுகளின் அமைப்பும் வெளிறிய தோலும் என்னை சக மாணவர்களிடமிருந்தும் புறம்பானவளாக ஒரு துற்சியென அடையாளம் காட்டிக் கொண்டே இருந்தது.

மார்ஜி வீட்டை விட்டுப் போன பின்பு, சிற்றன்னை கிழமைக்கு ஒன்றாக மாடுகளை விற்கத் தொடங்கினார். எனது பாடசாலைக் கட்டணத்தை செலுத்துவதற்கு பணம் தேவைப்படுகின்றது என்பது அவர் வாதம். அவரின் சகோதரிகள் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து போகத் தொடங்கினார். அப்பாவால் விரட்டியடிக்கப்பட்ட சிற்றன்னையின் தாய் ஜேனும் தங்கை கிறிஸ்ரினாவும் ஒவ்வொரு மாலையும் வீட்டிற்கு வரத் தொடங்கினார். எங்களின் பணத்தை அவர்கள் தாராளமாகத் தின்றனர். கடைசியில் கிறிஸ்ரினா எங்கள் வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டாள்.

சிற்றன்னை எப்போதாவது ஒருமுறை தான் சிறைச்சாலைக்குச் சென்று அப்பாவைப் பார்த்து வந்தார். அப்பா சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகாமலே போகலாம். அதே போல சிற்றன்னை அப்பாவின் பணம் முழுவதையும் அபகரித்துக் கொண்டு என்னை வீட்டை விட்டும் விரட்டியடிக்கலாம். அப்பா ஒரு தீய மனிதர். அவர் சிறைச்சாலையிலிருப்பது நியாயமானது. அது அவராகவே தேடிக் கொண்டது தான். ஆனால் சிற்றன்னையிடமிருந்து "தட்டிச் சுத்தும்" சிற்றன்னையின் குடும்பத்திடமிருந்து என்னைக் காப்பாற்றக்கூடியவரும் அவர் தான்.

பாடசாலையில் நான் சிரமப்படத் தொடங்கினேன். எனக்குப் பாடங்களில் கவனம் செலுத்துவது இயலாத காரியமாக இருந்தது. படிப்பில் மற்ற மாணவர்களிடமிருந்து நான் பின் தங்கினேன். ஆசிரியர்கள் என்னை எதுவென்று விசாரித்த போது என்னால் அவர்களுக்கு பதில் எதையும் தரமுடியவில்லை.

ஒருநாள் பாடசாலையிலிருந்து திரும்பி வந்தபோது நான் மார்ஜி வந்துகொண்டிருப்பதைக் கண்டேன். அவளை வரவேற்கக்கூட மறந்து எனது பாடசாலைப் பையை வீசி எறிந்துவிட்டு எல்லோரிடமும் அவளது வரவை உற்சாகத்துடன் சத்தமிட்டு அறிவித்தேன். எனது எதிரிக்கும் அவளின் வரவு தெரியவந்தது. மார்ஜி பலம் பொருந்தியவள், உறுதியானவள். பல தடவைகள் என்னைச் சிற்றன்னையிடமிருந்து காப்பாற்றியவள். அன்று இரவுக்குள்ளாகவே மார்ஜி தனது சிற்றன்னையுடன் தனது தர்ம யுத்தத்தை தொடங்கிவிட்டாள். மாடுகள் விற்பதை சிற்றன்னை நிறுத்தாவிட்டால் அவளை அடிக்கப் போவதாக மார்ஜி சிற்றன்னையை எச்சரித்தாள். அவள் அதைச் செய்யக் கூடியவளும் கூட மார்ஜி வீட்டு நிர்வாகத்தை தன் கையில் எடுத்துக் கொண்டாள்.

சில வாரங்களின் பின்பு அப்பா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அப்பாவை சிறையிலிருந்து மார்ஜி தான் கூட்டி வந்தாள். மறுபடியும் நான் பாடசாலைக்குச் செல்வது தடைப்படலாம். என எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. ஆனால் வீட்டிற்கு வந்த அப்பா ஒரு நல்ல தகப்பனாக இருக்க உண்மையில் முயன்றார்.

(தொடரும்)



# அந்தநாள் நினைவு

ரஜினிக்கு தடை!

1993ம் ஆண்டு.. அப்போது விநியோகஸ்தர்கள் சங்கம் பிரபலமாக இருந்தது. சங்கம் நினைத்தால் எந்த படத்தையும் தடுக்க முடியும், எந்த நடிகரையும் நடிக்கவிடாமல் செய்ய முடியும். அந்த நேரத்தில் நடிகர்கள் தங்கள் சம்பளத்தை குறைக்க வேண்டும் என்று கூறி வேலை நிறுத்தம் அறிவித்தது விநியோகஸ்தர்கள் சங்கம். இதனால் எந்த நடிகரும் சம்பளத்தை குறைக்க முன்வரவில்லை. எந்த படப்பிடிப்பும் நடக்கவில்லை. ஒரே ஒரு படத்தின் படப்பிடிப்பு மட்டும் நடந்தது. அது ரஜினி நடித்த உழைப்பாளி.

"என் உழைப்புக்கான சம்பளத்தை நான்தான் நிர்ணயிப்பேன். இவர்கள் யார் அதை நிர்ணயம் செய்வதற்கு?" என்று ரஜினி கேள்வி எழுப்பினார். படத்தை நிறுத்த பல முயற்சிகள் நடந்தது. ஆனால் 58 நாளில் படத்தை முடித்தார் ரஜினி. விநியோகஸ்தர்கள் சங்கம் ரஜினிக்கு ரெட்கார்ட் போட்டது. படத்தை வெளியிட தியேட்டர்களுக்கு தடைபோட்டது. ஆனால் ரஜினி "என் பின்னால் வருகிறவர்கள் வாருங்கள்" என அழைத்தார். சில தியேட்டர் அதிபர்கள் வந்தார்கள். அவர்கள் மூலம் படத்தை வெளியிட்டார். படம் 100 நாட்கள் ஓடியது. மதுரையில் 150 நாள் ஓடியது. பின்னர் ரஜினியிடம் மன்னிப்பு கேட்டது சங்கம். பிரச்சினை சுமூகமாக தீர்ந்தது.

உழைப்பாளி படத்தில் ரஜினியுடன் ரோஜா, ஸ்ரீவித்யா, சுஜாதா, ராதாரவி, நிழல்கள்ரவி, எஸ்எஸ் சந்திரன் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர் விஜயா கம்பைன்ஸ் சார்பில் வெங்கட்ராம ரெட்டி தயாரித்திருந்தார். பி.வாசு இயக்கி இருந்தார். இளையராஜா இசை அமைத்திருந்தார்.




மணிரத்னம் படம் என்றாலே அதில் ஒரு வித்தியாசம் இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இவருடைய கதைக்களம் பழக்கப்பட்டதாக இருந்தாலும் வேறொரு கோணத்தில் பார்வையாளர்களைச் சென்றடையக் கூடியதாக இருப்பது இவருடைய சிறப்பு. 1992இல் வெளிவந்த "ரோஜா" திரைப்படம் அவரது சிறப்புக்களில் ஒன்று. தீவிரவாதத்தைப் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் புதியதோர் கோணத்தில் சொல்லியிருந்த இப்படத்தில் அரவிந்தசாமி, மதுபாலா போன்ற பலர் நடித்திருந்தனர்.

மதுபாலாவின் அக்காவைப் பெண் பார்க்க வரும் அரவிந்தசாமி சந்தர்ப்பவசத்தால் மதுபாலாவைத் திருமணம் செய்ய நேர்கின்றது. ஆரம்பத்தில் திருமண வாழ்க்கையை வெறுக்கும் மதுபாலா, பின்னர் தன் கணவனிடத்தில் தவறு இல்லை என்று தெரிந்ததும் கணவனுடன் ஐக்கியமாகின்றார். இருவரும் தேன்நிலவுக்காகக் காஷ்மீர் செல்லும் இடத்தில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்படுகின்றார் அரவிந்தசாமி. தன் கணவனைக் காப்பாற்ற மதுபாலா எப்படி எல்லாம் முயற்சி செய்கின்றார்? இறுதியில் எப்படிக் காப்பாற்றினார்? என்பதே இப்படத்தின் கதை. தீவிரவாதத்தினால் ஏற்படும் பொதுவான பிரச்சினைகளை விடுத்துத் தனி மனித வாழ்வில் தீவிரவாதத்தின் நிழல் படிகையில் ஏற்படும் மாற்றங்களை விலாவாரியாய் இப்படத்தில் விவரித்து இருந்தார் மணிரத்னம்.

படத்தின் கதாநாயகன் அரவிந்தசாமியை விடவும் படத்தின் கதை தான் அதி முக்கியத்துவம் மிக்கதாக விளங்கியது. ஒரு சாதரண மனிதனின் வாழ்வியலில் ஏற்படும் எதிர்பாராத மாற்றம் அவனை எந்த அளவிற்குப் பாதிக்கின்றது என்பதை இங்கே சுட்டிக் காட்டியிருந்தார் மணிரத்னம். இப்படத்தில் "எதிர்பாராத மாற்றமாக" இவர் அவர் தெரிவு செய்தது தீவிரவாதத்தை. தீவிரவாதத்தைப் பற்றிய படங்கள் இன்றை வரைக்கும் அதிகளவில் (விஜயகாநத்; ரசிகர்களுக்குத் தெரிந்திருக்கும்) வந்திருந்தாலும் அவற்றுக்குள் "ரோஜா"வுக்கான இடம் தனி. பிற்பாடு வந்த "உயிரே" திரைப்படமும் இதைப் பற்றிச் சொல்லியிருந்தாலும் அதன் கோணம் வேறாக இருந்தது. (உயிரே திரைப்படமும் மணிரத்னத்தினுடையது தான்)

தன் கணவனுக்காக எமனையே எதிர்த்த சாவித்திரியை நினைவுபடுத்துவதாக அமைந்திருந்தது 'மதுபாலா'வின் கதாப்பாத்திரம். தன் கணவனைக் காப்பாற்றுவதற்கு அவர் எடுக்கும் முயற்சிகள் அதற்காக அவர் சந்திக்கும் மனிதர்கள்... அவர்களுடனான அனுபவங்கள்...என்று ஒரு கனமான பாத்திரம் அவர் மேலே சுமத்தப்பட்டிருந்தாலும் கொஞ்சமும் அசராமல் அநாயாசமாக அவற்றையெல்லாம் செய்திருந்தார் மதுபாலா. "ஒவ்வொரு தீவிரவாதி வீட்டிற்கும் போகப் போறேன். அவங்க பொண்டாட்டிங்ககிட்ட பேசப் போறேன். அவங்க மனசிலையும் இரக்கம் இருக்கும்ல?" என்று உணர்ச்சி பூர்வமாகப் பேசும் இடத்தில் அனைவரையும் மிஞ்சி விடுகின்றார் மதுபாலா. காதல், குறும்புத்தனம், கோபம், பரிதவிப்பு, துக்கம் என்று அத்தனை உணர்வுகளையும் அவர் காட்டும் விதம் அபாரம். (மணிரத்னத்தின் பயிற்சி அந்த அளவிற்கு இருந்தது.)

அரவிந்தசாமியும் நடிப்பில் சளைக்காமல் போட்டி போட்டு நடித்திருந்தார். "காதல் ரோஜாவே..." பாடலில் அவரது நடிப்பைப் பாராட்டாதவர்கள் இல்லை. அழகான, நடிக்கத் தெரிந்த நடிகர் என்று இவரை உயர்த்தியது "ரோஜா" தான் என்றால் அது உண்மையே. ("அரவிந்தசாமி போல் மாப்பிள்ளை வேண்டும்" என்ற வாக்கியம் அந்தக் காலத்தில் உலவியதே இதற்கான சாட்சி). இதற்குப் பின்னர் அரவிந்தசாமியின் படங்களை "ரோஜா"வுடன் ஒப்பிட்டுப் பார்த்தே சினிமா விமர்சகர்கள் மதிப்பீடு செய்து கொண்டனர். "ரோஜா"வின் தாக்கம் அந்தளவில் இருந்தது.

ஏ.ஆர்.ரஹ்மானை இந்தப் படத்தில் இசையமைப்பாளராக அறிமுகப்படுத்தியிருந்தார் மணிரத்னம். ரஹ்மானும் எடுத்த எடுப்பிலேயே புயல் வேகம் காட்டினார். "சின்ன சின்ன ஆசை" பாடல் அவருக்குச் சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதையும், பிலிம்பேர் விருதையும் ஒருசேர வாங்கிக் கொடுத்தது. அது தவிர இந்தப் படத்தின் "காதல் ரோஜாவே" பாடலுக்குத் தான் இன்றும் சோக கீதங்கள் வரிசையில் முதல் இடம். இவை இரண்டையும் தவிர்ந்து "புது வெள்ளை மழை..."பாடல் இன்னொரு ரகமாக அமைந்திருந்தது. பாடகி சுஜாதாவை இப் பாடல் மூலம் திரையுலகத்திற்கு மீள் அறிமுகம் செய்திருந்தார் ஏ.ஆர்.ரஹ்மான். ஒரு விடயம் கவனித்தால் புரிந்திருக்கும் ரோஜாவுக்கு முன் இளையராஜாவையும் ரோஜாவுக்குப் பின் ஏ.ஆர்.ரஹ்மானையும் தனது ஆஸ்தான இசையமைப்பாளராகப் பயன்படுத்தினார் மணிரத்னம். இதனை ரோஜாவின் வெற்றியின் விளைவு என்றும் சொல்லலாம்.

இந்தப் படத்தின் அனைத்துப் பாடல்களையும் எழுதியிருந்தார் கவிஞர் வைரமுத்து. ஆறு பாடல்கள் இப் படத்தில் இடம் பெற்று இருந்தன. படத்தின் கதை வசனங்களை மணிரத்னம், சுஜாதா போன்றோர் எழுதியிருந்தனர். இவற்றோடு ஒளிப்பதிவும் படத்தின் பலமாய் அமைந்தது. காஷ்மீர் பகுதியைச் சிறப்பாயக் காட்டியிருந்தார் ஒளிப்பதிவாளர் சந்தோஸ் சிவன். இப்படிப் பல விதத்திலும் சிறப்பான கையாள்கையைப் பெற்ற இத் திரைப்படம் 'டைம்' பத்திரிகை வெளியிட்ட சிறந்த இசையமைப்பைக் கொண்ட 100 படங்களில் 10வது இடத்தைப் பெற்றமையானது இப் படத்திற்கான உச்சமான பெருமையாகும். ●

---




சம்சுங் நிறுவனம் கிளோசி ப்ளக் (glossy black) வகை கொண்ட கலக்ஸி எஸ்7 எட்ஜ் ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்தியுள்ளது. 128ஜிபி உள்ளடங்கிய சேமிப்பு கொண்ட இந்த சம்சுங் கலக்ஸி எஸ்7 எட்ஜ் ஸ்மார்ட்போன் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சம்சுங் கலக்ஸி எஸ்7 எட்ஜ் எஸ்7 எட்ஜ் வகை ஸ்மார்ட்போன், ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட ப்ளக் ஓனிக்ஸ் வகையின் மற்றொரு ப்ளக் வகை ஸ்மார்ட்போனாகும். மேலும் தற்போது சம்சுங் கலக்ஸி எஸ்7 எட்ஜ் ஸ்மார்ட்போன் ப்ளக் ஓனிக்ஸ், கோல்ட் பிளாட்டினம், பேர்ள் வைட், சில்வர் டைட்டானியம், மற்றும் பிங்க் கோல்ட் ஆகிய வண்ண வகைகளில் கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

டுயல் சிம் ஆதரவு கொண்ட சம்சுங் கலக்ஸி எஸ்7 எட்ஜ் ஸ்மார்ட்போனில் அண்ட்ரோய்ட் 6.0 மார்ஷ்மெல்லோ மூலம் இயங்குகிறது. சம்சுங் கலக்ஸி எஸ்7 எட்ஜ் ஸ்மார்ட்போனில் 534ppi பிக்சல் அடர்த்தி மற்றும் 1440X2560 பிக்சல்கள் தீர்மானம் கொண்ட 5.50 இன்ச் எச்டி ஐபிஎஸ் டிஸ்ப்ளே இடம்பெறுகிறது. இந்த ஸ்மார்ட்போனில் 4ஜிபி ரம் உடன் இணைந்து 1.6GHz அக்டா கோர் ப்ரசசர் மூலம் இயக்கப்படுகிறது.

இதில் மைக்ரோSD அட்டை வழியாக 200ஜிபி வரை விரிவாக்கக்கூடிய 128ஜிபி உள்ளடங்கிய சேமிப்பு உடன் வருகிறது. சம்சுங் கலக்ஸி எஸ்7 எட்ஜ் ஸ்மார்ட்போனில் எல்இடி ஃபிளாஷ் கொண்ட 12 மெகாபிக்சல் பின்புற கமரா மற்றும் 5 மெகாபிக்சல் முன் எதிர்கொள்ளும் கமரா கொண்டுள்ளது.

இந்த கைப்பேசியில் 3600mAh பற்றரி திறன் மூலம் இயக்கப்படுகிறது. ஸ்மார்ட்போனின் இணைப்பு விருப்பங்களாக, Wi-Fi 802.11 a/b/g/n/ac, ஜிபிஎஸ்/ஏஜிபிஎஸ், ப்ளூடூத் 4.20, NFC, USB OTG, 3.5மிமீ ஓடியோ ஜாக், ஜிஎஸ்எம், 3ஜி, 4ஜி எல்டிஇ மற்றும் மைக்ரோயூஎஸ்பி ஆகியவை வழங்குகிறது. இதில் 150.90X72.60X7.70mm நடவடிக்கைகள் மற்றும் 157 கிராம் எடையுடையது.

**சம்சுங் கலக்ஸி எஸ்7 எட்ஜ் ஸ்மார்ட்போன் விவரங்கள்:**

டுயல் சிம்

**பொது**

வடிவம் காரணி: டச் ஸ்கிரீன்
நடவடிக்கைகள் (mm): 150.90x72.60x7.70
எடை (கி): 157
பற்றரி திறன் (mAh): 3600
நீக்கக்கூடிய பற்றரி: இல்லை
வண்ணங்கள்: கிளோஸி ப்ளக்

**டிஸ்ப்ளே**

திரை அளவு: 5.50
டச் ஸ்கிரீன்: ஆம்
தீர்மானம்: 1440x2560 பிக்சல்கள்
பிக்சல்ஸ் பெர் இன்ச் (PPI): 534

**ஹார்ட்வெயார்**

ப்ரசசர்: 1.3GHz அக்டா கோர் மீடியாடெக் MT6753
ரம்: 4ஜிபி
உள்ளடங்கிய சேமிப்பு: 128ஜிபி
விரிவாக்கக்கூடிய சேமிப்பு: ஆம்
விரிவாக்கக்கூடிய சேமிப்பு வகை: மைக்ரோSD
(ஜிபி) வரை விரிவாக்கக்கூடிய சேமிப்பு: 128

**கமரா**

பின்புற கமரா: 13 மெகாபிக்சல்
ஃப்ளாஷ்: ஆம்
முன் கமரா: 5 மெகாபிக்சல்

**சொஃப்ட்வெயார்**

ஒப்பரேட்டிங் சிஸ்டம்:
அண்ட்ரோய்ட் 6.0 மார்ஷ்மெல்லோ

**இணைப்பு**

Wi-Fi 802.11 a/b/g/n/ac
ஜிபிஎஸ்/ஏஜிபிஎஸ்
ப்ளூடூத் 4.20
NFC
USB OTG
3.5மிமீ ஓடியோ ஜாக்
மைக்ரோயூஎஸ்பி
ஜிஎஸ்எம்
3ஜி
4ஜி எல்டிஇ

**சென்சார்கள்:**

காம்பஸ்/மக்னேடோமீட்டர்
ப்ரொக்ஷிமிட்டி சென்சார்
அச்செலேரோமீட்டர்
அம்பியண்ட் லைட் சென்சார்
கைரோஸ்கோப்
பாரோமீட்டர்,




- குப்பிழான்
ஐ.சண்முகன்



# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 14

**1970**களின் தொடக்கத்திற்கு சற்று முன்பின்னாக இயங்கத் தொடங்கி, ஐந்நூறு வருடகாலம் கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம் உயிர்ப்புடன் இயங்கியது. ஒருவகையில் இது யாழ் இலக்கியத்தின் நண்பர் கழகத்கின் தொடர்ச்சியான இயக்கம் எனவும் கூறலாம். முன்னைய கழகத்தின் இயங்கு இயக்கவிசையாக இருந்த மாவை.நித்தியானந்தனே இங்கு முக்கிய செயற்பாட்டாளராக இயங்கினார். இன்று யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் (வன்னி) வெற்றிகரமாக இயங்கிக் கொண்டு இருக்கும் "கை கொடுக்கும் நண்பர்கள்" அமைப்பு, "நிலை பேறான வாழ்க்கை அபிவிருத்தி" அமைப்பு ஆகியவற்றின் பின்னணியிலும் இவரே இருந்து இயக்குகின்றார். தவிர அவுஸ்ரேலியாவில் தமிழ் கற்பித்தலின் முக்கிய நிறுவனங்களில் "பாரதி தமிழ் பாடசாலை" அமைப்பின் நிறுவன இயக்குனராகவும் இவரே உள்ளார்.

மாவை.நித்தியானந்தன், நான், சாந்தன் மூவரும் இரண்டு கழகங்களினதும் உறுப்பினர்களாவோம். அண்ணா.இராசேந்திரம், இமையவன், யேசுராசா, நெல்லை.க.பேரன், தில்லைக்கூத்தன், மு.பொன்னம்பலம், கிருஷ்ணபிள்ளை, ஸ்ரீநரசர்மா, தியாகராசா, ஸ்ரீரங்கன், காவலுலீர் சிவபாலன், முத்து. இராசரத்தினம் ஆகியோர் கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தின் முக்கிய உறுப்பினர்களாவார். இவர்களைத் தவிர தில்லை.நடராசா, மு.நேமிநாதன், கே.எஸ் பாலச்சந்திரன், பாலேந்திரன் ஆகியோரும் கழகச் சந்திப்புக்களில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். ஆவணங்கள் பேணப்படாமையால் இன்னும் ;சிலரை



நான் தவறவிட்டிருக்கக் கூடும்.

ஆரம்ப காலங்களில் கழகச் சந்திப்புக்கள் நண்பர்களின் அறைகளிலேயே நிகழ்ந்தன. பின்னர் பாடசாலை வகுப்பறைகளிலும், சங்கக் கட்டிடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டன. சிறிய பாடசாலைகளின் காவலாளிகளுக்கு இரண்டு-மூன்று ரூபாய் கொடுத்துவிட்டு, அப் பாடசாலைகளின் வகுப்பறைகளில் சந்திப்புக்களை நடத்தினோம். தமிழ் சங்ககட்டிடம், எழுதுவினைஞர் கட்டிடம் என்பவற்றிலும் சந்திப்புக்களை நடத்தினோம். ஒருமுறை எழுதுவினைஞர் சங்க கட்டிடத்தில் நிகழ்ந்த சந்திப்பில், பேராசிரியர் கா. சிவதம்பி "இன்றைய தேக்க நிலை" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கியிருக்கிறார்.

வெள்ளவத்தை புகையிரத நிலையத்துக்கு அருகில், கடற்கரையில் ஒருமுறை சந்தித்தோம். கொஞ்ச இளைஞர்கள் கூடியிருப்பதாக பொலிசுக்கு யாரோ தகவல் கொடுத்து விட்டார்கள் போலிருந்தது. திடுதிப்பென்று பொலிஸ் எங்களைச் சுற்றி வளைத்தது. ஜீப்பில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரிப்பதற்காக இரண்டொரு நண்பர்கள் ஏறியும் விட்டார்கள். எங்கள் நிலையை அறிந்த பொறுப்பதிகாரி, அந்த இடத்திலேயே எங்களை விட்டு, புத்திமதி கூறிவிட்டு போய்விட்டார்.

கழகச் சந்திப்புக்களில் கொழும்பில் நடக்கும் நாடகங்கள், தமிழ் விழாக்கள், திரைப்பட விழாக்கள் பற்றிக் கலந்துரையாடுவோம். அவரவர் தங்கள் தங்கள் கருத்துக்களை கூற, அவற்றை ஒட்டியும் வெட்டியும் விவாதங்கள் நிகழும். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவரும் நண்பர்களின் படைப்புக்கள் பற்றியும் விமர்சனங்கள் இடம்பெறும். நண்பர்கள் தாங்கள் புதிதாக எழுதிய சில படைப்புக்களை வாசித்துக் காட்டி, மற்றவர்களின் கருத்துக்களை கேட்பார்கள். பொருத்தமான கருத்துக்களை ஏற்று திருத்தமும் செய்வார்கள். சஞ்சிகைகள், நூல்கள் பற்றிய அறிமுகங்களும், விமர்சனங்களும் இடம்பெறும்.

எழுத்தாள நண்பர்களின் நாலைந்து படைப்புக்களை கோவைப்படுத்தி, மற்ற நண்பர்களிடம் வாசிக்கக் கொடுத்து அவை பற்றிய விமர்சனக் கூட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டன. இவ்வாறு என்னுடையதும், நெல்லை.க.பேரன், முத்து இராசரத்தினம் ஆகியோரினதும் கோவைப்படுத்தப்பட்ட சிறுகதைகள் விமர்சிக்கப்பட்ட ஞாபகங்கள் உண்டு. வேறு நண்பர்களது படைப்புக்களும் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். நூலாக வெளி வருதற்கு முன் தங்கள் படைப்புக்கள் பற்றிய குறைநிறைகளை அறிந்து கொள்ள இந்த நிகழ்வுகள் எங்களுக்கு உதவியாக இருந்தன. இதன் பின்னரே என்னுடைய "கோடுகளும் கோலங்களும்", நெல்லை.க.பேரனின் "ஒருபட்டதாரி நெசவுக்குபோகிறான்", முத்து. இராசரத்தினத்தின் "சிலந்தி வயல்" ஆகிய சிறுகதைகள் வெளிவந்தன.

இக் காலங்களில் இலங்கை வானொலியில் 'கலைக கோலம்' என்றோர் சஞ்சிகை நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த நிகழ்ச்சியை நடாத்தும் நிகழ்ச்சி தயாரிப்பாளரின் ஆளுமைக்கேற்ப நிகழ்ச்சின் தரம் வேறுபட்டிருக்கும். வேறு வெளிப்பாட்டுச் சாதனங்கள் இல்லாத அக் காலங்களில் எங்களைப்போன்ற படைப்பார்வம்கொண்ட இளைஞர்கள் அந் நிகழ்ச்சியை பார்த்து பயனடைவோம். பல புதிய விடயங்களை அறிந்துகொள்வோம். இதுபற்றிய ஒருவிமர்சன அரங்கை கழகம் ஒழுங்கு செய்தது. குறிப்பிட்ட காலத்திற்கு (ஒரு மாதமோ இரண்டு மாதமோ) கலைக்கோலம் நிகழ்ச்சிகளை ஒழுங்காக கேட்குமாறு கழக அங்கத்தவர்கள் வேண்டப்பட்டு அதன் பிறகே, குறிப்பிட்ட காலத்திற்குரிய விமர்சனக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. அதற்கு 'கலைக்கோலம்' நிகழ்ச்சி தயாரிப்பாளரும் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அதில் இடம்பெறப் போகும் காரசாரமான விமர்சனங்களை எதிர்பார்த்தோ அல்லது வேறு காரணங்களுக்கோ அவர் நிகழ்ச்சிக்கு வரவில்லை. எதிர்பார்த்தது போலவே காரசாரமான விமர்சனங்களுடனே கூட்டம் நிகழ்ந்தது. அதற்கான அறிக்கையும் இலங்கை வானொலிக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அதன் விளைவாக, தரமான நிகழ்ச்சி தயாரிப்பாளர் நியமிக்கப்பட்டு, நிகழ்ச்சிகளும் தரமானதாகவே ஒலிபரப்பப் பட்டதென்றும் சொன்னார்கள்.

இந்தக் கூட்டத்திலேயே இன்னொரு நிகழ்வும் நடந்தது. அப்போது விடுதலையை அண்மித்துக் கொண்டிருந்த வியட்நாம் நாட்டை வாழ்த்தி ஒரு கவிதா நிகழ்வு நடத்தப் பட்டது. 'வீர வியட்நாமிற்கு கவிதாஞ்சலி' என்ற தலைப்பில் நானும் ஒரு கவிதையை வாசித்தேன். அந்தக் கவிதை இவ்வாறு முடிந்தது.

வீர வியட்நாமே!
உன் வெற்றிக் கீதத்தை
கேட்கும் நாளும் கடுகி வருகிறது
அப்போதும்,
கீழ் வானம் சிவக்கும்;
சிவப்புக் கொடிபறக்கும்;
மேல் வானும் சிவக்கும்,
மேதினியில் மானுடத்தின் மேன்மை
யெல்லாம் கிடைக்கும்.

இந்தக் கவிதையை வாசித்து முடித்ததும் அக் கூட்டத்தில் சமூகம் அளித்திருந்த முருகையன் "அதென்ன வீரவியட்நாம், வீவி இதென்ன எதுகை மோனையா" என எள்ளல் தொனியில் ஒரு விமர்சனத்தை முன்வைத்தார். அக் கூட்டத்திற்கு வந்திருந்த விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன் அதற்கு பதிலளித்து கவிதையை பாராட்டி பேசினார்.

இக் காலத்திலேயே தென்னந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் சில சஞ்சிகைகளுக்கும், நூல்களுக்கும் இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது. சிலவற்றின் இறக்குமதியை மட்டுப்படுத்தி இருந்தது. இவ்வாறு செயற்படுவதற்கு முன்பு இது பற்றிய ஆராய ஒரு குழுவையும் நியமித்திருந்தது. அக் குழுவினர் இலக்கியவாதிகளிடமிருந்தும் அவர்களது அபிப்பிராயங்களை கோரி இருந்தனர்.

அப்போது கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழக செயலாளராக இருந்த நான் கழகத்தின் சார்பில் சில ஆலோசனைகளை முன்வைப்பதற்கான திகதியை ஒதுக்கி தருமாறு விண்ணப்பித்திருந்தேன். ஒருநாள் மாலையில் எனக்கு ஒரு தந்தி கிடைத்து. அடுத்தநாள் காலை ஒன்பதோபத்தோ மணியளவில் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து ஆலோசனைகள் வழங்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

உடனடியாகவே செயற்பட்டு அறிவிக்கக் கூடிய அங்கத்தவர்களுக்கு அறிவித்து அடுத்த நாள் காலை குறிப்பிட்ட அலுவலகத்திற்கு சென்றோம். நண்பர்கள் சாந்தன் (தலைவர்), மு.பொன்னம்பலம், இமையவன், சிவபாலன் என்பவர்களோடு இன்னும் இரண்டொருவர் வந்ததாக ஞாபகம்.

அங்கு விசாரணைக் குழுவினர் ஆங்கில மொழியிலேயே எங்கள் ஆலோசனைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். நாங்கள் அதனை ஆட்சேபித்தோம். எங்களது தாய்மொழியான தமிழிலேயே ஆலோசனைகளை வழங்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டோம். அவர்கள் ஒருவாறு முயற்சி செய்து அந்த அமைச்சில் மொழி பெயர்ப்பாளராக இருந்த ஒருவரை அழைத்து வந்தனர். அவர் எங்களது இலக்கிய செயற்பாடுகளைப் பற்றி ஏதும் அறியாதவர். தமிழ் நூல்களையோ, சஞ்சிகைகளையோ பெரிதும் வாசித்திராதவர். என்றாலும் அவர் ஊடாகவே எங்களது ஆலோசனைகளை சொல்ல முன்வந்தோம்.

தொடர்ந்து வந்த காலத்தில் குழுவின் அறிக்கை வெளிவந்த போது எங்களது ஆலோசனைகளை தொண்ணூறுவீதம் இடம் பெற்றிருந்தது. அதன் அடிப்படையிலே இந்தியாவிலிருந்து இறக்குமதி சஞ்சிகைகளுக்கான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன. பல்வேறு தனிப்பட்டவர்களும், அமைப்புக்களும் இந் நடவடிக்கைகளுக்கான உரிமையை கோரியிருந்த போதிலும் நாங்களே அதற்கான உண்மையான தகுதி வாய்ந்வர்களாவோம்.

இந்த முன்னெடுப்புகளால் இலங்கை தமிழ் இலக்கிய சூழலில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. புதிய புதிய எழுத்தாளர்கள் உருவானார்கள். வீரகேசரி பிரசுராலயத்தின் மூலம் ஏறத்தாழ ஐம்பதுக்கு மேற்பட்ட ஈழத்து நாவல்கள் வெளிவந்தன. அமோகமாக விற்பனையாகின. ஈழத்து எழுத்தாளர்கள் பற்றிய மதிப்பும் உயர்ந்தது. இவற்றையிட்டு கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தினராகிய நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

அடிப்படையில் ஒரு நிருபரான எங்கள் கழக நண்பன் எழுத்தாளர் நெல்லை.க.பேரன் கழகத்தின் செயற்பாடுகளை பிரபல்யப்படுத்தினார். மல்லிகை, ஈழநாடு ஆகியவற்றில் கழக கூட்டங்கள் பற்றிய விரிவான அறிக்கைகள் வெளிவர அவர் காரணமாயிருந்தார். சில வேளைகளில் கொழும்பு பத்திரிகைகளிலும் அவரது அறிக்கைகள் பிரசுரமாகின.

குழக நண்பன் ஒருவனின் அறையில் நிகழ்ந்த ஒரு இலக்கியச் சந்திப்பு நிகழ்வின் சுற்றுப்புற சூழல் காட்சிகளால் பாதிக்கப்பட்டு, நண்பன் பேரன் ஒரு கதை எழுதியிருந்தான். 'சூரியன் மேற்கே தான் உதிக்கின்றது' என்ற அந்தக் கதையை கழக நண்பர்களுக்கு வாசித்தும் காட்டினான். அது எங்கும் பிரசுரமானதாகத் தெரியவில்லை. சூரியன் மேற்கில் உதிப்பதில்லை தானே!

(தொடரும்)

# பேய்களை நம்பலாமா?

வன்னிமது

பேய் இருக்கின்றதா? கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதை போல இந்தக் கேள்விக்கும் எத்தனை பட்டிமன்றம் வைத்தாலும் தமிழ் சமூகம் இன்னும் விடை கண்டுபிடிக்கவில்லை. இன்னும் எத்தனை காலமானாலும் கண்டுபிடிக்குமென்பதற்கும் உத்தரவாதமில்லை.

நம்மில் பெரும்பாலானவர்கள் பேயை தீவிரமாக நம்புபவர்கள். சைக்கிளில் தனியாக வரும்போது பின்னால் இருந்தது, திடீரென முன்னால் தோன்றி மறைந்தது, தூரத்தில் நடந்து போனது, 'அந்தா.. அதுலதான் குந்திக்கொண்டிருந்தது'... இப்படி ஏராளம் கதை சொன்னவர்கள்தானே நாம். சின்ன வயதில் தாத்தா, பாட்டிகள் சொன்ன முக்கிய கதையே பேய்க்கதைதான். 'இப்பிடித் தான் தாத்தாவின் அப்பா வல்லை வெளிக் குள்ளால வண்டியில அளம்பில் ஏத்தி வரேக்க திடீரென்டு பேய் முன்னால வந்து; வண்டில் ஏறி இருந்திட்டுது. அவர் துவரம் கம்பால ஓங்கி அடிச்சார். பேய்க்கு கோபம் வந்திட்டுது. அவர்ர முகத்தில ஓங்கி அடிச்சுது. அவ்வளவுதான். ஆள் மயங்கி விழுந்திட்டார். ஆனால் அந்த மாடு ரெண்டும் சோக்கானதுகள். அவரை பத்திரமாக வீடு கொண்டு வந்திட்டுதுகள்'.





இந்த கதையை கேட்டு அன்று இரவு முழுக்க பேந்தப்பேந்த விழித்தபடி இருந்திருப்போம்.

பேய், பிசாசு, மோகினி, இரத்த காட்டேறி, கொள்ளிவாய் பிசாசு என அதிலும் வெரைட்டி கண்டறிந்த சமூகம் நமது. அதனால்தான் இன்றும் தமிழ் சினிமாவில் காதலுக்கு நிகராக, பேயும் நன்றாக விற்கிறது. அண்மைக்காலமாக திரையுலகமும் பேய் பிடித்து நிற்கிறது. முனி, காஞ்சனா, அரண்மனை, டார்லிங் என பேய்ப்படங்களாகவே வந்து கொண்டிருக்கிறது.

எவ்வளவுதான் விஞ்ஞானம் வளர்ந்தாலும், பெரும்பாலானவர்களின் அடிமனதில் பேய் பயம் குடியிருக்கிறது. பெருநகர இளைஞர்களிடமே இப்படியென்றால், கிராமப்புறங்களை பற்றி சொல்லவே தேவையில்லை. பேய்கதைகள் மட்டுமல்ல பேயோட்டுபவர்கள், பேயோட்டும் ஆலயங்கள் எல்லாம் வெகு பிரபலம்.

சில இடங்களில் சிலரின் மேல் அவரின் உறவினரின் ஆவி வந்ததாகவும், நண்பர்களின் ஆவி வந்ததாகவும் சொல்லுவார்கள். இவ்வாறானவர்களின் செயற்பாடுகள் ஆக்ரோசமாக, சூழலில் இல்லாத மர்மநபர் ஒருவருடன் கதைப்பதை போலிருக்கும். இது மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் செயற்பாட்டை போலவும் இருக்கும். பேய்ப் பிடிப்பது போன்ற கதைகளை நவீன மருத்துவம் நம்புவதில்லை. ஒருவகை மனநோய் என்றுதான் வகைப்படுத்துகிறார்கள். இது மட்டுமல்ல பிசாசு, பில்லி, சூனியம் போன்ற அறிவியலுக்குப் புறம்பான எதையும் நம்புவதில்லை. ஆனால், மக்கள் மத்தியில் இந்த நம்பிக்கைகள் பல்லாண்டுக் காலமாகப் பரவலாக உள்ளன.

பொதுவாக பேய் பிடித்ததாக சொல்லப்படுபவர்களை மனநல மருத்துவர்களிடம் அழைத்துச் செல்ல மாட்டார்கள். அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப மத வழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச் செல்வார்கள். இதற்கென பிரபல்யமான இடங்கள் உள்ளன. வவுனியாவில் தோணிக்கல் அனுமார் கோவில், யாழ்ப்பாணம் இருபாலை முனீஸ்வரன் கோவில், வடமராட்சியில் மாயக்கை என இந்தப்பட்டியல் பெரியது. பேய் பிடித்தவர்களை அழைத்து வரும்போது பிரண்டை, தேசிக்காய், தேங்காய் என குறிப்பிட்ட சிலவற்றை கொண்டு செல்கின்றனர். அதன் பின்னர் பேயோட்டம் நடைபெறுகின்றது.

200 300 வருடங்களுக்கு மேற்பட்ட இருபாலை முனீஸ்வரன் ஆலயம் இந்த பேயோட்டத்திற்கு பிரசித்தி பெற்றது. இங்கு பலவிதத்தில் பேயோட்டப்படுகின்றது. ஒன்று சாதாரணமாக மத்திர உச்சாடனம் மற்றும் தேசிக்காய், நீத்துப்பூசணி இவற்றை கொண்டு பேய் ஓட்டுகின்றனர். இரண்டாவது இரவு வேளையில் சுற்றி நெருப்பு மூட்டி மந்திரங்கள் சொல்லி பேயோட்டுகிறார்கள். இதனை மயான பூஜை என்கின்றனர். இது மிகவும் பயங்கரமாகவும் இருக்கும். முக்கியமாக இரவில் மட்டுமே இது நடைபெறும்.

இதுபோல, வடமராட்சியின் மாயக்கை பகுதியிலும் பேயோட்டுபவர்கள் இருக்கிறார்கள். அங்குள்ள ஆலயமொன்றின் பின் பகுதியில் பேய் பிடித்தவர்களை இரும்பு சங்கிலியால் கட்டிவைத்து சிகிச்சை வழங்குகிறார்கள்.

இப்படியான சிகிச்சைகளின் மூலம் பேய் பிடித்தவர்கள் குணமடைவதாக நம்புபவர்கள்தான் பெரும்பாலானவர்கள். பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும்போது அவர்கள் பாதிப்பிலிருந்து விடுபடுவதாக சொல்லப்படுகிறது. இதைத்தான் குடிகொண்டுள்ள ஆவியின் விருப்பத்தை நிறைவேற்றும் போது, அந்த ஆவி உடலைவிட்டு வெளியேறி விடுவதாக நம்பப்படுகிறது.

பேய்ப் பிடிப்பது எனச் சொல்லப்படுவது ஒருவகையில் மனநோய்தான் என்கிறது நவீன மருத்துவம். இளகிய மனம் கொண்டவர்கள், கிராமியப் பின்னணி கொண்டவர்கள்தான் இந்த வகை நோய்க்கு அதிகம் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். உதாரணமாக கிராமத்தில் துர்மரணச் சம்பவத்தால் இறந்து போனவர்கள் ஆவியாக அலைவதாக நம்பிக்கை உண்டு. ஆற்றில், கிணற்றில் விழுந்து மாண்டவர்கள் அங்கேயே ஆவியாக அலைவதாக நம்பிக்கை உண்டு. அந்தப் பக்கம் செல்லும் திருமணமாகாத கன்னிப் பெண்கள் மீது ஆவி புகுந்துவிடும் எனவும் சொல்வார்கள். இதனால் இளகிய மனம் படைத்த இளம் பெண்களின் மனநிலை பாதிப்புக்குள்ளாகி, அவர்களே தங்களுக்குள் ஆவி புகுந்துவிட்டதாக நம்பி மனநோய்க்கு ஆளாவார்கள். பெரும்பாலும் இளம் பெண்கள்தான் இந்தப் பாதிப்புக்கு உள்ளாவதாகச் சொல்லப்படுகிறது.

மனநோய் பலவிதமானவை. பல நிலைகளையுடையவை. சிலவகை மன சிதைவுகள் உடனடியாக தீர்க்கப்படக்கூடியவை. அப்படியான சில உள்ளூரிலுள்ளவர்களால் தீர்க்கப்படலாம். ஆனால் மனநோயின் தன்மையை எல்லோராலும் கண்டறிந்து விட முடியாது. முறையான வைத்திய பரிசோதனையால்தான் அது முடியும் என எச்சரிக்கிறார்கள் வைத்தியர்கள். ஆரம்பநிலையிலிருக்கும் சில மனநோயாளர்கள் வழிபாட்டு தலங்களிற்கு கொண்டு செல்லப்பட்டு கட்டிப்போடப் படுவதால் அதிகமாக மனச்சிதைவடைந்து மீளமுடியாத பாதிப்பிற்குள்ளாகிவிடக்கூடும் என்றும் எச்சரிக்கிறார்கள்.

சில நம்பிக்கைகளை நாம் பேணத்தான் வேண்டும். ஆனால், அது ஒருவருடைய வாழ்க்கையையே அழித்துவிடக்கூடாதல்லவா... மனநோயாளியென நவீன மருத்துவர்களாலும், பேய் பிடித்ததென கிராமிய பூசாரிகளாலும் வகைப்படுத்தப்படுபவர் எதையும் தீர்மானிக்க முடியாத நிலையில் இருப்பவர். இவரை சரியான சிகிச்சையளித்து குணமடைய வைக்க வேண்டியது சுற்றியுள்ளவர்களின் பொறுப்பு. அவர்களை முறையான சிகிச்சைக்கு வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதுதான் பொருத்தமானது.

## வடக்கில் வயிற்றைக்கலக்கிய பேய் வீதிகள்

வடமராட்சி வல்லைவெளி
வடமராட்சி முள்ளி வீதி
யாழ் செம்மணி வீதி
புதுக்குடியிருப்பு மண்ணாகண்டல் வீதி
நெடுங்கேணி குறிசுட்டான் வீதி
பூநகரி முழங்காவில் வீதி

## ஆவிகள் பற்றிய வேடிக்கையான சில தகவல்கள்

- ஆவிகள் இரவு நேரத்தில் மிகவும் முனைப்புடன் செயல்படும். அதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுவது வெளிச்சம் குறைவாக இருப்பதே. பேய் போன்ற உருவெளித் தோற்றங்களுக்கு இது மிகவும் தொந்தரவாக இருக்கும். இந்த காரணத்திற்காக தான் வீடு அமைதியாக இருக்கும் நேரத்தில் பேய் தொந்தரவுகளை உணர முடிகிறது.
- ஆவிகள் பல விதங்களில் வெளிப்படும். அடர்த்தியான வெளிச்சம், இருட்டு நிழல்கள், பனி மூட்டங்கள், விந்தையான தெளிவற்ற உரு போன்றவைகள் இதில் அடக்கம். முழு உடலுடன் அவைகள் வெளிப்படவும் வாய்ப்புகள் உள்ளது. ஆனால் அவை மிகவும் சாத்தியமற்றது.
- பொதுவாக குழந்தைகள் மற்றும் மிருகங்களின் கண்களுக்கு பேய்கள் தெரியுமாம். சில குழந்தைகள் பேய்களை தங்களின் கற்பனை நண்பர்களாக எடுத்துக் கொள்வார்கள்.
- மெழுகுவர்த்திச் சுடர் திடீரென நீல நிறத்தில் மாறினாலோ அல்லது எந்தவொரு காற்றுமின்றி திடீரென அணைந்தாலோ, கண்டிப்பாக அங்கே பேய்கள் உள்ளதென்றும் கூறுவார்கள்.
- பொதுவாக சில ஆவிகள் உதவும் குணத்தை உடையது. அவை தீய சக்திகளில் இருந்து குடும்பத்தை பாதுகாக்கவும் செய்யுமாம்.

**எஸ்.சிவதாஸ்**
மனநல வைத்திய நிபுணர்
வவுனியா பொது வைத்தியசாலை



பிரங்ஞை மாற்றம் என்பது மனிதன் உடைய ஒரு சாதாரண அனுபவங்கள், நெருக்கடிகளுக்கு ஊடாக தன்னை தேற்றிக்கொள்கின்றான். இதன் ஊடாக மனிதனுக்கு ஏற்படுகின்ற தீவிரமான நெருக்கடிகளில் இருந்து தற்காலிகமேனும் விடுபடுவதற்கு அது உதவி செய்வதால். இது கால காலத்திற்கு மனிதனுடைய கலாச்சார சமூக விழுமிங்களிற்குள் ஒன்றாகி விட்டது. முக்கியமாக இதை சமய நிறுவனங்கள், சமயமற்ற பாரம்பரிய மருத்துவத்தில் இது உள்வாங்கப்பட்டு ஒரு சிகிச்சை முவீறாகவும் வழங்கப்படுகின்றது. அதே நேரத்தில் இது தீவிர நிலைக்கு இட்டுச்செல்லும் போது ஒரு நோயியல் வழிபாடாகவும் கருதுவதற்கு உண்டு. தீவிர நிலை ஏற்படும் போது மருத்துவ ரீதியான சிகிச்சை அளிக்க வேண்டிய கடப்பாடும் உள்ளது. இதை ஒற்றைப்பரிமானத்தில் விளங்கப்படுத்த முடியாது. இந்நிலை பல்பரிமாணத்தையுடையது. இவ்வாறான நிலையை கவனமாக நாம் விளங்கிக் கொள்ளாதவிடத்து அதனை துஸ்பிரயோகம் செய்க்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளது.



# பிள்ளையார் சஷ்டி விரதம்

மாகதர் என்னும் முனிவருக்கும், விபுதை என்ற அசுரப் பெண்ணுக்கும் பிறந்தவன் கயமுகாசுரன். அவன் சிவபெருமானைக் குறித்துத் தவமியற்றி, எந்த ஆயுதத்தாலும் தான் அழியக்கூடாது என்று வரம் பெற்றான். வரம் பெற்ற செருக்கில் தேவர், முனிவர் உள்ளிட்ட அனைவரையும் கொடுமைப்படுத்தினான். அனைவரும் சிவபெருமானிடம் பிரார்த்தித்தனர்.

சிவபெருமான் விநாயகப் பெருமானை அழைத்து, பூத கணங்களுடன் சென்று கயமுகாசுரனை அழிக்கும்படி ஆணை இட்டார். அதேபோல், விநாயகரும் பூதகணங்களுடன் சென்று, கய முகாசுரனுடன் போர் புரிந்தார். விநாயகர் ஏவிய எந்த ஆயுதத்தாலும் கயமுகாசுரனை அழிக்க முடியவில்லை.

அப்போதுதான் அவன் பெற்றிருந்த வரம் நினைவுக்கு வரவே, தன்னுடைய தந்தங்களில் ஒன்றை உடைத்து, கயமுகாசுரனின் மேல் ஏவினார் விநாயகர். அது கயமுகாசுரனைத் தாக்கியது. மார்பில் ரத்தம் பெருக்கெடுக்க, வலியால் துடித்த கயமுகாசுரன் மூஷிக வடிவம் கொண்டு ஓடினான். தந்தமும் அவனைத் துரத்தியது.

ஓடி ஓடிச் சோர்ந்துபோன கயமுகாசுரன் இறுதியில் விநாயகரைச் சரண் அடைந்தான். விநாயகப் பெருமானும் அவனை மன்னித்து, தனது வாகனமாக ஏற்றுக்கொண்டார்.

கயமுகாசுரனை அடக்கி ஆட்கொண்டு திரும்பிய விநாயகப் பெருமானை பூதகணங்களின் அதிபதியாக நியமித்தார் சிவபெருமான். அன்று முதல், விநாயகருக்கு கணபதி என்ற பெயர் ஏற்பட்டது.

முருகப் பெருமான் சூரபத்மனை மயில் வாகனமாக ஆட்கொண்டு அருளியதுபோல், பிள்ளையாரும் கயமுகாசுரனை சம்ஹாரம் செய்யாமல், வாகனமாக ஏற்று அருள்புரிந்தார். இதனால், பிள்ளையார் சஷ்டி விரதம் இன்னும் விசேஷமாகும்.

பிள்ளையார் சஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் முறை: பிள்ளையார் சஷ்டி விரதம் என்பது, கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்ச பிரதமை தொடங்கி (மார்கழி மாதம் சுக்லபட்ச சஷ்டி திதி வரை) 21 நாட்கள் அனுஷ்டிக்கும் விரதமாகும்.

கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்ச சஷ்டியன்று காலையில் ஸ்நானம் செய்த பிறகு, உடல் மனத் தூய்மை யுடன் விரதத்தைத் தொடங்க வேண்டும். விரத பங்கம் ஏற்படாமல் இருப்பதற்காக 21 இழைகளுடன் கூடிய நூலை மஞ்சளில் தோய்த்து, விநாயகரை தியானித்து, ஆண்கள் வலது கரத்திலும் பெண்கள் இடது கரத்திலும் காப்பாகக் கட்டிக் கொள்ளவேண்டும்.

முதல் 20 நாட்கள் ஒருவேளை மட்டும் உணவு உண்டு, உபவாசம் இருக்கவேண்டும். இறுதி நாளில் முழு விரதம் இருந்து, இரவு விநாயகரை தரிசித்து வழிபட்டு; விரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

21 நாட்களும் விநாயகரின் திருக்கதைகளைப் படிப்பதும், விநாயகரின் திருவிளையாடல்களைப் பேசக் கேட்பதும் மிகப் புண்ணியமாகும். விநாயகர் ஆலயங்களில் விசேஷ அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்ற பின், பவித்ரமான விநாயகப் பெருமானின் சரிதத்தைப் பாராயணம் செய்யலாம். உபன்யாசம் செய்யக் கேட்டும் பயன் பெறலாம்.

21 நாட்கள் விரதம் இருக்க இயலாதவர்கள், மார்கழி மாதம் சுக்லபட்சத்தில் வரும் விநாயகர் சஷ்டி அன்று மட்டுமாவது முறைப்படி விரதம் அனுஷ்டித்து விநாயகப் பெருமானின் பூரண அருளைப் பெறலாம்.

---

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் |
| கும்பம் | ராசி மண்டலம் | | கடகம் |
| மகரம் | | | சிம்மம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

# திருமணத்திற்கு பார்க்க வேண்டிய 10 பொருத்தமும் இதுதான்

திருமணம் என்ற பேச்சு வீட்டில் எழும்போது அடிக்கடி இந்த வார்த்தை உங்கள் காதை எட்டும், எத்தனை பொருத்தம் பொருந்தியுள்ளது. பத்து பொருத்தமும் பொருந்தியிருந்தால் அது உத்தமமான ஜாதகம் என்றெல்லாம் கூட கூறுவார்கள். பத்தில் குறைந்தது எட்டு பொருத்தமாவது எதிர்பார்ப்பது வழக்கம்.

அதிலும் கூட மகேந்திர பொருத்தம், வசியப் பொருத்தம் போன்றவை இல்லற வாழ்க்கையை குறிப்பவை. இவை கண்டிப்பாக பொருந்த வேண்டும் என்று ஆண், பெண் வீட்டார் எதிர்பார்ப்பது இயல்பு. இப்படி ஆண், பெண் இராசி, ஜாதகம் பொருந்தி அமைந்தால் தான் திருமணம் என்று ஓர் பெரிய கணிதக் கோட்பாடே எழுதி வைத்துள்ளனர் நமது முன்னோர்கள்.

அப்படி இந்த பொருத்தங்களில் ஏதேனும் சிறுசிறு குறைபாடு அல்லது குளறுபடி இருந்தால், அதை தோஷம் கழித்து சரிசெய்யலாம் என்றும் ஜோதிட நிபுணர்கள் கூறுகிறார்கள். இனி, 10 பொருத்தம் என்றால் என்ன? மற்றும் அதன் உண்மை விளக்கங்கள் பற்றிப் பார்க்கலாம்...

### தினப் பொருத்தம்

தினப் பொருத்தம் என்பதை நட்சத்திர பொருத்தம் என்பார்கள். ஆண், பெண் இருவரது ஆயுள் மற்றும் ஆரோக்கியம் பற்றி தெரிந்துக் கொள்ள தினப் பொருத்தம் பார்க்கப்படுகிறது.

### கணப் பொருத்தம்

குணத்தை பற்றி தெரிந்து கொள்ளக்கூடிய பொருத்தம் தான் குணப் பொருத்தம். மனைவியாக / கணவனாக வரப்போகும் நபர் எப்படிப்பட்ட குணம் கொண்டிருப்பார் என்பதை இந்த பொருத்தத்தை வைத்து தெரிந்துக் கொள்ளலாம்.

### மகேந்திரப் பொருத்தம்

திருமணம் ஆகப்போகும் ஆண், பெண்ணுக்கு இந்த பொருத்தம் மிகவும் முக்கியம். இந்த பொருத்தம் இருந்தால் தான் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

### ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம் திருமணம் செய்பவர்கள் வாழ்வில் செல்வம் பெருக பார்க்கப்படும் பொருத்தமாகும். அதனால், இந்த பொருத்தமும் கூட ஓர் முக்கியமான பொருத்தமாக பார்க்கப்படுகிறது.

யோனிப் பொருத்தம்

யோனிப் பொருத்தம் முக்கியமான பொருத்தம். கணவன்மனைவி தாம்பத்திய வாழ்க்கையில் எந்த அளவுக்கு திருப்தியாக இருப்பார்கள் என்பதை சொல்லக் கூடியது பொருத்தம் தான் யோனிப் பொருத்தம். இந்த பொருத்தம் இருவருக்கும் ஒத்துப் போக வேண்டியது அவசியம்.

### ராசிப் பொருத்தம்

பெண் ராசி தொட்டு ஆண் ராசி 6 க்கு மேல் எனில் பொருத்தம் உண்டு எனப்படுகிறது. ஆனால் அனுபவத்தில் சிலர் ஒரே ராசி என்றால் கூட அது உத்தமம் தான். ஆனால் நட்சத்திரம் மாறுபட்டு இருக்க வேண்டும் என்கிறார்கள். இந்த பொருத்தம் இருந்தால் தான் வம்சம் விருத்தியாகும். அதாவது, வாழையடி வாழையாக குடும்பம் தழைக்கும் இந்த பொருத்தம் முக்கியம்.

### ராசி அதிபதிப் பொருத்தம்

குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க பார்க்கப்படும் பொருத்தம்தான் ராசி அதிபதிப் பொருத்தம். பன்னிரண்டு இராசிக்கும் அதிபதி உண்டு அந்த அதிபதி கிரகத்திற்கு நட்பு, சமம், பகை என மூன்று வகையில் மற்ற கிரகங்களுடன் உறவும் உண்டு. இதில் ஆண், பெண் இராசிக்கு இடையில் பகை தவிர மற்ற இரண்டு இருந்தால் பொருத்தம் இருக்கிறது என்று பொருள்.

### வசியப் பொருத்தம்

கணவன், மனைவி இருவருக்குள் அன்யோன்யம் இருக்குமா, இல்லையா என்று பார்ப்பதற்கு இந்த வசியப் பொருத்தம் உதவுகிறது. இந்த பொருத்தம் இருந்தால் தான் கணவன்மனைவிக்குள் ஈர்ப்பு ஏற்படும் கூறப்படுகிறது.

### ரஜ்ஜு (அ) ரச்சுப் பொருத்தம்

இந்த பொருத்தம் இருந்தால் தான் கணவனுக்கு ஆயுள் பலம் உண்டாகும். பெண்ணின் மாங்கல்ய பாக்கியத்தை இந்த பொருத்தம் குறிக்கிறது. திருமண பந்தத்திற்கு இந்த பொருத்தம் இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

### வேதைப் பொருத்தம்

திருமணம் செய்யப் போகும் தம்பதியர் வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் எவ்வாறு அமையும், எந்த அளவில் இருக்கும் என்பதை கணிக்கக்கூடியது இந்த வேதைப் பொருத்தம்.

# ஆடி அடங்குகிறாரா அம்லா?

ராஜேஸ்

ஹாசிம் அம்லாவிற்கு அறிமுகம் தேவையில்லை. தற்கால கிரிக்கெட்டர்களில் முக்கிய ரன் மெஷின். அம்லா களத்தில் இருக்கும்வரை 'ஆடி'க் கொண்டிருப்பது எதிரணிதான். ஆட்டத்தின் போக்குணர்ந்து அதிரடியாகவும், நிதானமாகவும் விளையாடுவதில் வல்லவர். ஒருநாள் போட்டிகளில் விராட்ஹோலி ஏற்படுத்தும் சாதனைகளை முறியடித்தபடி அவரின் பின்னால் விரைவாக வந்து கொண்டிருப்பவர் அம்லா.

ஆனால் இந்த ரன் மெஷின் தடுமாறத் தொடங்கி விட்டதுதான் என்பதுதான் அண்மைக்கால புள்ளிவிபரம். ஒருகாலத்தில் அசைக்கவே முடியாதென கருதப்பட்ட வீரர். இப்பொழுது சாதாரண பந்து வீச்சாளர்களிடமே ஆட்டம்காணத் தொடங்கிவிட்டார். தற்போதைய அவுஸ்திரேலிய தொடரில் அம்லாவின் செயற்பாடு மகா மட்டம். அம்லாவின் இந்த வீழ்ச்சி அவுஸ்திரேலிய தொடரில்தான் ஆரம்பித்ததல்ல. கடந்த 18 மாதங்களின் முன்னர் ஆரம்பித்துவிட்டது. கடந்த 18 மாதங்களில் அவரது டெஸ்ட் சராசரி 34.81. 2015 யூலையின் பின் அம்லாவின் வீழ்ச்சியை புள்ளி விபரங்கள் தெளிவாக்குகின்றன. 2010 - 2015 யூலைவரையான காலப்பகுதியில் அம்லாவின் சராசரி 66.43. அந்தக்காலப்



பகுதியின் உலகின் தலைசிறந்த டெஸ்ட் வீரரான சங்கக்காரவின் சராசரியே 63.41தான்.

ஆனால்முதன்முறையாகடெஸ்ட் ஆட்டங்களில் தனது சராசரி 50 இற்கும் குறைவாக வீழ்ச்சியடையும் ஆபத்தை அம்லா எதிர்கொள்கிறார். அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடர் அம்லாவின் கிரிக்கெட் வாழ்வில் ஒரு கரும்புள்ளியாக உருவெடுத்து அந்த அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. மூன்று டெஸ்ட்டின் முதல் ஐந்து இன்னிங்ஸ்களில் ஆடி அம்லா சேர்ந்தது வெறும் 98 ஓட்டங்கள். ஒரு அரைச்சதம் கூட கிடையாது. ஐந்து இன்னிங்ஸ்களிலும் ஹேஸில்வூட்டிடமே வீழ்ந்தார். தொடரொன்றில் ஒரு பந்துவீச்சாளர் அம்லாவை இப்படி ஆட்டம்காண வைக்கவில்லை.



தென்னாபிரிக்கா அணி பெற்ற மொத்த டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கைகளில் அம்லாவே 18.22 வீதமான ஓட்டத்தை குவித்தார். ஆனால் கடந்த 15 மாதங்களில் இது 14.07 வீதமான வீழ்ச்சியடைந்து விட்டது.

கடந்த 18 மாதங்களின் முன்னர் வரை அம்லா ஒரு தொழில்நேர்த்தியான துடுப்பாட்டக்காரராக உயர்ந்து வந்தார். வேகப்பந்து, சுழற்பந்து ஆடுகளங்கள் எதிலும் ஜொலித்தார். 2004 இல் இந்தியாவிற்கு எதிராக அறிமுகமான போட்டிகள் நன்றாக அமையாததை போலவே கடந்த பல மாதங்கள் அவரை பாடாய்படுத்துகின்றன.

டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமான போது அவ்வளவாக அவர் பேசப்படவில்லை. முதல் 22 போட்டிகளின் சராசரி வெறும் 33.92 தான். ஆனால் அதன்பின் அம்லா தன்னை நன்றாக மெருகேற்றிக்கொண்டார். தொடர்ந்து சிறப்பாக ஆடி சராசரியை அதிகரித்துக் கொண்டிருந்தார். அடுத்த 19 போட்டிகளில் சராசரியை 50 இற்கு அண்மிக்க செய்தார். அதன்பின்னர் 2015 நடுப்பகுதிவரை அம்லாவின் பொற்காலம். உலகமே அம்லாவின் பெயரைத்தான் உச்சரித்தது.

எனினும் கடந்த ஒன்றரை வருட டெஸ்ட் போட்டிகளின் அம்லாவின் சராசரி அவரது ஆரம்பகாலத்தை ஒத்ததாக குறைந்து வருகிறது. இவரது வீழ்ச்சிக்காலத்தில் 22 இன்னிங்ஸில் 2 சதங்கள் மட்டுமே அடித்துள்ளார். எனினும் 10 தடவைகள் ஒற்றை இலக்கத்தில் நடையை கட்டியுள்ளார். அம்லாவின் பொற்காலமான 2010 2015 வரையான காலத்தில் 69 இன்னிங்ஸில் 12 தடவைகள் மாத்திரமே ஒற்றை இலக்கத்தில் வீழ்ந்திருக்கிறார். இந்தக்காலப்பகுதியில், தென்னாபிரிக்கா அணி பெற்ற மொத்த டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கைகளில் அம்லாவே 18.22 வீதமான ஓட்டத்தை குவித்தார். ஆனால் கடந்த 15 மாதங்களில் இது 14.07 வீதமான வீழ்ச்சியடைந்து விட்டது.

தென்னாபிரிக்க அணிக்காக அம்லா செய்தவை ஏராளம். ஆரம்ப விக்கெட்கள் விரைவாக வீழ்ந்தாலும் மூன்றாம் இலக்கத்தில் அம்லா ஒரு நங்கூரமாக நிலைத்து நிற்பார். புதிய பந்தில்கூட அவரை ஒன்றும் செய்ய முடியாமல் பந்துவீச்சாளர்கள் திண்டாடினார்கள். 2010 பெப்ரவரி 2015 யூன் வரை 3ம் இலக்கத்தில் களமிறங்கி அவரது சராசரி 69.48. அதிலும் அணியின் மொத்த ஓட்டங்கள் 20 ஐ எட்டுவதற்குள் முதல் விக்கெட் வீழ்ந்தபின் களமிறங்கிய போட்டிகளில் சராசரி 88.07.


அம்லா அணியை எப்படி தூக்கி நிறுத்தினார் என்பதற்கு இந்த ஒரு விபரமே சாட்சி!

ஆரம்ப விக்கெட் விரைவாக வீழ்ந்த பின்னர் அம்லா களமிறங்கி உறுதியாக ஆடி மிகப்பெரிய இன்னிங்ஸை கட்டமைத்துள்ளார். அவரது அதிகபட்ச டெஸ்ட் ஓட்டம் 20102இல் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்திற்கெதிரான பெற்ற ஆட்டமிழக்காத 311 ஓட்டங்கள். அந்த போட்டியில் தொடக்க ஆட்டக்காரர் அல்விரோ பீற்றர்சன் 'டக்' ஆகி நெருக்கடியான நிலையில் அம்லா களமிறங்கினார். 2010 இல் இந்தியாவிற்கு எதிராக பெற்ற ஆட்டமிழக்காத 253தான் அவரது இரண்டாவது அதிகபட்ச ஓட்டம். அந்தபோட்டியில் தொடக்க ஆட்டக்காரர் அஸ்வெல் பிரின்ஸ் 'டக்' ஆகினார். இந்தக்காலத்தில் அம்லாவை விரைவில் வீழ்த்தினால் தென்னாபிரிக்காவை வீழ்த்திவிடலாமென்ற நிலையிருந்தது.

அண்மைக்காலமாக அம்லா தவிர்ந்து வேறும் சில தென்னாபிரிக்கா வீரர்களின் துடுப்பாட்டம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கு இந்திய தொடர் உள்ளிட்ட சில கடினமாக தொடர்களை , காரணமாக கூறுகிறார்கள். ஆனால் அம்லாவின் வீழ்ச்சி இந்தவகைக்குள் அடங்காமல் கடந்த 18 மாதங்களாக சீராக உள்ளது.

2012இல் அடிலெய்ட் டெஸ்டின் பின்னர் அம்லாவின் சராசரி 50 இற்கும் குறைவாக இருந்தது. அந்த போட்டியில் குறைவான ஓட்டங்களை பெற்றதால்சராசரியை50இற்கும் கீழே இழந்தார். அது அவரது 64வது டெஸ்ட் அவுஸ்திரேலியாவுடனான இந்த தொடரின் 3வது போட்டி நடந்ததும் அடிலெயட்தான். இரண்டாவது இன்னிங்ஸில் 27ற்கும் குறைந்த ஓட்டத்தை பெற்றால் அவரது சராசரி 50 இற்கும் குறையுமென்ற ஆபத்திருந்தபோது, 45 ஓட்டங்களை பெற்று சராசரியை தற்காலிகமாக காப்பாற்றி வைத்துள்ளார்.

இது ஒரு தற்காலிக வீழ்ச்சியா, நிரந்தர வீழ்ச்சியா என்பது தெரியவில்லை. அம்லா பழைய சிங்கமாக ஆடுகளத்தில் நிற்க வேண்டுமென்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.




## அம்லாவின் டெஸ்ட் பெறுபேறுகள்

| காலம் | போட்டிகள் | ஓட்டங்கள் | சராசரி | 100 |
|---|---|---|---|---|
| பெப்.2008 வரை | 21 | 1251 | 33.81 | 3 |
| மார்ச் 2008ஜன 2010 | 19 | 1482 | 49.40 | 4 |
| பெப் 2010ஜன 20102 | 18 | 1693 | 62.70 | 7 |
| யூலை2012ஜன 2015 | 25 | 2306 | 67.82 | 9 |
| யூலை 2015இதுவரை | 15 | 766 | 34.81 | 2 |

## 2015 இலிருந்து தென்னாபிரிக்கர்கள்

| வீரர் | இன்னிங்ஸ் | ஓட்டங்கள் | சராசரி | 100கள் |
|---|---|---|---|---|
| டி கொக் | 11 | 584 | 64.88 | 2 |
| கவுமா | 17 | 593 | 42.35 | 1 |
| டீன் எல்கர் | 21 | 676 | 35.57 | 2 |
| ஹாசிம் அம்லா | 22 | 766 | 34.81 | 2 |
| டி வில்லியர்ஸ் | 14 | 468 | 33.42 | 0 |

# உங்கள் முகம் தங்கம் போல் ஜொலிக்க வேண்டுமா?

தக்காளிப் பழத்தால் எப்பேர்பட்ட பெண்ணின் முகத்தையும் தக தகக்க வைத்துவிடலாம். தக்காளியானது முகச்சுருக்கத்தை விரட்டி உங்களை இளமையானவராக மாற்றிவிடும்.

நீண்ட நாட்களாக முகத்தை சரிவர பராமரிக்காதவர்களின் முகத்திலுள்ள செல்கள் இறந்து போய் முகம் பொலிவிழந்து விடும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியின் சாறுடன் கால் தேக்கரண்டி ரவையைக் கலந்து கொள்ளுங்கள்.

இதை முகத்தில் நன்றாக தேய்த்து கழுவுங்கள். தொடர்ந்து இதைச் செய்து வந்தால் முகம் சூரியனாகப் பிரகாசிக்கும். சில பெண்களுக்கு முகத்தில் உள்ள பெண்மை தன்மை குறைந்து முரட்டுத்தனமாகத் தெரியும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியை எடுத்து கூழாக்கி கொள்ளுங்கள். இதனுடன் அரை தேக்கரண்டி தயிரைக் கலந்து கொள்ளுங்கள்.

இதை முகத்துக்கு பூசி 5 நிமிடம் கழித்து கழுவிக் கொள்ளுங்கள். முகம் மிருதுவாகி தங்கம் போல் தகதகவென ஜொலிக்கும்.



சிலபெண்கள் கண்ணுக்குகீழ் கருவளையம் தோன்றி எதையோ பறி கொடுத்தவர்கள் போல் வலம் வருவார்கள். இவர்களை அழகு தேவதைகளாக மாற்றுவதில் தக்காளிக்கு நிகர் தக்காளிதான்.

ஒரு வெள்ளரித்துண்டு அரை தக்காளி இரண்டையும் அரைத்துக் கொள்ளுங்கள்.

இமைகளின் மேல் கலவையை பூசி 2 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். ஓரிரு வாரங்கள் இதைச் செய்து வந்தாலே கருவளையம் காணமல் போவதுடன் கண்களும் பளிச்சென்று இருக்கும். பெரும்பாலான பெண்கள் முகத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கழுத்திற்கு கொடுப்பதில்லை. இதனால் கழுத்தில் கறுப்பு கயிறு கட்டியது போல் கருவளையம் தோன்றிவிடும். இதனை தக்காளி பேஸ்ட்டால் விரட்டி விடலாம். தக்காளி சாறு அரை டீஸ்பூன் சமையல் சோடா சிட்டிகை இந்த மூன்றையும் கலந்து கொள்ளுங்கள்.


இந்த பேஸ்ட்டை கருவளையத்தின் மேல் பூசி 10 நமிடம் கழித்து கழுவுங்கள். வாரம் மூன்று முறை இப்படி செய்து வந்தால் கருவளையமா? அது எங்கே என்பார்கள்.

கண்ணாடியை பார்க்க பிடிக்காமல் கரும்புள்ளியும் கருந்திட்டுகளும் உங்கள் முகத்தை ஆக்கிரமித்து கொண்டனவா? உங்கள் முகத்தை கண்ணாடி போல் மாற்றிக் காட்டுகிறது இந்த தக்காளி பேஸ்ட்!

உருளைக் கிழங்கு துருவல் சாறு இரண்டு தேக்கரண்டி தக்காளி விழுது அரைத் தேக்கரண்டி இரண்டையும் கலந்து கொள்ளுங்கள். இந்த பேஸ்ட்டை முகத்திலும் கழுத்திலும் தடவி 5 நிமிடம் கழித்து கழுவிக் கொள்ளுங்கள். தொடர்ந்து அதைச் செய்து வந்தால் சில வாரங்களிலேயே வித்தியாசத்தை உணர முடியும்.

கன்னங்கள் ஒட்டிப்போய் அழகற்றதாய் காணப்படுகின்றதா? புஸ் புஸ் என மாற்றிட இந்த தக்காளி கூழை பயன்படுத்துங்கள்.

தோல் மற்றும் விதை நீக்கிய ஒரு தக்காளியை கூழாக்குங்கள். ஒரு தேக்கரண்டி ஒலிவ் எண்ணையை தடவுங்கள். அதன் மேல் இந்த தக்காளி கூழைப் பூசி 10 கழித்து கழுவுங்கள். வாரம் ஒருமுறை இப்படி செய்து வர தக்காளி போன்ற கன்னங்கள் கிடைக்கும்.



# சிறுவர்களில் காசநோய்

சிறுவர்களில் காசநோய் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

சிறுவர்களில் காசநோய் தொற்றலினை அறியப் பல அம்சங்கள் கவனத்தில் எடுக்கப் படுகின்றது. குழந்தைகளில் தொடர்ச்சியாக காணப்படும் காய்ச்சல், இருமலின் காலம், போஷணை நிலை, குடும்பத்தில் காசநோய் என்பன கருத்தில் எடுக்கப்படும். மேலும் காச நோய்க்கான தோல் சோதனை, நிணநீர் கணுவீக்கம் என்பன கருத்தில் எடுக்கப்படும்.

பிறந்த உடன் போடும் பி. சி. ஜி தடுப்பு ஊசியினால் மூளைக் காசம் ஏற்படுவது தவிர்க்கப்படும். பி. சி. ஜி தழும்பு பிள்ளைகளில் ஏற்படாவிடின் 6 மாதம் தொடக்கம் 5 வயது வரையான பிள்ளைகளுக்கு மீளவும் பி. சி. ஜி தடுப்பு மருந்து ஏற்றல் அவசியம்.

தகுந்த முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலம் காசநோயைக் குணமாக்கலாம்.

சிறுவர்களுக்கான காசநோய் தடுப்பு மருந்துகள்

(RHZ) - றைபம்பிசீன் 60mg
- ஐசோநியேசைட் 30mg
- பிரசினமைட் 150mg

(RH) - றைபம்பிசீன் 60mg
- ஐசோநியசைட் 30mg

**குழந்தைகளில் காசநோய் வராது தடுப்பது எப்படி?**

- காசநோயாளியின் அரவணைப்பில் உள்ள குழந்தை மற்றும் போசனை குறைந்த குழந்தைகளில் காசநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கும். இவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.
- குழந்தை பிறந்த 24 மணித்தியாலத்திற்குள் (BCG) பீ. சீ. ஜீ. காசநோய் தடுப்பூசி பெற்றுக்கொள்ளுங்கள். வீட்டில் பிறந்த குழந்தை ஆயின் உடனடியாக மருத்துவ மாதுவை நாடி ஊசி ஏற்றிக் கொள்ள வேண்டும். குழந்தைகளில் காசம் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.
- இடது கையில் 6 மாதங்களுக்கு தழும்பு ஏற்படாத குழந்தைகளுக்கு 5 வயது வரை மீள ஊசியேற்றலாம். இவ்வாறு மீள ஊசி ஏற்றுவதன் மூலம் உங்கள் மழலைகளை காத்துகொள்ள முடிகிறது.
- காசநோய் தடுப்பூசி முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும்.

சிறுவர்களில் காசநோய் தொற்று நெருங்கிய உறவினர்களில் சளியில் கிருமி உடைய காசநோய் ஏற்படும் போது ஏற்படுகிறது. எனவே, 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் வீட்டில் உள்ள உறவினர்களில் காசநோய் ஏற்படும் போது, குழந்தைகளுக்கும் காசநோய் ஏற்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்து அவ்வாறு ஏற்படாத விதத்து ஐசொநியசைட் மருந்தினை தடுப்பு மருந்தாக 6 மாதங்களில் அளிக்குமாறு உலக சுகாதார நிறுவனம் சிபாரிசு செய்துள்ளது.



# மரக்கறி சப்பாத்தி

**தேவையான பொருட்கள்:** ஒரு கப் காய்கறிகள், (போஞ்சி, கரட், காலிஃப்ளவர் நறுக்கியது), ஒன்றரைக் கப் கோதுமை மா, ஒரு சிட்டிகை ஓமம், உப்பு தேவைக்கேற்ப, ஒரு பச்சை மிளகாய் (நறுக்கியது)

**செய்முறை:** வெட்டிய காய்கறிகளை தண்ணீரில் வேக வைக்கவும். பிறகு தண்ணீரை வடித்துவிட்டு, அதை நைஸாக அரைத்துக் கொள்ளவும். கோதுமை மாவில் உப்பு, ஓமம் மற்றும் அரைத்த காய்கறி சேர்த்து பிசைந்து கொள்ளவும். தயாராக உள்ள மாவில் சப்பாத்தி செய்து பருப்பு கூட்டுடன் பரிமாறலாம்.

# கடலை மா அல்வா



**தேவையான பொருட்கள்:** கடலை மாவு 4 கப், சுத்தமான நெய் 2 கப், பாதாம் பருப்பு 1/2 (சீவல் அல்லது துண்டாக்கப்பட்டது), பிஸ்தா பருப்பு 1/2 (சீவல் அல்லது துண்டாக்கப்பட்டது), சர்க்கரை 2 கப் (தூளாக்கப்பட்டது), பச்சை ஏலக்காய் தூள் 1/2 டீஸ்பூன்.

**செய்முறை:** அகலமான வாணலியை எடுத்தது அதில் நெய்யை ஊற்றவும். அது நன்கு கரைந்தவுடன் அதில் கடலை மாவை சேர்க்கவும். நன்கு பொன்னிறமாக வரும்வரை தொடர்ச்சியாகக் கிளறவும்.

கீழே அடி பிடிக்காத அளவிற்கு நன்றாகவும் தொடர்ச்சியாகவும் கிளற வேண்டியது அவசியம். பாகு நல்ல பதத்திற்கு வந்தவுடன் ஏலக்காய் தூளை போடவும். அடுத்து பிஸ்தா மற்றும் பாதாம் கேவலை அதில் சேர்த்துக் கிளறி அடுப்பை அணைக்கவும்.

இந்த கலவையை வாணலியிலிருந்து ஒரு பெரிய பேசின் அல்லது பாத்திரத்திற்கு மாற்றிக் கொள்ளுங்கள். பாகை சற்று சிறிதளவு சூடாகும் வரை குளிரவிடுங்கள். இந்த கலவையை மேலும் கிளறி அதில் சர்க்கரைத் தூளை (நன்கு மென்மையாகத் தூளாக்கிய) சேர்க்கவும்.

# கர்ப்பிணிகள் கவனத்திற்கு



மாத விலக்கு தள்ளிப் போனவுடன் சிலருக்கு மசக்கை, வாந்தி ஏற்படும். காலையில் வெறும் வயிற்றில் எலுமிச்சம்பழம்தை பிழிந்து அதில் ஒரு சொட்டு இஞ்சிச்சாறு சேர்த்துக் குடிக்க வேண்டும்.

காய்ச்சின பசும்பால் 100 மில்லி எடுத்து, சூடு இல்லாமல் ஆற வைத்துக் கொள்ளவும். அதில் ஒரு கோழி முட்டையின் வெள்ளைக்கரு, சாப்பிட, வாந்தி எடுப்பது குணமடையும்.

கர்ப்பமான பெண்களுக்கு அடிக்கடி வாந்தி வரும். எதைச் சாப்பிட்டாலும் வாந்தி எடுப்பார்கள். 3 ஏலக்காய்களைத் தீயில் சுட்டுப் பொடியாக்கி, தேனில் குழைத்துக் கொடுத்தால், வாந்தி உடனே மட்டுப்படும்.

சீரகத்தைப் பொடி செய்து வாயில் போட்டு மெல்லலாம். (சீரகத் தண்ணீர் பருகலாம் அதாவது ஒரு ஸ்பூன் சீரகத்தை ஒரு அவுன்ஸ் வெந்நீரில் போட்டு சாறு தண்ணீரில் இறங்கியவுடன் அப்படியே தண்ணீர் குடிக்கும் பாத்திரத்தில் ஊற்றி வைத்துக் கொண்டு அதையே குடித்து வரலாம்.


மலையாளிகள் இப்படி சீரக வெள்ளம் சாப்பிடுவதாலேயே அவர்கள் பிள்ளைகள் நல்ல நிறமாகப் பிறக்கின்றன.)சாப்பிட பிடிக்காவிட்டால், வறுத்த சீரகப்பொடியுடன் துளி உப்பு சேர்த்து, காய்ச்சிய நெய்யுடன் சாப்பிட்டால் ருசியாக இருக்கும். எளிதில் ஜீரணமாகும். கண்டிப்பாக மாங்காய், சம்பல் சாப்பிடக்கூடாது. பிறக்கப்போகும் குழந்தைக்கு ரத்தம் ஊறாமல் ரத்த சோகை ஏற்படும்.

மிகவும் குளிர்ச்சி உடம்புள்ளவர்கள் எலுமிச்சை சேர்க்கக்கூடாது. தண்ணீர் குடிக்கும்போது சீரகத்தை போட்டுக் கொதிக்க வைத்துதான் குடிக்கவேண்டும். 40 நாட்கள் ஆனதுமே, வெதுவெதுப்பான நீரில்ல் தான் குளிக்க வேண்டும்.

குளிர்ந்த அல்லது மிகச் சூடான நீர் குழந்தையைத் தாக்கும். 40 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை அலைச்சல்; பிரயாணம் கூடாது. கருச்சிதைவு ஏற்படும் காரம் குறைக்க வேண்டும். மிளகாய்க்கு பதில் மிளகு சேர்க்கலாம்.

காலையில் தினமும் ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடித்து வந்தால் முகம் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்

# ஆண் பெண் இருவரும் அழகாகலாம்



பீட்ரூட்டை சிறு துண்டுகளாக்கி அரைத்து சாறு எடுத்து முகத்தில் தடவி 5 நிமிடம் மெதுவாக மசாஜ் செய்ய வேண்டும். 10 நிமிடங்களுக்குப் பிறகு லேசாகக் கழுவி விட்டு, கடலை மாவால் மென்மையாகத் தேய்த்து பின் கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும். சந்தனம், 4 சொட்டு ரோஸ்வாட்டர், 5 சொட்டு பால் கலந்து முகத்தில் பூசி விட்டு 15 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் நீங்கி பொலிவாக இருக்கும்.

காலையில் தினமும் ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடித்து வந்தால் முகம் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும். பயிற்றுமாவு, கஸ்தூரி மஞ்சள் சம அளவு எடுத்து தயிர் கலந்து முகத்தில் பூசி 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இது ஒரு சிறந்த ஃபேஷியல்.

வறண்ட சருமம் உள்ளவர்கள் பாலாடையை முகத்தில் பூசி 15 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் வறண்ட தன்மை மாறி முகம் பளபளப்பாகும். துருவி வேக வைத்து மசித்த கேரட்டை முகம், உடலில் மசாஜ் செய்தால் சருமம் மிருதுவாவது மட்டுமல்லாமல் பொலிவுடனும் திகழும். பேரிச்சம்பழத்தை மைய்ய அரைத்து வெண்ணை சேர்த்து கண்ணை சுற்றி பூசினால் கருவளையம் மறையும்.

பாலுடன் எலுமிச்சைச் சாறு கலந்த, திரிந்து போகும் பாலை முகத்தில் பூசி வந்தால் முகம் பொலிவாகும். இது ஒரு வகையான ப்ளீச்சிங் முறை.



# குளிர்காலம் தொடங்கி விட்டது - இதை கடைப்பிடியுங்கள்

குளிர்காலம் ஆரம்பிக்க இருப்பதால் வீட்டையும், அதில் உள்ள பொருட்களையும் பராமரிப்பது முக்கியம். காரணம், மனிதர்களைப்போல கட்டிட அமைப்புகளும் குளிரை உணரும் தன்மை கொண்டவையாக இருக்கின்றன. அதனால் வீட்டில் உள்ள பொருட்களை அதற்கேற்ப மாற்றி அமைப்பது நல்லது. எதை தொட்டாலும் சில்லென்று இருப்பதால் வீட்டிற்குள் வெப்பத்தை நிலைக்கும்படி செய்ய வேண்டியது அவசியமாகிறது. அதற்காக செயற்கையான வழிகளை தவிர்த்துவிட்டு, இயற்கையான வழிகளை கையாண்டு குளிரை தடுப்பதற்கான குறிப்புகளை இங்கே காணலாம்.

**சரியான திரைகள் :**

மழை மற்றும் குளிர் காலங்களில் வீட்டுக்குள் குளிராக இல்லாமல் அறையில் வெதுவெதுப்பான வெப்ப நிலை இருக்க வேண்டுமானால் கச்சிதமான திரைகளை பயன்படுத்துவது அவசியம். சூரிய வெளிச்சம் வீட்டுக்குள் எந்தெந்த ஜன்னல்கள் வழியாக வருகிறதோ அவற்றை சரியாக தேர்ந்தெடுத்து, அங்கு மெல்லிய திரைகளை பயன்படுத்தலாம். மற்ற ஜன்னல்களுக்கு சற்றே கெட்டியான துணிகளால் ஆன திரைகளை பயன்படுத்துவது நல்லது.

**உறைகள் அவசியம் :**

விறாந்தை உள்ளிட்ட மற்ற அறைகளின் 'சோபா செட்கள்' ஆகியவற்றுக்கு கம்பளி அல்லது அழுத்தமான கொட்டன் துணியால் தயாரிக்கப்பட்ட மேல் உறைகளை பயன்படுத்தி மூடி வைக்க வேண்டும். அதன் மூலம் அவற்றை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தும் போது வெதுவெதுப்பாக இருக்கும்.

**ஜன்னல்கள் கவனம் :**

குளிர் கால இரவு நேரங்களில் சுற்றுப்புற வெப்ப நிலை குறைவாக இருப்பதோடு, குளிர் காற்றின் தாக்கம் எல்லா இடங்களிலும் பரவலாக இருக்கும். அதனால் மாலை நேரத்திலேயே ஜன்னல்களை மூடி வைத்துவிடுவது தான் பாதுகாப்பான வழியாக இருக்கும். அதன் மூலம் குளிர் காற்று உள்ளே வருவது தடுக்கப்படுவதோடு, அறைகளுக்குள் நிலவும் வெப்பமும் வெளியேறாமல் இருக்கும். வெளிப்புற வெப்பநிலை குறையும்போது அறையின் வெப்ப நிலையை பாதுகாக்க வெளிக்காற்று உள்ளே துளியும் வராதவாறு அழுத்தமாக ஜன்னல்களை மூடி வைக்க வேண்டும். கதவுகளை அடிக்கடி திறந்து மூடுவதாலும் வெளிப்புற காற்று அறைகளுக்குள் வரும் வாய்ப்பு இருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**தரைவிரிப்புகள் கவனம் :**

பனிக்காலங்களில் அறைகளுக்குள் வெறும் கால்களால் நடக்காமல் வீட்டுக்குள் உபயோகப்படுத்தும் 'ஸ்லிப்பர்' வகை செருப்புகளை பயன்படுத்தலாம். அதன் காரணமாக தரையின் குளிர்ச்சியானது சுலபமாக உடலுக்குள் கடத்தாமல் தடுக்கப்படும். மேலும் அறைகளுக்கு கச்சிதமாகவும், சரியான வண்ணத்துடனும் இருப்பது போன்று கெட்டியான கம்பளம் அல்லது தென்னை நாரால் செய்யப்பட்ட 'புளோர் மேட்' ஆகியவற்றை பயன்படுத்தலாம். குடும்ப உறுப்பினர்கள் அடிக்கடி புழங்கும் அறைகளிலும் கெட்டியான 'மேட்' விரித்து வைக்கலாம். அவ்வாறு செய்யும்போது உடல் வெப்பத்தை தரைத்தளம் உறிஞ்சி விடாமல் பாதுகாக்கப்படுகிறது.

**மெழுகுவர்த்திகள் ஏற்றலாம் :**

அதிக குளிராக உணரும் சமயங்களில் மெழுகுவர்த்தியை ஏற்றி வைக்கலாம். அதனால் குளிர்காலத்தில் ஏற்படும் மந்தமான சூழ்நிலை தவிர்க்கப்படுவதோடு, அறை வெளிச்சமும் வெப்பமும் கூடிய இடமாக இருக்கும். இம்முறை இயற்கையாக இருப்பதோடு அதிக செலவும் ஆகாத வழியாக இருப்பதால் சுலபமாக எல்லோருமே இந்த முறையை கையாண்டு குளிரை விரட்டியடிக்கலாம்.

## பொன் மொழிகள்

ஒருவன் கடவுளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால், கடவுள் அவனை நோக்கி, இருபது காதங்கள் எடுத்து வைப்பார்.
- ஈ ஆர்னால்ட்.

கடவுள் கொடுக்கத் தாமதம் செய்தால் அதைக் கடவுள் கொடுக்க மறுக்கிறார் என்று கொள்ளாதே.
- டிரையன் எட்வர்ட்ஸ்.

மனிதன் அறிவில்லாதவன். கண் இல்லாதவன். நாம் பிரார்த்தனையில் கடவுளைக் கேட்கும் சில விசயங்களை, அவர் நம் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாகக் கொடுக்காமல் இருப்பதால்தான். நாம் பிழைத்திருக்கிறோம். இல்லையானால், நம்மை நாமே அழித்துக் கொண்டிருப்போம்.
- ஹன்னா மோர்.

நான் வேண்டிக் கொண்டதையெல்லாம் கடவுள் எனக்குக் கொடுக்கவில்லையென்று நான் எத்தனை சந்தோசப்படுகிறேன். தெரியுமா?
- ஜீன் இங்கிலோ.

ஆத்மாவைக் கடவுளிடம் கொண்டு செல்லும் இறக்கைகள் பிரார்த்தனையாகும். கடவுளைக் காண நமக்கு உதவும் கண்கள் தியானமாகும்.
- அம்பிரோன்.

பிரார்த்தனைக்கு இதயம்தான் முக்கியமேயொழிய வார்த்தைகள் அல்ல. இதயமற்ற வார்த்தைகளால் பலனில்லை. ஆனால் வார்த்தையின்றி இதயத்தால் எவ்வளவோ சாதிக்க முடியும்.
- பனியன்.

நம்முடைய பிரார்த்தனையும் கடவுளுடைய அருளும் கிணற்றின் ராட்டையில் தொங்கும் இரண்டு வாளிகள் போலாகும். ஒன்று மேலே போகும் போது இன்னொன்று கீழே இறங்குகிறது.
- ஹாப்கின்ஸ்.

கடவுள் எங்கோ வெகு தொலைவில் இருக்கிறார். ஆனால் பிரார்த்தனையோ அவரை பூமிக்கு இழுத்துக் கொண்டு வருவதுடன் அவருடைய சக்தியையும் நம்முடைய முயற்சியையும் இணைக்கிறது.
- காஸ்பெரின்.

எனக்கு வேறு ஒரு வழியும் தென்படவில்லையானால் நான் உடனே முழந்தாளிட்டு கடவுளைப் பிரார்த்தனை செய்ய ஆரம்பிப்பேன். என் அறிவோ என்னைச் சுற்றி இருந்தவர்களின் அறிவோ என்னைக் காப்பாற்றும் என்று நான் என்றும் கருதியதில்லை.
- ஆபிரகாம் லிங்கன்.




# அவர் மேல் நம்பிக்கையில்லை

ஒரு பெரிய வியாபாரி ஒரு முறை கப்பலில் வெளிநாட்டிற்குப் பயணம் செய்தார். அப்போது அவரிடம் அதிக அளவில் பணமும் விலை மதிப்பில்லாப் பொருட்களும் இருந்தன. கப்பலில் அவருக்கு ஒரு அறை ஒதுக்கப்பட்டது. அவருடன் இன்னொருவருக்கும் அதே அறை கொடுக்கப்பட்டது.

அவர் பார்ப்பதற்குப் படுபயங்கரமாய் அவருக்குத் தெரிந்தார். ஆள் மிக பலசாலியாகவும், நல்ல உயரமாகவும், கருகருவென்று இருந்தார். வியாபாரிக்கு அவர் மீது சிறிது கூட நம்பிக்கை இல்லை.

அவரை நம்பி, அறையில் விலை உயர்ந்த பொருட்களை வைக்க அவருக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. எனவே கப்பலில் இருந்த பெட்டக அறைக்குச் சென்று பொறுப்பாளரிடம் "இந்த விலை உயர்ந்த என் பொருட்களை இங்கு பாதுகாப்பாக வைத்திருங்கள். என்னுடன் இருப்பவர் நம்பிக்கைக்குரியவராகத் எனக்குத் தெரியவில்லை' என்றார்.



பெட்டகக் காப்பாளர் சொன்னார், 'பரவாயில்லை, கொடுங்கள், நான் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன். ஆனால் ஒன்று, உங்கள் அறையில் உங்களுடன் வந்திருப்பவரும், சிறிது நேரத்திற்கு முன்பு, இங்கு வந்து நீங்கள் சொன்ன காரணத்தையே சொல்லி, அவருடைய பொருட்களை என்னிடம் பத்திரமாக வைத்திருக்கச் சொல்லி சென்றுள்ளார்" என்றார்.

# பிளாடிபஸ் என்னும் விலங்கு

வாத்தை போன்று தட்டையான அலகு. சவ்வினால் இணைந்த கால் விரல்கள் பீவரைப் போன்று வால் ஒட்டர் போன்று தோல் ரோமமம் பாம்பை போன்று விஷம் கொண்ட பல விலங்குகளின் தோற்றங்களை கொண்ட ஒரு விலங்கு பிளாட்டிபஸ்.

இதன் உடலமைப்பு மட்டுமின்றி வாழ்க்கை முறையும் விசித்திரமானது. ஏலிகளை போல மண்ணுக்குள் வளை பறித்து வாழும். மீன்களை போல தண்ணீரில் மணிக்கனக்காக நீந்தி உணவு தேடி உண்ணும்.



பாம்பு முட்டையை போல் மெல்லிய தோல் முட்டை இட்டு பறவைகளை போல் அடை காத்து பால் ஊட்கள் பொல் குட்டிகளுக்கு பால் கொடுத்து வளர்க்கும். இப்படி ஒரு அதிசய பிறப்பு இந்த பிளாட்டிபஸ்.1798ல் தான் இப்படி ஒரு உயிரினம் இருப்பதே உலகிற்கு தெரியவந்தது.



# பொக்கை வாயர் என்ன சொன்னார்

வயது முதிர்ந்து விட்ட அந்தத் துறவி ஒரு நாள் தனது சீடர்கள் அனைவரையும் அழைத்தார். அவர் தனது சீடர்களிடம், 'சீடர்களே... என் வாழ்வு இன்னும் சில நாட்களில் முடிந்து விடும். நான் உங்களுக்கு வாழ்க்கைத் தத்துவத்தைச் சொல்ல விரும்புகிறேன் என்றார்.

சீடர்கள் அனைவரும் அவர் என்ன சொல்லப் போகிறார்? என்பதைக் கேட்க ஆர்வமாக இருந்தனர். அவர் பல் எதுவுமில்லாத தனது பொக்கை வாயைத் திறந்து காண்பித்து 'இதுதான் வாழ்க்கைத் தத்துவம்' என்று சொல்லிவிட்டு அனைவரையும் அங்கிருந்து போகச் சொல்லி விட்டார்.

சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே ஒரு சீடனுக்கு மட்டும் தனது குரு பொக்கை வாயைத் திறந்து காண்பித்து, இதுதான் வாழ்க்கைத் தத்துவம் என்று சொன்னது சிறிதும் விளங்கவில்லை. பொக்கை வாய்க்குள் அப்படியென்ன வாழ்க்கைத் தத்துவம் இருந்து விடப் போகிறது என்று அவன் மிகவும் குழம்பிப் போனான். நாளை குருவிடமே இதைப் பற்றிக் கேட்டு விட வேண்டும் என்று அவன் முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் அவன் குருவைச் சந்தித்து தனது சந்தேகத்தைக் கேட்டான். குரு மீண்டும் அவரது பொக்கை வாயைத் திறந்து காண்பித்தார் . பின்னர் அந்தச் சீடனிடம், 'என் வாய்குள் என்ன இருந்தது...?' என்று கேட்டார்.

'சுவாமி, தங்கள் வாய்க்குள் நாக்கும் உள்நாக்கும் இருந்தன' என்றான் அவன்.

பல் இருந்ததா?'

'இல்லை...'

'அதுதான் வாழ்க்கை... வன்மையானது அழியும்... மென்மையானது வாழும்... இதுதான் நம் வாழ்க்கை...!'

## கொஞ்சம் சிரியுங்கள்



ஒருவன் உயரமான ஏணியிலிருந்து கீழே விழுந்து விட்டான். அவனை வீட்டுக்குள் தூக்கிச் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் டாக்டர் வந்து பரிசோதித்து விட்டு 'இறந்து விட்டான்' என்று சொன்னார்.

அடிபட்டவன் கண் விழித்துப் பார்த்துக் கொண்டே 'டாக்டர்... நான் உயிருடன்தான் இருக்கிறேன்' என்றான்.

அருகிலிருந்த அவனுடைய மனைவி, 'பேசாமல் இருங்க... டாக்டருக்குத் தெரியாததா உங்களுக்குத் தெரிந்துவிடப் போகிறது' என்றாள்.

## கருத்துக்கள் சில

பணத்தைச் சேர்ப்பதிலும் துன்பம், சேர்த்த பணத்தைக் காப்பதிலும் துன்பம்; அதை இழந்து விட்டாலும் துன்பம்; செலவிட்டு விட்டாலும் துன்பம். பணத்தால் எபோதும் துன்பமே உண்டாகிறது.

பழக்கிய யானைகளைக் கொண்டு காட்டு யானைகளைப் பிடிப்பதுபோல பணத்தைப் போட்டுத்தான் பணத்தை ஈட்ட வேண்டும்.

செல்வம் சேர்ந்தவனிடம் அகம்பாவம் சேரும். உணர்ச்சி வசப்படுபவன் ஆபத்தில் சிக்கிக் கொள்வான்.

தன்னிடம் குவிந்த செல்வத்தை, தானும் அனுபவிக்காமல், நற்காரியங்களுக்கும் செலவிடாமல் இருப்பவன் சுகம் பெற மாட்டான். அவன் பணம் படைத்த முட்டாள்.

சிங்கத்துக்கு அரசனாக முடிசூட்டு விழாவோ, சடங்குகளோ விலங்குகள் செய்து வைக்கவில்லை. தன்னுடைய பராக்கிரமத்தால் அல்லவோ சிங்கம் அரச பதவி வகிக்கிறது.

பலசாலிக்கு பாரம் என்று ஒன்றுஇல்லை, முயற்சி உடையவர்களுக்கு தூரம் என ஒன்று இல்லை; கல்வியாளர்களுக்கு அந்நிய நாடு என ஒன்று இல்லை; அன்போடு பேசுபவர்களுக்கு அன்னியன் என ஒருவரும் இல்லை.

சமய சந்தர்ப்பம் தெரியாமல் பிருகஸ்பதியே பேசினாலும் அவன் வெகுமதி பெறாமல் போவது மட்டும் அல்லாமல் வெறுப்பையும் தேடிக் கொள்கிறான்.

குதிரை, ஆயுதம், வீணை, சொல், புத்தகம், ஆண், பெண் இவை அனைத்தும் பயன்படுவதும், பயன்படாமல் போவதும் உபயோகிப்பவரின் திறனைப் பொறுத்து உள்ளது.

பிரம்மாவே பயமுறுத்தினாலும் தைரியசாலி தைரியத்தைக் கைவிடுவதில்லை. கோடை கால வெயில் குட்டையைத்தான் வற்றச் செய்யும். பெரும நதிகளோ, எப்போதும் பெருகி ஓடிக் கொண்டேயிருக்கும்.

நெருக்கடி இல்லாத சாதாரண காலத்தில் எல்லோரும் அறிவாளிகளாக இருக்க முடியும்.

அரசனின் அருகில் இருந்து ஊழியம் செய்பவன், நல்ல குடும்பத்தில் பிறக்காதவனாகவோ, மூடனாகவோ, கருணை இல்லாதவனாகவோ இருந்தாலும் அவனை எல்லோரும் மதிக்கிறார்கள்.

## விடுகதை


1. ராகத்துடன் பாடி வருவார் ராத்தூக்கம் கெடுப்பார். அவர் யார்?
2. காவி உடை அணியாத முனிவர்;கரை ஓரம் ஒற்றைக்காலில் தவம் செய்கிறார். அவர் யார்?
3. கருப்பு நிறத்துக்குச் சொந்தக்காரன்;கலகல பேச்சுக்காரன்;ஒருவருக்குத் துயர் என்றால் ஊரையே அழைப்பான்.அவன் யார்?
4. பறக்கும் இது பறவை இல்லை. ஆனால் இது அடையாளம் காட்டிக் கொடுத்து விடும். அது என்ன?
5. விழுந்தால் இது படுக்காது நிமிர்ந்து எழுந்தால் நிற்காது .இது என்ன?
6. தாகம் போக்கும் தண்ணீர் இல்லை. களைப்பைப் போக்கும் மருந்தும் இல்லை. சண்டைக்குச் செல்லும் இது ஆயுதமும் இல்லை. இது என்ன?
7. நீந்தத் தெரியும் மீனில்லை நடக்கத் தெரியும் மனிதனும் இல்லை; இறக்கை இருந்தும் பறக்காத பறவை நான் யார் தெரியுமா?
8. தொட்டால் மணக்கும்; கடித்தால் புளிக்கும். அறுத்துப் பிழிந்து தண்ணீர், சர்க்கரை சேர்த்து விட்டால் அடடா, சூப்பர் என்பார். யார் இது ?
9. முதுகில் சுமை தூக்கி முனங்காமல் வருவான்.மூச்சும் திணறாதுஇமுகமும் கோணாது. அவன் யார்?
10. ஒன்பது பிள்ளையானாலும் ஒரே குடுமிதான் எங்களுக்கு. நாங்கள் யார்?

*விடைகள்:*

*1. கொசு, 2. கொக்கு, 3. காகம், 4. கொடி. 5. தஞ்சாவூர் பொம்மை, 6. சோடா, 7. வாத்து. 8. எலுமிச்சை, 9. நத்தை, 10. வெள்ளைப்பூண்டு.*

## ஓடி ஓடிப் படிக்கணும்னு சொல்வார்கள். அதில் உள்ள சந்தோசமே தனி. அனுபவிக்க ரெடியானவர்கள் இல.1க்கு பார்வையைத் திருப்புங்கள்.

நிலவன்




**1**

பிறக்கும் போது நமது மூளையின் நிறை எத்தனை கிராம்? 350 என்பவர்கள் 12க்கும், 420 என்பவர்கள் 18க்கும், 335 என்பவர்கள் 7க்கும் செல்லுங்கள்...

**2**

சரியான பதில். உங்களுக்கான அடுத்த கேள்வி 08 இல் தயாராய் உள்ளது...

**3**

கரெக்ட். சோளம் தான் சரியான விடை. அடுத்த கேள்வி என்ன? வாருங்கள் 13ற்கு...

**4**

தவறு. 20ற்குச் செல்லுங்கள். சரியான பதில் தெரிந்துவிடும்...

**5**

உங்கள் விடை தப்பாச்சே. சரியான விடையை 16இல் சென்று சந்தியுங்கள்...

**6**

மனிதனால் முதலில் பயிரிடப்பட்ட பயிர் எது தெரியுமா? சோளம் எனின் 3க்கும், அரிசி எனின் 9க்கும், கோதுமை எனின் 15க்கும் செல்லலாமே...

**7**

முதல் கேள்வியே ஆட்டம் காட்டி விட்டதே. பரவாயில்லை. 12க்குச் செல்லுங்கள். விடை தெரிந்துவிடும்...

**8**

நாம் அதிகம் பழகிய வெங்காயத்தில் அதிகமுள்ள வைட்டமின் என்ன? விட்டமின் "ஏ" எனின் 5க்கும், வைட்டமின் "பி" எனின் 16க்கும், வைட்டமின் "சி" எனின் 19க்கும் சென்று வாருங்கள்...

**9**

நாம் அதிகம் உண்கிறோம் என்பதால் இதுவே விடையாகி விடாது. விடை 3இல்...

**10**

தவறு. சரியான பதிலைத் தெரிந்து கொள்ள 2ற்குச் செல்லுங்கள்...

**11**

தவறு. 6கி.மீ தான் சரியான பதில். அடுத்த கேள்வி 17இல் உங்களுக்காகவே...

**12**

சரியான பதில் 350 தான். இப்போது 6க்குச் செல்லுங்கள் பார்க்கலாம்...

**13**

ஒரு மின்னலின் சராசரி நீளம் எவ்வளவு? 4கி.மீ என்பவர்கள் 4க்கும், 5கி.மீ என்பவர்கள் 11க்கும், 6கி.மீ என்பவர்கள் 20க்கும் வாருங்கள்...

**14**

தவறு. சரியான பதிலைத் தெரிந்து கொள்ள 2ற்கு விரையுங்கள்.

**15**

கோதுமை சரியான பதில் கிடையாது. 3ற்குச் சென்றால் விடை கிடைத்து விடுமே...

**16**

விட்டமின் "பி" சரியான பதிலே. உங்கள் அறிவுத்திறன் ஐந்திற்கு எத்தனை என்று கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த வாரம் இன்னும் ஐந்து கேள்விகளோடு சந்திக்கலாம்...

**17**

உலக ஓசோன் தினம் எப்போது என்று தெரியுமா? ஜனவரி 08 எனின் 10க்கும், செப்டெம்பர் 26 எனின் 2க்கும், ஜூலை 11 எனின் 14க்கும் விரையுங்கள்...

**18**

உங்கள் விடை தவறு. 350 தான் கரெக்ட். அடுத்த கேள்விக்கு நீங்கள் 6ஐ நாட வேண்டும்...

**19**

தவறான பதில். சரியான பதில் 16இல் காத்துக் கொண்டேயிருக்கின்றது...

**20**

6கி.மீ தான் சரியான பதில். அடுத்த கேள்வி 17இல் ரெடியாக உள்ளது...







# வயாவிளான் to மலேசியா
## தன்னம்பிக்கை பாடசாலை

எஸ்.நிதர்சன்

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நீண்டகாலம் அகப்பட்டிருந்த பாட சாலை போதிய வசதிகள் இல்லை. ஆனால் சாதித்து காட்டியிருக்கிறார்கள் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவிகள். தேசிய மட்டத்தில் சாதித்து இப்பொழுது சர்வதேச போட்டிகளிற்கு செல்ல காத்திருக்கிறார்கள்.

டிசம்பர் 26 30ம் திகதி வரை மலேசி யாவில் நடக்கவுள்ள தெற்காசிய நாடுகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகளில் 20 வயது பிரிவில் பங்குபற்றுவதற்காக வயாவிளான் மத்திய கல்லூரியின் தேவராசா லயன்சிகா, குகசீலன் றெஜினா ஆகியோரே மலேசியா செல்லவுள்ளனர்.

பாடசாலைகளிற்கிடையிலான தேசிய மட்ட போட்டியில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்களே மலேசியாவிற்கு பயணமாகவுள்ளார்கள். மலேசியா செல்லும் இலங்கை குழாமில் இடம்பிடித்தது பதினாறு மாணவிகள். அதில் லயன்சிகா, றெஜினா இருவருமே வடக்கிலிருந்து கலந்து கொள்கின்றனர்.

இடம்பெயர்வு வயாவிளான் மத்திய கல்லூரிக்கு ஏற்படுத்திய பாதிப்புக்கள் அனேகம். அதனால் நீண்டகாலமாக பாடசாலை பல நெருக்கடிகளை சந்தித்து வந்தது. ஆனால், அண்மையில் மீள்குடியேறிய பின்னர் மீண்டும் புதுமெருகு பெற்று சாதிக்க ஆரம்பித்துள்ளது.

தற்போது குணரத்தினம் பகிரதன் பாட சாலைக்கு நிரந்தர உடற்கல்வி ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளார்.

போதிய வளங்கள் இல்லாத நிலையிலேயே மாணவிகள் சாதித்துள்ளனர். பாடசாலையில் பளுதூக்கலிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகளை சுன்னாகத்திலுள்ள பளுதூக்கல் பயிற்சியாளர் சுந்தரம் கவிகரனிடம் அழைத்து சென்று பயிற்சியளித்துள்ளனர். இன்றுவரை அவரது பயிற்சி தொடர்கிறது. கவிகரன் பயிற்சிகளை இலவசமாகவே வழங்கி வருகிறார் என்பதை குறிப்பிட வேண்டும்.

பாடசாலையிலிருந்து சுன்னாகம் சென்று பயிற்சிபெற்றுவருவதில் சிக்கல்கள் இருந்தா லும், மாணவிகள் உற்சாகத்தை கைவிடாமல் பயிற்சிகளை பெற்று வருகிறார்கள். பாட சாலையிலேயே பயிற்சி நிலையமொன்றை அமைக்க முயற்சித்து வருவதாக அதிபர் ரி.ஜயந்தன் கூறினார்.

இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில்தான் இந்தப்பாடசாலையில் பளுதூக்கல் அறிமுகப்பட்டுத்தப்பட்டுள்ளது. எனினும், குறுகிய காலத்திலேயே தேசிய மட்டத்தில் சாதித்து சர்வதேச போட்டிகளிற்கு செல்ல மாணவர்கள் தயாராகியது பாராட்டப்பட வேண்டியதே. பளுதூக்கல் போட்டிகளில் ஐந்து மாணவிகளும், இரண்டு மாணவர்களும் இந்த பாடசாலையிலிருந்து கலந்து கொள்கிறார்கள்.

இதுவரை நடந்த போட்டிகளில் இந்த மாணவர்கள் பளுதூக்கலில் 20 பதக்கங்களை யும், வலுத்தூக்கலில் 4 பதக்கங்களையும் அள்ளியுள்ளனர். எஸ்.குஜனி, எஸ்.வக்சனா, கு.றெஜினா, தே.லயன்சிகா ஆகிய மாணவிகள் தொடர்ந்து சாதித்து வருகின்றனர்.

மலேசியா செல்வதற்கு ஒரு மாணவிக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரை செலவாகிறது. இரண்டு மாணவிகளிற்கும் மூன்று இலட்சம் தேவை. இதனை செலுத்த முடியாமல் பாடசாலை நிர்வாகம் திணறி வருகிறது. இந்த மாணவிகளும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள். யாரும் உதவிசெய்யும் மனப்படைத்தவர்கள் கைகொடுத்தால் இந்த மாணவிகள் இன்னும் உயரம் தொடுவார்கள் என்பது நிச்சயம்.

மலேசியா செல்லும் மாணவிகள் வெற்றியுடன் திரும்ப நாமும் வாழ்த்து கிறோம்!

# தீபனின் அதிருப்தி!




பீஷ்மர்

பாலராஜிற்கு ஏற்பட்டதை போன்ற அனுபவம் ஒன்று தீபனிற்கும் ஏற்பட்டது. அது 2009 இன் தொடக்கம். யுத்தம் வன்னியை இறுக்கத் தொடங்கி, புலிகளிற்கு என்ன செய்வதென தெரியாத இக்கட்டான சந்தர்ப்பத்தில் ஏற்பட்டது. அந்த சம்பவத்திற்கு முன்னர், சில பின்னணி தகவல்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அரசுக்கும் புலிகளிற்குமிடையிலான சமாதான உடன்பாடு முறிவடைந்தபோது புலிகள் இரண்டு முனைகளில் களங்களை திறந்தார்கள். ஒன்று, சம்பூரில். மற்றையது யாழை குறிவைத்து முகமாலை, கிளாலி முனைகளில். சம்பூரில் சிறிய முன்னேற்றத்தை புலிகள் கண்டார்கள். ஆனால் பின்னர் இராணுவம் அதனை முறியடித்தது. யாழ் நோக்கிய நகர்வில் எதுவும் நடக்கவில்லை.

2006 நடுப்பகுதியில் யாழ்ப்பாண குடாநாட்டை கைப்பற்றுவதற்கான திடீர் தாக்குதல் ஒன்றை புலிகள் மேற்கொண்டனர். முகாலை தொடக்கம் கிளாலி, சங்குப்பிட்டி வரையான இராணுவ முன்னரண்களை தகர்த்து ஊடறுக்க புலிகள் முயன்றனர். சங்குப்பிட்டி பகுதிக்கு அண்மையில் மகளிர் அணியொன்றுதான் ஊடறுத்து உள்நுழைந்தது. வேறெந்த முனைகளிலும் புலி


தளபதி தீபன்

களால் உள்நுழைய முடியவில்லை. ஊடறுத்து உள்நுழைந்த மகளிர் அணியும் பேரழிவை சந்தித்தது. புலிகள் கிட்டத்தட்ட ஒரு வாரமாக முயன்றும் இராணுவ முன்னரணை உடைக்க முடியவில்லை. உண்மையில் புலிகளின் அந்த முயற்சி ஒரு விசப்பரீட்சை. புலிகள் எடுத்த தவறான இராணுவ முடிவுகளில் ஒன்று. பலனில்லாத அந்த யுத்தத்திற்கு செலவிட்ட ஆளணி, ஆயுததளபாடங்களை சேமித்திருந்தால் அல்லது சாதகமான வேறொரு முனையில் தாக்குதல் நடத்தியிருந்தால் வேறுவிதமாக சூழ்நிலைகள் மாற்றமடைந்திருக்கும். புலிகளிற்கான ஆயுததளபாட வரவு கடல்மார்க்கமாக தடுக்கப்பட்டிருந்தது. ஆளணி பற்றாக்குறை நிலவியது. யாழ்ப்பாண யுத்தத்தை நடத்தினால் இராணுவத்திற்கு பேரழிவை ஏற்படுத்தி ஆயுததளபாடங்களை பெற்றுக்கொள்ளலாமென நினைத்தார்கள்.

ஆனால் முகமாலை முன்னரண் யாராலும் கடக்க முடியாதது என்பதே உண்மை. இராணுவம் அதற்கு முன்னர் பலமுறை முயன்று கையை சுட்டுக் கொண்டது. முகாமாலையிலுள்ள புலிகளின் அரண்களை உடைத்து உள்நுழைய இராணுவம் தன்னால் இயலுமானவரை முயற்சி செய்துவிட்டுத்தான் கைவிட்டது. அதன்பின்னர்தான் புலிகள் கையை சுட்டுக்கொண்டார்கள்.

முகமாலை பகுதி குறுகியது. கேந்திர முக்கியத்துவம் மிக்கது. அதனால் இரண்டு தரப்பும் நெருக்கமாக, பலமான முன்னரணை அமைத்திருந்தன. மன்னார் பகுதி போன்ற பரந்தமுனையென்றால் ஒரு பகுதியில் முடியாவிட்டால் இன்னொரு பகுதியால் முயன்று நுழையலாம். முகமாலையில் அது முடியாது. இரண்டு தரப்பும் முன்னரணிற்கு முன்பாக கண்ணிவெடி வயலை உருவாக்கி வைத்திருந்தன. அதனைவிட, இரண்டு தரப்பு முன்னரணிற்கும் முன்பாக வெளியான பிரதேசம் இருந்தது.

வன்னி மீதான யுத்தத்தின் வெற்றியென்பது கிளிநொச்சி, முல்லைத்தீவை கைப்பற்றுவதே. 2006இல் இராணுவம் நிலைகொண்டிருந்த பகுதிகளிலிருந்து பார்த்தால், இந்த இரண்டு இடங்களிற்கும் நெருக்கமாக இருந்தது யாழ். முன்னரண்தான். ஆனால் இராணுவம் இறுதி யுத்த நகர்வை யாழில் இருந்து செய்யவில்லை. பலநூறு மைல்களிற்கு அப்பாலிருந்த மன்னாரின் எல்லையிலிருந்து ஆரம்பித்தது.

அது ஏன்?

இலங்கை இராணுவத்தில் திறமையான அதிகாரிகள் முன்னணிக்கு வந்ததன் விளைவது. வழக்கமாக இப்படியான சந்தர்ப்பங்களில் முகமாலையிலிருந்து நான்கைந்து முறை முயன்று பார்த்துவிட்டு, முடியாதப்பா என இராணுவம் இருந்துவிடும். ஆனால் இம்முறை புலிகளை அழிப்பதில் மிக கவனமாக திட்டமிட்டு படைநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.



அப்போதைய இராணுவதளபதி சரத் பொன்சேகாவும், வன்னி கட்டளை தளபதி ஜகத் ஜெயசூரியவும்

முதலாவதாக, முகமாலையிலிருந்து நகர முடியாதென்பது இராணுவத்திற்கு மிக தெளிவாக தெரியும். ஏற்கனவே முயன்று பார்த்து தெரிந்து கொண்டுவிட்டது. அதனால், மன்னாரிலிருந்து நடவடிக்கையை ஆரம்பித்தது. மன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட படைநடவடிக்கைக்கு மூன்று நோக்கங்கள்.

ஒன்று, புலிகளின் ஆளணியை சிறுகச்சிறுக அழிப்பது. மன்னாரில் தள்ளாடியிலிருந்து இராணுவத்தின் 58வது டிவிசன் நகர்வு ஆரம்பித்து மடு, பெரிய பண்டிவிரிச்சான், பாலமோட்டை, அடம்பன் பகுதிகளில் யுத்தம் மிகநீண்ட நாட்கள் நீடித்தது. அந்த யுத்தங்களில் அதிக தூரம் கைப்பற்றும் ஆவலெதுவும் இராணுவத்திடம் இருக்கவில்லை. தினமும் சிறிய முன்னகர்வு, புலிகளின் அணிகளை வெட்டி (ஙிளிஙி) அடித்தல்தான் இராணுவத்தின் நோக்கம். தினமும் யுத்தம். இறந்த போராளிகளின் உடல்கள் கிளிநொச்சிக்கு வரிசையாக வரத் தொடங்கியது.

ஆரம்பத்தில் இராணுவம் முன்னகர முயல்வதை போல காட்டினாலே புலிகள் தீவிரமாக போரிட்டனர். பின்னர்தான் இராணுவத்தின் உத்தியை புரிந்து கொண்டார்கள். புலிகளின் கோட்டையான கிளிநொச்சி, முல்லைத்தீவிற்குள் நுழைவதற்கு முன்னரேயே எல்லையோரத்தில் புலிகளின் ஆளணியை சிறிதுசிறிதாக அழித்துவிடுவது படையினரின் நோக்கங்களில் ஒன்று.

அடுத்தது, மேற்கு கரையோரமாக தமிழகத்


58 வது டிவிசன் தளபதி சவேந்திர சில்வா

துடன் கொண்டிருந்த பின்தள தொடர்பை நிறுத்துவது.

மற்றையது, முகமாலை புலிகளின் முன்னரணை அப்புறப்படுத்துவது. முகமாலை முன்னரணிலிருந்து கிட்டத்தட்ட 150 மைல்கள் அப்பாலிருந்து படையினர் நகர்ந்து வந்து, அதனை பின்பக்கமாக தாக்கி அகற்ற திட்டமிட்டார்கள். முகமாலை முன்னரண் அகற்றப்பட்டால்தான் யாழில் குவிக்கப்பட்டிருந்த போரிடும் ஆற்றலுள்ள 40,000 படையினர் வன்னியை நோக்கி முன்னகர்த்தப்படலாம். (முகமாலையிலிருந்து புலிகள் பின்வாங்கியதன் பின்னர் நாகர் கோவிலை மையமாக கொண்டிருந்த 55வது டிவிசனும், முகமாலையில் நிலை கொண்டிருந்த 53வது டிவிசனும் முன்னகர ஆரம்பித்தனர்) முகமாலை புலிகளின் அரணை உடைக்க முடியாமல் மன்னாரிலிருந்து படை நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டியிருந்ததெனில், அந்த நிலைகளின் இறுக்கத்தை கற்பனை செய்துகொள்ளுங்கள்.

முகமாலை உள்ளிட்ட வடபோர்முனை கட்டளைத்தளபதியாக செயற்பட்டவர் தீபன்.

மன்னாரிலிருந்து முன்னகர்ந்த இராணுவம் 2009 ஜனவரி முதலாம் நாள் பரந்தன் சந்தியை எட்டிவிட்டது. முகமாலை உள்ளிட்ட வடபோர்முனை முன்னரணிற்கு நேரடியான தரைப்பாதை துண்டாடப்பட்டுவிட்டது. அதற்காக அனைத்துவழிகளும் துண்டாடப்பட்டு முற்றுகைக்குள் சிக்கிவிட்டார்கள் என்று அர்த்தமல்ல. வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்தின் ஊடாக பாதை இருந்தது. அப்போது மாரிகாலம் என்பதால் சுண்டிக்குளம் கடற்கரையையொட்டிய பாதை சிறிது தூரத்திற்கு கடலுடன் இணைந்திருந்தது. சுமார் ஒரு கிலோமீற்றர் கடல்வழி பயணமிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து படையினர் முன்னகர முடியாது. பரந்தனிற்கு வந்த இராணுவத்தினர் ஆனையிறவு பக்கமாக நகரவிடாமல் இன்னொரு அரண் அமைத்துவிட்டு, அந்த பகுதியை தக்கவைக்கலாமென தீபன் நினைத்தார். ஆனால், திடீரென அணிகளை பின்னகர்த்துமாறு தலைமைபீடம் கட்டளையிட்டது.

தீபன் அதிர்ந்து போனார். முகமாலையை தக்கவைத்திருப்போம் என்பதே அவரது நிலைப்பாடு. தலைமையும் அதே முடிவைத்தான் எடுக்கும் என தீபன் நம்பியிருந்தார். ஆனால் தலைமை வேறு முடிவெடுத்தது. இந்த முடிவு தீபனிற்கு சிறிதும் விருப்பமில்லை.

(தொடரும்)



சீனாவின் நான்ஜிங் பகுதியில் யாங்ட்ஸீ ஆற்றின் பாலம், உலகில் தற்கொலை செய்துகொள்ளும் பிரபலமான இடங்களில் ஒன்று. சென் சி வார இறுதி நாட்களில் இந்தப் பாலத்துக்கு வருகிறார். தற்கொலை செய்யப் போகிறவர்களைக் காப்பாற்றுகிறார். கடந்த 13 ஆண்டுகளில் 300 உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார். "என் குடும்பத்தின் பிரிவைத் தாங்க முடியாமல் தற்கொலைக்கு முயன்றேன். அப்போது ஒரு முதியவர் என்னைக் காப்பாற்றினார். சில மாதங்களுக்குப் பிறகு அந்த முதியவர் தற்கொலை செய்துகொண்டதாக அறிந்து, அதிர்ந்து போனேன். இந்த மரணம் என்னை வெகுவாகப் பாதித்தது. இனிமேல் தற்கொலைகளைத் தடுக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். 25 கி.மீ. தூரத்தில் இருந்து வார இறுதி நாட்களில் இங்கே வந்துவிடுவேன். பைனாகுலருடன் பாலத்தில் நிற்பவர்களைக் கவனிப்பேன். விரக்தியோடு ஆற்றைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களை அழைத்துப் பேசுவேன். அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வேன். என்னுடைய ஆறுதலும் நம்பிக்கையான வார்த்தைகளும் அவர்களின் மனத்தை மாற்றும். பணம் இல்லாதவர்களுக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைப்பேன். இதுவரை 300 உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறேன். என் காலம் இருக்கும்வரை இந்தப் பணியைச் செய்வேன்" என்கிறார் சென் சி.



சீனாவின் ஜு கிங்வா, சிறுநீரகக் கற்களை அகற்றுவதற்குப் புதிய கட்டில் ஒன்றை உருவாக்கியிருக்கிறார். ஜு கிங்வாவின் மனைவிக்குச் சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்டு, இடது சிறுநீரகம் அகற்றப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு வலது சிறுநீரகத்தில் கற்கள் இருந்ததைக் கண்டுபிடித்தனர். ஏற்கெனவே ஒரு சிறுநீரகத்துடன் இருப்பவருக்கு, அறுவை சிகிச்சை மூலம் சிறுநீரகக் கற்களை அகற்றுவது ஆபத்து என்பதால், இயற்கையான முறையில் கற்களை அகற்ற வேண்டும் என்றும் தினமும் சில நிமிடங்கள் தலைகீழாக நின்றால் கற்கள் இடம் மாறும் என்றும் ஆலோசனை வழங்கினார்கள் மருத்துவர்கள். தானே ஒரு புதுவிதமான கட்டிலை உருவாக்கினார் ஜு கிங்வா. மனைவியைப் படுக்க வைத்து, கட்டிலோடு சேர்த்துக் கட்டினார். டிராக்டர் இன்ஜின் மூலம் கட்டிலுக்கு அதிர்வுகளை உண்டாக்கினார். கட்டில் மேலும் கீழும் செல்லும்போது சிறுநீரகக் கற்கள் இடம்பெயர்ந்தன. 'இந்தக் கண்டுபிடிப்புக்கு 10 ஆயிரம் ரூபாய் செலவு ஆனது. கட்டில் மேலும் கீழுமாகச் சுற்றி வரும். கட்டிலும் அதிரும். தினமும் 10 நிமிடங்கள் என்று 5 நாட்கள் என் மனைவி கட்டிலில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். வலியின்றி சிறுநீரகக் கற்கள் வெளியேறிவிட்டன' என்கிறார்.

டென்மார்க் கட்டுமான நிறுவனம் ஒன்று சூழலுக்கு உகந்த, விலை குறைந்த குடியிருப்புகளை உருவாக்கி வருகிறது. இதன் ஒரு கட்டமாக, வசதி இல்லாதவர்களுக்காகவே புதுமையான மிதக்கும் கெண்டெய்னர் குடியிருப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். துறைமுகங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் குடியிருப்புகளில் மாணவர்களே அதிகம் தங்கியிருக்கின்றனர். 'ஒரு கெண்டெய்னரில் 12 பேர் தங்கலாம்'.






திருவனந்தபுரம்: பிரதமர் நரேந்திர மோடி பதவி விலகும் வரை பாதி முடிதான் வைத்துக் கொள்ளப்போவதாக கேரளா மாநிலத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் நூதனப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்.



கியூபாவில் மீன்களைப் பிடிப்பதற்கு ஆணுறைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். பொதுமக்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவில் இருந்து வருவதையோ, கியூபாவில் இருந்து செல்வதையோ தடுப்பதற்காக ஹவானா கடல் பகுதியில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தடை செய்யப்பட்ட கடல் பகுதியில்தான் விலை மதிப்புமிக்க, மிகப் பெரிய மீன்கள் காணப்படுகின்றன. 900 அடி தூரத்தில் இருக்கும் மீன்களைப் பிடிக்க கடலுக்குள் இறங்க முடியாது. அவற்றைப் பிடிப்பதற்காக மக்களே 'பலூன் மீன் பிடிப்பு' என்ற புதிய வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆணுறைகளை வாங்கி, பலூன் போல பெரிதாக ஊதுகிறார்கள். 5 பலூன்களை ஒரு மெல்லிய கம்பியில் கட்டுகிறார்கள். கொக்கியில் மீனுக்கான உணவையும் வைக்கிறார்கள். மிகப் பெரிய தூண்டில் கம்பியில் பலூன்கள் கட்டிய மெல்லிய கம்பியை இணைக்கிறார்கள். கரையில் அமர்ந்து தூண்டில் போடுகிறார்கள். மெல்லிய கம்பியை, பலூன்கள்தான் 900 அடி தூரத்துக்கு காற்று மூலம் இழுத்துச் செல்கின்றன. உணவைப் பார்த்து வரும் மீன்கள் தூண்டிலில் மாட்டிக்கொள்கின்றன. மெதுவாகத் தூண்டிலைக் கரைக்கு இழுத்து, மீன்களை எடுத்துக்கொள்கிறார்கள்.



ஜீன்ஸ் அணிபவர்கள் சூழலுக்கு எதிரானவர்கள் என்று சொன்னால், உங்களுக்கு கோபம் வரலாம். ஆனால் கோபப்படுவதற்கு முன் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்பதன் பின்னுள்ள உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் அணியும் நீல நிற ஜீன்ஸின் உருவாக்கத்தில், அதன் இறுதிக்கட்டப் பணிகளுக்காக மட்டுமே சுமார் 45 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. நூற்றுக்கணக்கான மக்களின் ஒரு வருடக் குடிநீர் தேவைக்குச் சமமான அளவு இது. தவிர, இதில் பயன்படுத்தப்படும் தார்ச் சாயம், நச்சு வேதிப்பொருட்கள் காரணமாக, ஜீன்ஸ் விரைவில் மக்கிப் போகவும் செய்யாது. நல்ல 'ஷேடு' கிடைக்க வேண்டும் என்பதற்காக, இந்த உடை சூரிய விளக்குகளின் கீழ் வைத்துச் சில காலத்துக்குப் பராமரிக்கப்படுகிறது. அதில் வீணாகும் சூரிய எரிசக்தியின் அளவு அதிகம்.














இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 04.12.2016 அன்று வெளியிடப்பட்டது.